917

917

16 FEB 193
MADRAS

# தமிழரசு

மாசித் திங்கள்



# தமிழரசு

ஒவ்வொரு தமிழ் மாதம் முதல் தேதியும் வெளி வரும்.

## சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| வருடம் 1-க்கு தபாற்கூலி யுள்பட | இந்தியா, சிலோன் உள்நாட்டிற்கு | 1—0—0 |
| | பர்மா, பினங்கு சிங்கப்பூர், தென் ஆப்ரிக்கா முதலிய வெளி நாடுகளுக்கு | 2—0—0 |
| | ஜீவிய சந்தா | 20—0—0 |
| | தனிப் பிரதி விலை | 0—1—0 |
| | மலாய் நாட்டுக்கு 10 காசு அல்லது | 0---2---0 |

## சந்தா நேயர்களுக்கு

1. சந்தாத் தொகை முன் பணமாகவே மணியாடர் செய்ய வேண்டும். வீண் செலவு அதிகமாகிறபடியால் வி. பி. யில் அனுப்ப முடியாது.

2. விலாசம் மாறும் சந்தாதாரர்கள் புதிய விலாசத்தையும் சந்தா நம்பரையும் பத்திரிகை வெளியாவதற்கு ஒரு வாரம் முன்னதாகவே எழுத வேண்டும்.

3. பதிலுக்கு ரிப்ளை கார்டோ, தபால் தலையோ அனுப்ப வேண்டும்.

## கட்டுரை எழுதுவோருக்கு

1. கருத்தமைந்த கட்டுரைகள், ஹாஸ்ய வியாசங்கள், சிறு கதைகள் எளிய - இனிய நடையிலுள்ள பழைய - புதிய கவிதைகள், கலைகள் சம்பந்தமான கட்டுரைகள், நல்ல மொழி பெயர்ப்புகள், ஏற்றுக் கொள்ளப்படும்.

2. விஷயங்கள், நல்ல காகிதத்தில் ஒரே பக்கத்தில் தெளிவாக எழுதப்பட வேண்டும். சுருக்கமான விஷயங்கள் முன்னர் கவனிக்கப்படும்.

3. அனுப்பும் எல்லா விஷயங்களுக்கும் காப்பி வைத்துக் கொண்டே அனுப்ப வேண்டும். பிரசுரமாகாத விஷயங்களைத் திருப்பி அனுப்ப வேண்டுமானால் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

4. மதிப்புரைக்கு நூல்களும், மாற்றுப் பத்திரிகைகளும், வெளியிட வியாசங்களும் கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்ப வேண்டும்.

ஆசிரியர்,

'தமிழரசு'

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

OFFICE OF [illegible] TRAR OF BOOKS
16 FEB 1939
MADRAS

சென்னை

டாக்டர் மே. மாசிலாமணி முதலியாரவர்களுக்கு
சிவப்பிரகாச சுவாமிகளால் அருளப் பெற்ற
வரப்பிரசாதங்கள்.

பர்மாவில் சகலராலும் புகழ்ந்து
கொண்டாடப்படும் நவரத்தினங்கள்.

## இனி நீங்கள் கவலைப்பட வேண்டாம்

நீங்கள் பசியின்றிக் கஷ்டப்பட்டாலும், இருதய வியாதி, பித்த சோகை, வீக்கம், மதுமேகம், பாரிச வாய்வு, க்ஷய இருமல், சுரம் இவற்றில் எந்த நோயால் நீங்கள் பீடிக்கப்பட் டிருந்தாலும்,

# இன்பசாரம்

புருஷத் தன்மையைத் தரும்



புத்திர உற்பத்தியை யளிக்கும்

என்ற எங்கள் ஒப்பற்ற உயரிய மருந்தை வரவழைத்து உபயோகியுங்கள். உங்கள் நோய் உடனே பரிதி முன் பனிபோல் நீங்கி விடும்.

இன்பசார மாத்திரையை இரவில் படுக்கைக்குப் போகும் போது தூள் செய்து வாயில் போட்டுக்கொண்டு பால் சாப்பிட்டு வரின் பசி அதிகரிக்கும்; நரம்புகளுக்கு உணர்ச்சி ஏற்படும்; இரத்த விருத்தி யுண்டாகும். இம் மாத்திரையானது தங்கம் ஒன்றையே செந்தூரம் செய்து பவளம், முத்து, காரோபா முதலான சத்து வஸ்துக்களுடன் விதை தினுசுகளும் சேர்த்துத் தயார் செய்யப்பட்டது.

இன்பசாரம் ஆணுக்கு இழந்துபோன ஆண் தன்மையை அதிகரிக்கச் செய்வதோடு, இரு பாலர்களின் இச்சையையும் பூர்த்தி செய்து கொள்ள வேண்டிய வலிமையை அளிக்கும். நெடுநாள் குழந்தையில்லாத தம்பதிகளுக்குப் புத்திரசந்தானத்தையும் உதவும்.

இன்பசார மாத்திரையானது க்ஷய இருமலையும் சுரத்தையும் 10 நாளில் குறைத்து விடுகின்றது. க்ஷயரோகத்தைப் போக்குவதில் இதற்கு நிகரான மருந்து இல்லை என்பது நிச்சயம்.

இன்பசார மாத்திரைகள் ஒடிந்த எலும்பைக் கூட்டுவதிலும், சொர்ப்பன ஸ்கலிதத்தை நீக்குவதிலும், சரீரத்திலுள்ள இரணத்தை ஆற்றுவதிலும் சிறந்தது. நூற்றுக் கணக்கான நல்லுரைகள் பெற்றுள்ளது. ஒரே வேளையில் குணம் தெரியும்.

விளம்பர மருந்துகளைப்போல் இம்மருந்தை நினைத்தலாகாது. இதன் அரிய குணத்தை டாக்டர்களும், நோயாளிகளும் ஏராளமாக அனுபவித்துப் புகழ்ந்திருக்கிறார்கள்.

## இன்பசார மாத்திரையைப்பற்றிய சில நற்சாக்ஷிப் பத்திரங்கள்

### ஓர் அரிய சஞ்சீவி

14 வயதுள்ள பெண் குழந்தைக்குச் சன்னிபாத சுரமும், கபவாத சுரமும், அதிகரித்து அபாய நிலைமையில் இருக்கும்போது டாக்டர் மே. மாசிலாமணி முதலியாரிடத்தில் காண்பித்ததில் அபாயகரமான நிலையாயினும் இன்பசார மாத்திரையால் குணமடையும் என்று மூன்று மாத்திரை கொடுத்தார். முதல் மாத்திரை கொடுத்த அரைமணி நேரத்திற்கெல்லாம் 105 டிக்கிரி இருந்த சுரம் 102-க்கு இறங்கி விட்டது. மற்ற இரண்டு மாத்திரை கொடுத்ததும் 99-டிக்கிரிக்கு இறங்கி விட்டது. மீண்டும் சுரம் அதிகரிக்கவில்லை. பிறகு டாக்டர் காஞ்சிபுரம் உற்சவத்திற்குச் சென்றார். இப்போது குழந்தை சௌக்கியமாய் இருக்கின்றது. இன்பசாரம் என்னும் மாத்திரை ஓர் அரிய சஞ்சீவி எனவே சொல்லலாம்.

சாமி. வேங்கடேச பெருமாள் செட்டி.

## க்ஷயரோகம் நீங்கிற்று

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

என்னுடைய நாயகிக்கு ஏற்பட்டிருந்த க்ஷயரோகம் காரணமாய் அதிகமாய்க் காய்ந்துகொண் டிருந்த சுரமும், இருமலும் தங்கள் இன்பசாரம் என்னும் மாத்திரைகளில் சில புட்டி சாப்பிட்டவுடன் நீங்கிவிட்டது. இப்போது நிறையிலும் அதிகப்பட்டிருக்கின்றது. இருமலும், சுரமும் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டன. தங்களுடைய இன்பசார மாத்திரை ஆச்சரியகரமான மருந்து என்பதில் சந்தேகமில்லை. இதை க்ஷயரோகத்தால் துன்பப்படும் என்னுடைய சிநேகிதர்களுக்கும் சொல்லி வருகின்றேன்.

வி. ராமநாத ஐயர்,

7—5—32. கார்ட்டன் ஹூட்ராம் கம்பெனி, மதராஸ்.

---

## குழந்தை பிறந்தது

கனம் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

நான் இருபது வருஷமாக காசி, இராமேஸ்வரம் முதலான இடங்களுக்குச் சென்று, பல தானங்களைச் செய்தும் எனக்குப் புத்திர சந்தான மில்லாத காரணத்தால் தங்கள் மருந்தால் புத்திர உற்பத்தி யுண்டானல் இருபது ஆயிரம் கொடுப்பதாய் வாக்களித்தேன். தங்களுடைய இன்பசார மாத்திரையின் பெருமையை என்னென்று புகழ்வேன்.

எனக்கு உள்ள சொத்து ஒன்பதாயிரம் தாளக்கூடிய வீடு ஒன்றுதான். என்னிடம் வேறு பணங் கிடையாது. வேண்டுமானல் கிருஷ்ண அண்டு கம்பெனியாரையும், கங்கிபாட்டி சுப்பிரமணியம் செட்டியாரையும் கேட்டுக் கொள்ளுங்கள்.

தங்களுடைய மருந்தால் எனக்கு ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. இத்துடன் 4 சவரன் அனுப்பி யிருக்கிறேன். பெற்றுக் கொண்டு என்னை மன்னிக்கவும்.

தங்கள் அன்புள்ள,

தேவரப்பட்டு அப்பய்ய செட்டியார்.

கவனிப்பு:—இன்னும் அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் எங்களிடம் இருப்பினும் இடமில்லாமையால் சில மாத்திரம் இங்குக் குறிப்பிட்டோம்.

ஒரு மாதம் சாப்பிடக் கூடிய

**30 மாத்திரைகள் அடங்கிய புட்டி விலை ரூபா 5.**

# சகல மேக சித்தாதி எண்ணெய்

இந்த எண்ணெயைக் காலையில் ஒரு தேக்கரண்டி அல்லது அரை அவுன்சு எடுத்துக்கொண்டு ஆழாக்கு பசும்பாலில் கலந்து சாப்பிட வேண்டும். இரண்டு மூன்று தரம் மலம் தள்ளும். மேக வாய்வு, கைகால் பிடிப்பு, உடம்பு வலி நீங்கும். வயிற்றில் தங்கிய வாய்வையும் வெளிப்படுத்துவதுடன், பெண்களுக்குண்டாகும் சூதக வாய்வு, சூதக வலி, பித்த குன்மம், வெள்ளை வியாதி, மூலம், பவுத்திரம், குஷ்டம் இவைகளைப் போக்கும். வயிற்றிலுள்ள இரணங்களை ஆற்றும்.

இந்த எண்ணெய் சாப்பிடும்போது தயிர் சாதம் அல்லது மோர் சாதம் சாப்பிட வேண்டும். எண்ணெயை இரண்டு நாளைக்கு ஒரு முறை சாப்பிட வேண்டும். பாரிச வாய்வுக்கு இது உயர்ந்த எண்ணெய். வாத சரீரம் இளைத்துவிடும்.

## சில அபிப்பிராயங்கள்

திரு. டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

நான் ஒரு வருட காலமாய்ப் பல வைத்தியர்களிடம் எண்ணெய்களும், லேகியங்களும், ஆங்கில மருந்துகளும், இன்ஜெக்ஷன்களும் கொடுத்து என் மனைவிக்குச் சிகிச்சை செய்து ஒன்றும் பயன் படவில்லை. கடைசியில் சென்னைக் கோபாலாசாரியார் உங்களைப் பற்றிக் கூறினர். அவர் வார்த்தைக் கிணங்கி தங்களிடம் வந்து சகல மேக சித்தாதி எண்ணெயை வாங்கிக்கொண்டுபோய் 5-நாள் கொடுத்தேன். முதல் நாளிலேயே கணுக்களில் இருந்த மேக நீரி லுண்டான வீக்கங்கள் நீங்கிவிட்டன. மூன்றும் நாள் சம்பூரண சுகத்தைத் தந்தது. நீங்கள் கூறியபடி 3-ஆம் நாள் எண்ணெய் சாப்பிடும் வரையில் தயிரன்னத்தை இரவு பகலாகக் கொடுத்து வந்தோம். இப்போது என் மனைவி உலாவி வருகின்றுள். இனி என்ன மருந்து கொடுக்கலாம் என்பதைத் தெரிவிக்கவும்.

சென்னை
15—5—30

இப்படிக்கு,
அண்ணுவையங்கார்.

---

கனம் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

நான் ஒண்ணுக்குப் போகும்போது நீர் துவாரத்திலிருந்து இரத்தம் விழுந்து வந்தது. அதற்குத் தங்கள் சகலமேக சித்தாதி எண்ணெய் 3 வேளை சாப்பிட்டதில் பூரா குணம்பெற்றேன்.

இப்படிக்கு,
இராஜரத்தினம் செட்டி.

**டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,**

தங்கள் முன்னம் அனுப்பிய சகல மேக சித்தாதி எண்ணெயைச் சாப்பிட்டு என் வியாதி சௌக்கியமாய் நீங்கிவிட்டதற்காக நான் தங்களுக்கு மிகவும் நன்றியுள்ளவனு யிருக்கிறேன். இப்பவும் நமக்கு வேண்டியவர்களின் தேவைக்காக என் விலாசத்துக்கு சகல மேக சித்தாதி எண்ணெய் புட்டி 1 வி. பி. யில் அனுப்பி வைப்பதுடன் அனுபான பத்திய விவரமடங்கிய டைரக்ஷன் நோட்டீசும் அனுப்பி வைக்கவும்.

தங்களன்புள்ள,

கிருஷ்ணசாமி நாயகர்,

2—7—34. பாங்கி குமாஸ்தா, மேட்டுத்தெரு, ஆத்தூர்

சேலம் ஜில்லா.

இத்தகைய இன்னும் எண்ணிறந்த நற்சாட்சிகள் பெற்ற

**சகல மேக சித்தாதி எண்ணெய் புட்டி 1-க்கு விலை ரூ. 5.**

# தைலாமிர்தம்



இத் தைலம் பலவித உயர்ந்த பச்சிலைகளின் ரசமும் பசுவின் பால் கோரோசனை முதலான உயர்ந்த வஸ்துக்களும், மூளையைக் குளிரச் செய்யும் வித்துத் தினுசுகளும் மற்றும் பல கடைச் சரக்குகளும் சேர்த்துத் தயார் செய்யப்பட்டது.

இத் தைலத்தைத் தேய்த்து ஸ்நானம்செய்து வர, கண் எரிச்சல், கண் சிவப்பு, கண்ணில் நீர் வடிதல், கண் குத்தல், கண்ணில் பூ விழுதல், பார்வை மந்தம், கண் கூசல் முதலான சகல நேத்திர ரோகங்களையும், மூளைக் கொதிப்பு, தலை சுத்தல், மயக்கம், புத்தி மந்தம், சோம்பல் முதலானவைகளையும் நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியைத் தந்து, புத்தித் தீட்சண்யத்தை உண்டு பண்ணும். ஒத்தைத் தலைவலி, கழுத்து நரம்பு வலி, மண்டைக் குத்தல் இவைகள் போம். மூளையின் கொதிப்பால் உண்டாகும் பைத்தியம் நீங்கும்.

**5-பலம் கொண்ட டின் விலை ரூபா 1.**

# <u>இணையற்ற</u> அயத்தங்க திராவகம்



நண்பர்களே! இந்த மருந்தானது மலேரியா என்னும் விஷ சுரத்தினாலாவது அல்லது வேறு எந்த சுரத்தினாலாவது சரீரம் இளைத்து இரத்தம் குறைந்து சோகை போலும் வெளுத்துக் காணப்படும் இளைத்த தேகிகளுக்கு ஒரு ஆச்சரிய அபூர்வமெனவே காட்டும்.

இதைச் சாப்பிடுபவர்களுக்கு மயிர் கறுத்து வளரும்; பசியின்மை நீங்கும்; மலம் தாராளமாய்க் கழியும்; தாது விருத்தி உண்டாகும்; பரிசுத்த இரத்தம் பெருகும்; நல்ல பசியுண்டாகும்; முகம் வசீகரமாய்க் காணும்; மேனி சிவக்கும்; நரம்புகள் தடிக்கும்; பசி யதிகரிக்கும். இம்மருந்தைச் சாப்பிட்டவர்கள் வீரர்களாகவும், பலசாலிகளாகவும், இரத்த சுத்தியும், இரத்தப் பெருக்கும் பெற்று பித்த சோகை, பித்த பாண்டு, ஊதுகாமாலை, எலும்புருக்கி முதலிய நோய் நீங்கப் பெறுவார்கள்.

இம் மருந்தால் மலமும் தாராளமாய்க் கழியும். இம் மருந்தைச் சாப்பிட்டவர்கள் பயில்வான்களாவார்கள். திடகாத்திர புத்திரர்களைப் பெறுவார்கள்; இன்பத்தையும் அடைவார்கள்.

இம் மருந்தைப் பால்யர் முதல் வயோதியர் வரை ஆண் பெண் இருபாலர்களும்

எந்தக் காலத்திலும் சஞ்சீவியைப்போல் உபயோகித்து வரலாம். மக்கள் சுகம்பெற வெண்ணியே குறைந்த விலைக்கு விற்கப்படுகிறது.

**நான்கு மாதம் சாப்பிடக் கூடிய மருந்து விலை அணா 12.**

## அபிப்பிராயம்

அன்புள்ள உண்மை வைத்தியரே !

நான் அடைந்த சுகத்திற்கு என் ஆயுளுள்ளவரை உங்களை மறப்பது நீதியாகாது. என் உடல் மிகவும் மெலிந்திருந்தது; இரத்தம் வற்றியிருந்தது; சோம்பல் அதிகரித்திருந்தது; மயக்கம், அசதி, தூக்கம், செமியாகுணம் இவைகள் என்னை அடக்கியாண்டன. பல வைத்தியர்கள் என்னைக் கைவிட்டு விட்டனர். ஒரு பிரபல டாக்டர் இது உனக்கு முற்றிவிட்டது. இனி இதை நிவர்த்திப்பது மிகவும் கடினம்; ஆண்டவன் பிராப்திபடி நடப்பதே இனி ஆகக் கூடியது. நீ வைத்தியம், வைத்தியம் என்று ஏங்காதே! மனம் நாடிய சகல வஸ்துக்களையும் தின்று உன் ஜீவிய காலத்தை முடி. ஒருகால் இவ்வித வழியில் நீ சுகம் பெறலாம்; வைத்தியத்தினுல் பெற முடியாது!' என உபதேசித்தார். என் வாழ்க்கையே சமாப்தி அடைந்ததாக நான் அப்பொழுது எண்ணினேன்.

நிற்க, உங்கள் 'தமிழரசு' பத்திரிகை விளம்பரத்தைப் பார்த்து, உங்கள் 'அயத்தங்க திராவகத்'திற்கு 3 பாட்டில்களுக்குச் சென்ற 1933-ம் வருடம் நவம்பர் மாதம் ஆர்டர் கொடுத்தேன். அதை தாங்கள் உடனே அனுப்பினீர்கள். அந்த மருந்தை இந்த 1934-ம் வருடம் டிசம்பர் 6வ வரை சாப்பிட்டேன். அது எனக்குப் புத்துயிர் அளித்தது! புனர்ஜன்மம் கொடுத்தது' என்னை ஒரு வீரபுருடனுக ஆக்கியது. இப்போது நான் சரீர சுகஜீவியாய் இருந்து வருகிறேன். சரீர சம்பந்தப்பட்டமட்டில் உள்ள சுக அம்சங்கள் யாவும் எனக்கு உண்டாகி இருக்கிறது. நான் உங்களை வாழ்த்துகிறேன். உங்கள் குடும்பமும், மருந்தும் ஓங்குவதற்குக் கடவுளைப் பிரார்த்திக்கிறேன். எனது இந்திய சோதர சோதரிகள் இதை உட்கொண்டு நன்மை அடைவார்களாக!

G. M. அலிஹுஸைன் M. H. A.

கௌரவ காரியதரிசி, 'ஹுஸைனியா சங்கம்'

ஜெனரல் அட்வர்ட்டைசர், ஆர்டிகலிபெட் நாகூர் 26–12–34.

எமது விலாசம் :

**டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,**

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

# சௌமியன்

ஓர் இனிய

சினிமாக் கதை

207674

ஆசிரியர்:

பாரதிதாசன்

(காபிரைட்)

Tl
2411,N3:TA
N39.L.2

ஹிம்ஸையா?—அஹிம்ஸையா எது உபயோகமுள்ளது? உலகின் நிலை என்ன? அக்ரமம் ஜயிக்குமா?—இவைபற்றிச் சினிமா முறையில் இயன்ற ஓர் இனிய நாடகம்.—விலை அணா 6.

நூற்றுக்கணக்கில் வேண்டியவர்கள் விலை விவரம் எழுதித் தெரிந்து கொள்க.

விலாசம்:—

'தமிழரசு' புத்தகாலயம்,

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

# பொருள் அடக்கம்


| | | |
|---|---|---|
| தமிழர்களே என்ன செய்கிறீர்கள்? | .... | 82 |
| காந்தியடிகள் | .... | 85 |
| தமிழ் நாட்டில் புகுந்த ஆரியப் பிசாசே தமிழரின் திண்டாட்டத்திற்குக் காரணம் | .... | 86 |
| தமிழுக்கு உயிர் தந்த நடராசன் (பாட்டு) | .... | 89 |
| பொய்ம் மகள் | .... | 91 |
| மாதர்பகுதி—குடும்பம் (பாட்டு) | .... | 93 |
| சிதம்பர தரிசனம் | .... | 94 |
| 'நீ என்ன சொல்லுகின்றாய்?' | .... | 95 |
| பிள்ளையும் கிள்ளையும் (பாட்டு) | .... | 97 |
| சிறுவர் பகுதி—ஒற்றுமை உயிர் காக்கும் | .... | 99 |
| தூக்கமில்லை | .... | 102 |
| இத்தாலியும்—துருக்கியும் | .... | 105 |
| நகைச் சுவை | .... | 109 |
| சொப்பன உலகம் | .... | 112 |
| சினிமாப் பகுதி—சினிமாக் கலை சார்ந்த சிற்றுரை | | 119 |
| சாவித்திரியே கமலா | .... | 123 |
| 'ஐயையோ நானல்ல விடுங்கோ!' | .... | 131 |
| 'கோமதி! நான் உன் அடிமை' | .... | 137 |
| 'கனகராஜ் என் நாதன்!' | .... | 143 |
| இலங்கை | .... | 149 |
| சங்கீதப் பகுதி—சங்கீத வித்வானோடு | .... | 151 |
| வனிதா அல்லது கொலை யுண்ட காரிகை | .... | 153 |


குறிப்பு:—'தமிழா'சில் வெளி வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களாகும். அவை யாரையும் குறிப்பிடுவன வல்ல.

கட்டுரையாளர்களின் கருத்துக்களுக்கும், அபிப்பிராயங்களுக்கும் ஆசிரியர் ஒரு சிறிதும் பொறுப்பாளி யாகார்.

நம்பிப் பிரசுரிக்கும் கட்டுரைகள் முன்னரே உரிமை செய்யப்பட்டவை யாயின் அதற்குப் பத்திராதிபர் உத்தரவாதியாக மாட்டார்.

அன்பே ஆண்டவன்

# தமிழரசு

(மாத வெளியீடு)

'எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன்....'

ஆசிரியர் : டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்

| மலர் | வெகுதான்ய ௵ மாசி ௴ | இதழ் |
| --- | --- | --- |
| 10 | 1939 ௵ பிப்ரவரி ௴ 15 ௳ | 2 |

## தமிழர்களே என்ன செய்கிறீர்கள்?

தோழர் எஸ். சீனிவாச ஐயங்கார் அரசியல் பற்றித் தமது அபிப்பிராயத்தைக் கூறியிருக்கிறார் அதில். அவர் :

பூரண சுயராஜ்யம் அடைவதுதான் சரி. அரைகுறையான சுயராஜ்பம் பிரயோஜனமில்லை.

என்று கூறிய அவர், பூரண சுயராஜ்யத்தை அடையும் மார்க்கத்தையும் கூறியுள்ளார் அது வருமாறு :

நிதி நிர்வாகத்தைக் கைப்பற்றுவது. உடனே ராணுவ நிர்வாகத்தைக் கைப்பற்றுவது. இது மாத்திரமல்ல.

மாகாணத் தலைமையை அதாவது மாகாண கவர்னர்களின் அதிகாரத்தைக் கைப்பற்றி விடுவது. உடனே மத்திய சர்க்காரின் அதிகாரத்தைக் கைப்பற்றி விடுவது.

இது போதுமா? என்ன செய்ய வேண்டுமென்றால், சுதேச சமஸ்தானங்களின் பூரண அதிகாரம் சக்ரவர்த்தியாரிடமல்லவா இருக்கிறது; அதையும் பிடுங்கி விட வேண்டும். இவ்வளவுதான்.

இந்தச் சாதாரண சங்கதிகளைத் தாம் நிறைவேற்றி வைப்பதற்குத் தேசம் எப்படியிருக்க வேண்டும் என்று கேட்கிறீர்களா? அதற்கும் அவர் பதில் கூறுகிறார்.

இந்து முஸ்லீம் தகராறு கூடாது. இந்து முஸ்லீம் தகராறு சம்பந்தமான எழுத்து வார்த்தை அத்தனையும் பார்க்கவும் கேட்க

வும் முடியாதபடி செய்துவிட வேண்டும். இது மாத்திரமல்ல. பிராமணர் ஆரியர்—தமிழர் திராவிடர் என்ற பிரச்சினையே உள்ளத்தில் உருக் கொள்ளவும் கூடாது. வகுப்புவாதமே உச்சரிக்கப்படலாகாது.

இந்த நிலை ஏற்பட்டு விட்டால் மேற்சொன்ன அதிகாரம் அனைத்தையும் கைப்பற்றித் தீர்த்துப் பூரண சுயராச்சியத்தை ஸ்தாபித்து விடலாமா? முடியாதா?

ஆனால் இப்போதைய காங்கிரஸ் கொள்கை இதுவல்ல. முழுச் சுயராச்சியம் வேண்டாம். முக்காலே அரைக்கால் இருந்தால் போதும். இப்போது முக்கால் வாசி வந்துவிட்டது. இன்னும் அரைக்கால் தான் பாக்கி.

இதே சமயத்தில் வெள்ளைக்காரர்கள் என்ன நினைக்கிறார்கள் பார்ப்போம்.

காங்கிரஸ்காரர்கள் தியாகத் திருமேனிகள் என்றும், வெள்ளைக்காரர்களிடம் கொஞ்சம் கூடச் சலுகையை எதிர்பார்க்காத துறவிகள் என்றும், சத்தியசுந்தர்கள் என்றும், ஏமாந்த ஜனங்கள் நம்பி நம்பி மோசம் போய்க்கொண் டிருந்தார்கள். இப்போதுதான் காங்கிரஸ்காரர்கள் நமது வலையிற் சிக்கினார்கள். அவர்களின் நெல்லிக் காய் மூட்டைப் புத்தி வெட்ட வெளிச்சமாகிறது. காங்கிரஸ்காரர்களைவிட வெள்ளைக்காரர்களிடம் அடங்கி ஒடுங்கி நடந்து கொள்பவர்கள் வேறு ஒருவரும் அகப்படமாட்டார்கள் என்ற உண்மையும் வெளியாகி விட்டது. காங்கிரஸ்காரர் இடும் பதவிப் போர் உச்ச நிலை அடைந்துவிட்டது. காங்கிரஸ்காரர்களின் ஜாதி யிறுமாப்பும், வகுப்பு வாதப் பைத்தியமும், பொதுஜனங்களில் சிறு பிள்ளைக்கும் கிராமத்துக் கிழவிகட்கும் புரிந்து வருகிறது. அண்டை வீட்டுக்காரனை வஞ்சம் தீர்த்துக் கொள்வதேதான் காங்கிரஸ் தியாகமூர்த்திகளின் நோக்கம். உத்தியோகத்தைக் கைப்பற்றுவதில்தான் சுயராஜ்ய வாதிகளின் உயிர் நாடிகள் தவங்கிடக்கின்றன.

இவ்வாறு வெள்ளைக்காரர்கள் நினைப்பதோடு நில்லாமல், காங்கிரஸ்காரர்கள் தமக்கு, பங்கா இழுப்பவர்களாகி விட்டார்கள். என்பதை உலகம் அறிந்து கொள்ளும்படி செய்துவிட்டு, 'தொலைந்தது காங்கிரஸ்' இனி வரும் எதிர்ப்பு ஸ்தாபனங்களைப்பற்றிப் பின்னால் பார்த்துக் கொள்ளலாம் என்று அமைதியோடும் ஆநந்தத்தோடும் இருக்கலாம் என்று முடிவு கட்டுகிறார்கள். வேறென்ன? போதாக் குறைக்கு, தோழர் சுபாஷ்பாபு காங்கிரஸில் பெரிய பாணு, சுழற்ற ஆரம்பித்து விட்டார்.

தமிழ் நாட்டு மக்களே, நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் ?

எஸ். சீனிவாச ஐயங்காருடன் கூடிக்கொண்டு நாளேக்காவது அதன் மறுநாளாவது பூரண சுயராஜ்யத்தை வாங்கிக்கொண்டு ஓடி வந்து விடப் போகிறீர்களா? அல்லது காங்கிரஸ்—காந்தீயத்தின் சம்பந்தத்தால் இருக்கும் முக்கால் சுயராஜ்யத்தோடு, சொச்சம் அரைக்காலேயும் வாங்கி மடியில் கட்டிக்கொண்டு வரப் போகிறீர்களா? இரண்டில் எதைச் செய்யப் போகிறீர்கள்?

உங்கள் கருத்தில் இன்னொரு விஷயமும் தோன்றலாம். தோழர் ஜீவாநந்தம் கட்சியில் சேர்ந்து, ஒரு நல்லநாள் பார்த்து சோஷலிசக் கொடியைப் பறக்கவிட உத்தேசமா? இதற்கு அதிகம் செலவு கிடையாது. ஒன்றரைக் கஜம் துணிதான் செலவு.

இன்னொரு கொள்கை நாட்டில் இருக்கிறது. அதிலும் அநேகர் சேர்ந்து சேவை செய்து வருகிறார்கள். சனாதனிகள் சங்கத்தில் சேருங்கள். யார் வேண்டாம் என்கிறார்கள். அவர்கள் திட்டங்கூட உங்களே மேம்பாடு அடைய வைக்கலாம். பூலோகம் பிரம்மாவால் சதுர்வித வர்ணமாகப் படைக்கப்பட்டது. அதாவது பிராம்மணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்று இந்தக் காலத்திலோ எனில், பிராம்மணிய மாத்திரந்தான் இருக்க வேண்டும்............... இப்படி யாரம்பித்து வடகலே நாமம் போடுகிறவன் போட்டுக் கொண்டே இருக்க வேண்டும். தென்கலே நாமமும் அவ்வாறே. இடையில் தகராறுகள் இருப்பது சகஜம். நாமம் விபூதிகளில் எது பெரிது என்ற சண்டையைப்பற்றி நமக்குள்ளே இலேசாகத் தீர்த்துக் கொள்ள வேண்டும். பஞ்சமரை ஒதுக்க எல்லாரும் ஒத்திருக்க வேண்டும். ஐயர் காலில் விழ ஆருக்கும் ஆக்ஷேபம் இருக்கப் படாது. மற்றப்படி இந்த உலகம் மாயை. எல்லாம் நிலேயற்றது. பிராம்மணன் மாத்திரம் இந்த உலகத்தையும்—கொடுக்கிறமுண்ட மிருந்தால்—தானமாகக்—கொள்ளுவதற்கு லாயக்குடையவன்.

இதைவிடத் தமிழர்கட்கு என்ன வேண்டும். சும்மா இருந்தால் எப்படி யாகிறது? எந்த இயக்கத்திலாவது சேர்ந்தால்தானே. காலம் வீணுகிறதல்லவா? இன்னும் எத்தனே பேர் பார்ப்பனர்களில் வேலேயில்லாமல் இருக்கிறார்கள் தெரியுமா? நீங்கள் சும்மா இருக்கலாகாது.

தமிழ்நாடு தமிழருக்கே என்று கூச்சல் இடுகிறீர்கள். இது என்ன குள்ள புத்தி! வீடு பற்போனுலென்ன? அகில இந்தியப் பிரச்சினே அல்லவா பெரிது!

தமிழ் தமிழ் என்று பைத்யம் பிடித்தாப்போல் கூவுகிறீர்கள். மொழிப் பிரச்னே சாதாரணமானது. இந்தி வரட்டுமே. இந்தி வளரட்டுமே. இந்தி படித்துவிட்டு நமது பிராம்மணத் திருமேனிகள் வேலேயில்லாமல் தவிக்கின்றன. இந்தி வந்தால் சம்ஸ்கிருதம்

# காந்தியடிகள்

**மகாத்மா** காந்தி யவர்கள் இந்திய நாட்டின் மதிப்புக்குறியவராய் விளங்குகிறார். அத்தகைய பெரியார் இத்தகைய நெருக்கடியான காலத்தில், மிதவாதிகளின் கையிற்சிக்கி, அவர்களாட்டும் பொம்மையாக இருந்து வருவது, தேசத் துரதிஷ்டமே யாகும். மகாத்மா சாந்த மூர்த்தி என்று கருதிய மக்களிடம் (ராஷ்டிரபதியின் தேர்தலினுல்) மனமுடைந்து விடுத்த அறிக்கையினுல், அதாவது ராஷ்டிரபதியின் வெற்றி, தன்னுடைய தோல்வி எனக் கூறியது, அதிலும் அரிபுரா காங்கிரஸ் மகாநாடு கூடுவதற்கு முன் எழுதிய வியாசம், மகாத்மா அவர்களை பொறுமை யிழந்தவர் என்றும், தான் நியமித்த நபர் தோல்வியடைந்ததைத் தன்னுடைய தோல்வி என்றதால், தன்னுடைய ஆட்சியைச் செலுத்த முயற்சித்துப் பேராசையையும் பெருமையையும் மனத்தின்கண் நிறைத்து வைத்துள்ளவர் என்றும், பல மக்கள் நிச்சயம் செய்து கொள்ளச் சந்தர்ப்பம் ஏற்பட்டு விட்டது.

இவர் விட்ட அறிக்கையின் பலாபலனை மகாநாட்டில் காணலாம். ஆதலால், இவ்வாண்டு நடக்கும் காங்கிரஸ் மகாநாட்டின் நடவடிக்கையை வெகு ஆவலாக எதிர்ப்பார்க்கின்றனர்.

---

அடுத்தபடி யல்லவா? வடமொழியின் முன்னேற்றத்தால் தமிழர்கள் அனைவரும் பரம சாதுவாகவும், பிராம்மண பக்தர்களாகவும் இருந்து நீடூழி வாழலாம் அல்லவா?

தமிழ் நாடு தமிழ். அவை எங்கள் உயிர் என்று கூறி, தமிழ் நாட்டின் முன்னேற்றத்திலேயே கண்ணை வைத்திருந்தால் என்ன பண்ணுவது. தமிழ் நாட்டையும், தமிழர்களையும் நம்பித்தானே காங்கிரஸ்காரர்களும், மற்றப் பிராம்மணர்களும், வட இந்தியர்களிடம் கண்ட்ராக்ட் செய்தார்கள். கண்ட்ராக்டுக்குப் பின் இப்படி நீங்கள் பிரிந்து விட்டால் என்ன பண்ணுவது. நமது தென்னாட்டுக் காங்கிரஸ் பார்ப்பனர்களும் அவர்களின் அன்பர்களும் பெற்ற கௌரவத்தை வட இந்தியர் வாபஸ் செய்து விடும்படி கேட்பார்கள் அல்லவா?

தான், தனது உறவு, தன் அக்கம் பக்கம், தன் ஊர், தனது கலை, தனது தாய்மொழி தன் தாயகம் என்ற இயற்கை முறைப்படி தமிழன் அறிவு விரிவுபட்டு, இவைகளை முன்னேற்றி, அதன் பின்னர், அகில இந்திய பூரண சுயராச்சிய விஷயத்தில் இறங்குவோம் என்று, தமிழ்த் தலைவர்கள் சொல்லுவதை நீங்கள் கேட்காதீர்கள். உங்களைத் தமிழர்களாக இருக்கும்படி உங்கள் தலைவர்கள் கூறுவார்கள். அதை நீங்கள் கேட்காதீர்கள். உங்கள் தாய் மொழியை வளர்ச்சி யடையும்படி செய்யச் சொல்லுவார்கள் கேட்காதீர்கள். ஏனென்றால் இதெல்லாம் வகுப்பு வாதம்.

# தமிழ் நாட்டில் புகுந்த ஆரியப் பிசாசே தமிழரின் திண்டாட்டத்திற்குக் காரணம்

[தமிழன்]

தமிழ் எனும் பதத்திற்கு இனிமை எனப் பொருள்படும். பாரதியாரும்,

'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தொன்றும் காணோம்,
பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும்
இகழ்ச்சி சொலப் பான்மைகெட்டு
நாம்நமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்வீர்
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்'.

எனப் பகன்றுள்ளார். இதை எழுதிய பாரதியோ தமிழ், வங்காளம், தெலுங்கு, மலையாளம், பிரான்ச் இன்னும் அநேக மொழிகளை ஆராய்ச்சி செய்து, தமிழ் மொழியின் புலமையை அறிந்து இவ்வாறு கூறியுள்ளார். நாம் இவ்வினிமையான மொழியை உலகம் போற்றும்படி செய்வதற்கின்றி, நமது பிரதம மந்திரி ராஜகோபாலாச்சாரியார் வடநாட்டு மொழியை நம் நாட்டில் புகுத்துவாரேயானால், அதன் கொள்கை என்ன? நம் நாட்டில் நூற்றுக்குத் தொண்ணூற்று இரண்டு (92) பேர் தமிழையே, நம் தாய் மொழியினையையே எழுதப்படிக்கத் தெரியாமல் இருக்கிறார்கள். அவர்கள் முன்னேற்றமடைய ஒரு வழியும் தேடவில்லை.

தமிழ் மொழியைப் போற்றியும் பாராட்டியும் வரும் தமிழர்களாகிய நாம், ஒருநாள் இரண்டு நாள் அல்ல, ஒரு வருஷம் இரண்டு வருஷமல்ல, பல ஆண்டுகளுக்கு முன்னமேயே ஆரியப் பைசாசத்தால் மயக்கப்பட்டு, அவர்கள் வலையிற் சிக்கி அடிமையானோம்.

நாம் ராமராஜ்யத்தை வெகுவாகப் போற்றுகிறோம். அவர் இராஜ்யத்தில் பசுவும் புலியும் ஒன்றாக நீர் அருந்தியதாகக் கூறப்படுகிறது. நான் உங்களுக்குக் கூறுகிறேன் ராமராஜ்யம் அதர்மராஜ்யம். ஏனெனில், ராமராஜ்யத்தில் ஆரியமே ஆண்டு வந்தது. அவர்களையே உச்ச நிலையில் வைத்துப் போற்றினர். ஆரியர்களால் பிரிக்கப்பட்ட மற்ற வகுப்பார் மிகத் தாழ்மையுடன் நடத்தப்பட்டனர். ராமராஜ்யத்தில் ஒரு ஆரியன் குழந்தை அகால மரணம் அடைந்தது. அவ்வாரியன் அக்குழந்தையின் மரணத்திற்குக் கார

ணம், ஆரியர்களால் பிரிக்கப்பட்டுத் தாழ்த்தப்பட்டவர்களென்று மதிக்கப்பட்ட ஒருவன் தவம் செய்வதே காரணம் என்று கூறினன். அரசனும் அதை வேத வாக்காக நம்பி ஆரிய சூழ்ச்சியை அறியாமல் அவ்வேழையைச் சிரச்சேதம் செய்தனன். என்னே! ஆரிய சூழ்ச்சி! பிற வகுப்பான் கல்வியைக் கற்று, விருத்தியடைவானே யானால் தமது வகுப்பார் சீர்குலைவர் என்ற எண்ணத்தினலன்றோ? தாழ்த்தப்பட்டோர் எப்படி முன்னுக்கு வரமுடியும்? கல்வி கற்க முடியும்? உயிருக்குத் துணிந்து அல்லவா எதையும் செய்ய வேண்டும். அந்தோ! ராம ராஜ்யத்தின் பெருமையை நீங்களே அறியவும்.

ஆரியப் பிசாசு நாளாக ஆகத் தமிழ் நாட்டில் புகுந்தது. களங்கமில்லா உள்ளத்தையுடைய தமிழர் ஏமாந்தனர். ஆரியர் வலையிலும் சிக்கினர். அவர்கள் தமிழனைப் பார்த்து நீ சூத்திரன் என்றதும் அப்படியா சரி என்றனர். தம்மையும் மறந்தனர். தங்கள் புகழையும் வீரத்தையும் மறந்தனர். ஆரியருக்கு அடிமை ஆனார்கள். ஆண்டுகள் ஆயிரக் கணக்காகச் சென்றன. தென்னாட்டில் ஆங்கிலேயர் புகுந்தனர். அவர்களுடன் கலந்தனர் ஆரியர். எங்கு பார்த்தாலும் ஆரியர் ஆங்கிலம் பயின்று ஆங்கிலேயர் ஆதிக்கத்தில் புகுந்தனர். ஆங்கிலேய ராஜ்யம் ஆரிய மயமாயிற்று. தமிழர்களோ ஒதுக்கப்பட்டுப் பெருங் குழியில் தள்ளப்பட்டனர். ஆங்கிலேய ஆட்சியில் ஆரியர் உரம் பெற்றார்கள். உத்தியோகங்களால் ஓங்கினர். தமிழரை ஆதரிக்காது தம்மினத்தையே ஓங்குவிக்க முயற்சி செய்தனர். ஆரியத்தை ஆணிவேர் நாட்டிச் சுற்றிலும் முட்டுக்கட்டை இட்டுப் பலப்படுத்திக் கொண்டனர். தமிழர் படித்தும் ஆதரவு இன்றி வேலையும் இல்லாமல் ஏங்கினர். அக்காலத்தே தோன்றினர் இருவீர சிங்கங்கள். தமிழர்களை நித்திரையினின்றும் தட்டி எழுப்பி முன்னேறும் வழியைக் காட்டினர். பிராம்மணர் அல்லாதார் சங்கமென ஒன்று நிறுவினர். தமிழருக்கென தமிழ்ப் பத்திரிகை ஒன்றும், ஆங்கிலப் பத்திரிகை ஒன்றும் தோற்றுவித்தனர். பின்பு சட்ட சபையில் புகுந்து, தமிழர்களுக்கே முதலில் உத்தியோகங்கள் கொடுக்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை அமுலுக்குக் கொண்டு வந்தனர். நமது ஏழை மக்கள் படிப்பதற்கு ஆரம்பப் பாடசாலைகள் ஆங்காங்கு ஏற்படுத்தி வசதி செய்தனர். இதனல் தமிழர் எங்கும் படித்தும் முன்னுக்கு வர ஆரம்பித்தனர். நம்மை இவ்வளவு தூரம் முன்னுக்குக் கொண்டுவந்தவர்கள் யாரெனில்? அவர்களே. நமது வீரத் தமிழ்த்தாய் மக்கள் ஸர். பி. டி. தியாகராஜ செட்டியாரும் டி. எம். நாயர் அவர்களுமே ஆவர். அவர்களைத் தமிழ் மக்களாகிய நாம் எக்காலத்தும் மறக்கவே முடியாது.

பார்த்தனர் ஆரியர். அவர்களுடைய உத்தியோகப் பாதுகாப்பிற்காகப் போடப்பட்டிருந்த முட்டுக்கட்டை எடுக்கப்படவே, ஆணிவேர் அசைய ஆரம்பித்தது. வழி எதுவுமில்லாது காங்கிரஸில் போய்ச் சேர்ந்து கொண்டனர். தங்களை நன்ருக வலுப்படுத்திக் கொண்டனர். அங்கும் நமது தமிழர்களே தடியடிபட்டும் சிறை சென்றும் ஆரியர்களை முன்னேற்ற மடையச் செய்தனர். பின்பு, ஆரியர் தமிழர்களாகிய நம்மிடம், நமக்காகத் தடியடிபட்டதாகவும் சிறை சென்றதாகவும், சட்ட சபையிற் சென்ருல் நமக்கே நன்மை செய்யப் போவதாகவும் கூறி, நமது கண்களில் மஞ்சள் தூளைத் தூவி, ஏமாற்றிச் சட்ட சபையில் புகுந்தனர். 'பழைய குருடி கதவைத் திறடி' என்ற பழமொழிபோல் மறுபடியும், ஆரியர் ஆதிக்கம் உத்யோகங்களில் தலை எடுக்க ஆரம்பித்தது. வேலை யில்லாது தமிழர்கள் திண்டாடும்போது ஆரியர்களுக்கே தான் வேலைகள் கொடுக்கப்பட்டு வருகின்றன.

தமிழரின் தாய் மொழி என வழங்கும் தமிழை வளர்க்காமல், தமிழரால் வெறுக்கப்பட்ட, வடநாட்டில் ஒரு சாரார் பேசும் இந்தி மொழியைத் தமிழரிடம் கட்டாய பாடமாகப் புகுத்துதல் நியாயமோ? இதுவோ தமிழருக்குச் செய்யும் நன்மை? அன்னிய மொழியை வெறுத்த தமிழன், தனது தாய் மொழிதான் வேண்டுமென்ருல் சிறைச்சாலையா! என்னே ஆரிய ஆட்சி!

தமிழர்களாகிய நமக்குப் பகுத்தறிவூட்ட 'பகுத்தறிவு' என்ற பத்திரிக்கையையும், அரசியல் ஞானத்தையூட்ட 'குடியரசு' எனும் பத்திரிகையையும், தோற்றுவித்துத் தமிழரின் முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட்ட நமது மாபெருந் தலைவர் ஈ. வே. ராமசாமிப் பெரியார் இன்று நமது தாய் மொழிக்காகச் சிறையிலிருக்கிருர்.

தமிழர்களே! 'தமிழ்மொழி தாயிற் பெரிது' என்னும் உணர்ச்சியுடன் இனியாவது நமது தாய் மொழியைக் காக்க வழி தேடுங்கள். நமது மாஜி தலைவர்கள் பிராமணர் அல்லாதார்க்குச் செய்த நன்மையை, ஜனங்கட்கு எடுத்துக் கூறி நமது இயக்கத்தை முன்னேற்ற மடையச் செய்யுங்கள்.

---

*சுந்தரம்:*—அம்மா நான் பிறந்த சமயத்தில் நீ எங்கே யிருந்தாய்.

*தாயார்:*—நான் என் தாய் வீட்டிலிருந்தேன்.

*சுந்தரம்:*—நான் பிறந்த சமாச்சாரம் தெரிந்ததும் ரொம்ப சந்தோஷமாய் பார்க்க வந்திருப்பாயே.

*தாயார்:*—ஆம்.

—S. V. K. சபாபதி

# தமிழுக்கு உயிர்தந்த நடராசன்

[பாரதி தாசன்.]

இந்தி எதிர்ப்புப்போரில் சிறைக்குச் சென்றான்.
இளங்காளை நடராசன்; சென்னை வாசி;
அந்தமுறும் இலக்குமணன் அம்மாக் கண்ணும்
அருந்தமிழர் பெற்றெடுத்த மருந்துபோல்வான்;
செந்தமிழிற் பற்றுடையான்; உத்தி போகச்
சிறுவாழ்வில் வெறுப்புடையான்; கைத்தொழில்மேல்
சிந்தைவைத்தான்; பயின்றுவந்தான்; திறமை யுள்ளான்.

'தமிழ்நாட்டில் இந்தியினைக் கட்டா யத்தால்
சாரவிட்டால் தமிழ்சாகும்' எனநினைத்தான்.
அமுதொத்த தன் தமிழின் நிலைக்கு நொந்தான்.
அண்டைஅயற் பெரியார்பால் தனக்கேற் பட்ட
சமுசயத்தைத் தெரிவித்தான். உணவுநீத்தான்.
சதாகாலும் இதேநினைவாய் இருந்து வந்தான்.
தமிழகத்தார் எல்லார்க்கும் உணர்வு காட்டித்
தன்உருவம் காட்டிவிட்ட தமிழ்ப் பிராட்டி,

நடராசன் எதிரேயும் வந்து நின்று
'நானில்லா விடி நீயும் இல்லை' என்று
படபடத்த இதழாலும் துயர்க்கண் ணாலும்,
பகர்ந்து சென்றாள். வாழ்கதமிழ் வாழ்க வாழ்க
இடரான இந்திமொழி வீழ்க வீழ்க
என்றுரைத்தான் தமிழரிடம் தமிழ்நாட் டின்கண்.
அடாதசெயல் இதுஎன்றார் இந்திச் சர்க்கார்.
அழகியோன் தான்தன்னைச் சிறையிற் கண்டான்.

நெஞ்சத்தில் வீற்றிருந்த தமிழ்த்தா யோடு
நெடுஞ்சிறையில் நடராசன் இருந்தான். அன்னோன்
கொஞ்சுமொழி தனைநினைத்துப் பெற்றோர் உற்றோர்,
கொடுஞ்சிறைக்கு வெளியினிலே இருந்தார். மற்ற
வஞ்சமிலாத் தமிழரெலாம் நடரா சன்பேர்
வாழ்த்திக்கொண் டிருந்தார்கள். சிலநா ளின்பின்
வெஞ்சுரந்தான் கண்டதுவாம். அதுநாள் தோறும்
மேலோங்கலா யிற்றும். மெலிவுற் றானும்.

சாக்காட்டின் ஒட்டினிலே தவிக்கும் போது,
தமிழ்நாட்டைத், தமிழர்களைப், பெற்றோர் தம்மைப்
பார்க்குமோர் ஆசைவந்து படுத்தும் போது,
பழியேற்க அஞ்சாத சிறைத் தலைவர்

ஆக்கினைஒன் றிட்டாராம் 'நடராசா நீ
அரசினரை மன்னிப்புக் கேட்டுக் கொண்டால்
பாக்கியனாய் விடுதலையைப் பெறுவாய்' என்றார்.
பைந்தமிழன் தன்நிலையை எண்ண லானான்.

மன்னிப்புக் கேட்டிடுவாய், தமிழர்க் குள்ள
மானத்தை இழந்திடுவாய் என்று கூறிச்
சின்னபுத்தி அதிகாரி கேட்டு நிற்கச்,
செந்தமிழ்த்தாய் -'உன் அன்பின் அடையாளத்தை
இந்நிலையிற் காட்டுக நீ மைந்தா மைந்தா'
என்றேதன் தாமரைக்கை ஏந்தி நின்றாள்.
மன்னுதி மன்னர்களின் வழியில்வந்த
மாத்தமிழர், பழம்பெருமை பறிபோ காமே

காக்கஎன்று நின்றிருந்தார் கூட்டமாகக்!
கண்ணாலும், சிரிப்பாலும் தனது காதற்
போக்குணர்த்தி வந்தவள் இளைய நங்கை
பூமானை, அன்புதர வேண்டி நின்றாள்.
வாய்க்கும்இவை அத்தனையும் நடரா சன்தன்
மனோலோக நடைமுறையாம். என்ன செய்வான்.
'ஆர்க்கும் முரசம்போல்' மன்னிப்புக் கேளேன்
அருஞ்சிறையில் சாவதற்கும் அஞ்சேன் என்றான்.

தனைத்தந்தான் எனக்கென்றாள் செந்தமிழ்த் தாய்;
தகதகெனக் களியாட்டம் ஆடா நின்றாள்!
தனக்கென்று வாழாத தமிழா என்று
தமிழரெலாம் அவன்பேரைப் பாடா நின்றார்!
தனிப்புகழ்சேர் நடராசன் தன்னைப் பெற்றோர்
தமிழுக்குப் பெற்றோம்என் றகம கிழ்ந்தார்!
தனித்த நறுங்காதலிதான் தேம்பி நின்றாள்!
தமிழ்வீரன் நடராசன் இறந்து போனான்.

அன்னவனின் புகழ்இந்தத் தமிழ்நாட் டின்கண்
ஆர்ந்ததற்குக் காரணத்தை அறிவிக் கின்றேன்.
சின்னதொரு கல்வியினால் தறுக்குக் கொண்டு
தீமையெலாம் மக்களுக்குச் செய்து கொண்டு
தன்னலத்தை எண்ணிஎண்ணித் தமிழர் நாட்டைத்
தரைமட்ட மாக்குகின்றார் அவர்போலின்றி
இன்தமிழிற் கல்விகற்றான் நடரா சச்சேய்
எழில்பெற்றான். புகழ்பெற்றான் எல்லாம் பெற்றான்.

# பொய்ம் மகள்

[மெய்ம்மகன் எழுதுவது]

ஓர் ஆடவனைப் பற்றியோ ஒரு பெண் மகளைப் பற்றியோ பிறப்பு வரலாறு எழுத வேண்டுமானல், அவர்கள் சாமானியமான வர்களா யிருக்க முடியாது. கீர்த்தியுள்ளவர்களைப் பற்றித்தான் ஜீவிய சரித்திரம் எழுதுவார்கள். எனக்குப் பொதுவாக ஒரு ஜீவிய சரித்திரம் எழுத வேண்டுமென்ற ஆசை உண்டு. அதற்குக் கீர்த்தி யுள்ள ஓர் பெயர்வழி வேண்டும். உலகக் கீர்த்தி உள்ளவர் யார்? பொய்ம் மகளைவிட எல்லாருக்குந் தெரிந்த எல்லாரோடும் பழக்க முள்ள ஒருவரை எங்கும் பார்க்க முடியாது. ஆட்சி செலுத்துவோ ரிடமும் பொய்ம் மகள் இருப்பாள்; அடிமைப் பட்டவனிடத்தும் அவள் கடாக்ஷம் உண்டு. குழந்தை, வாலிபர், கிழவர், பெண்கள் அனைவரிடத்திலும் இந்த அம்மா விளையாடாத நேரம் கிடையாது. ஆகையினுல் அம்மையாரின் பிறப்பு வளர்ப்பை இங்கே கூறுகிறேன்.

பொய் அல்லது பொய்ம் மகள் என்று சொல்லப் படுகின்ற இவள் ஆயத்துறையில் திருவவதாரம் செய்தாள். ஆயத்துறை என்பது சூதாடும் இடம். இவள் பால் குடித்துக் கொண்டிருந்த இடம் எது என்ருல், அது அந்தணரிடந்தான். பார்ப்பனர்தாம் பாலூட்டியவர்கள். பின்னர், அந்தப் பெண் யாரால் சீராட்டி வளர்க்கப்பட்டாள்? மாயக்கண் வேசையிடத்தே வளர்ந்தாளாம்! அப்படி வளர்ந்தவள் வண்ணனிடத்தில் ஒரு நாள் தங்கிய துண்டு. ஏனப்பா சலவை கொண்டுவர ஒரு மாதமாகி விட்டதே என்று கேட்டால் அவன் திடீரென்று, என் மாமியார் இறந்து புட்டாங்க என்று சமயோசிதமாக நடவாததை நடந்ததாகச் சொல்லி விடுவதை நாம் கேட்டிருக்கிருே மல்லவா? இது அந்தப் பொய்ம் மகள் அவன் வீட்டில் ஒரு நாள் தங்கியதின் பயனல்லவா?

ஆனல், 'ஏயப் புலவரிடத்து எட்டு நாள்' நன்ருகப் பொருந் தும்படி கவி பாடும் புலவரிடத்திலே தாராளமாக எட்டு நாள் தங்கி யிருந்திருக்கிருள். அதனுல்தான் அவர்கள், ஒட்டைச் சாண் கதைக்கு ஓராயிரம் பாட்டுப்பாடி மூட்டைகளைத் தள்ளி வைத்திருக் கிருர்கள் போலிருக்கிறது.

இந்தப் பொய்ம் மகள் செட்டியையும் விட்டபாடில்லை. செட்டிக்கும் அவள் ஓதம் உரைத்திருக்கிறது. அதாவது செட்டி யைப் பார்த்து, 'ஏன்' என்று ஒரு சொல்லால் விசாரித்தாளாம். பின் போய் 'அக்கசாலைப் புகுந்தனளே' அதாவது தட்டாரக் கூடத்தில் போய்ப் புகுந்து கொண்டாள். அவள் அங்கிருந்து வெளி

வந்தாளா? என்ற தகவல் சரியாகத் தெரியவில்லை. இந்தப் பொய்ம் மகள் ஜீவிய சரித்திரம் எழுதிய பொறுப்பு என்னைச் சேர்ந்ததல்ல. நான் முன்னோர் சொல்லிய பாட்டின் பொருளைத்தான் இங்குக் கூறினேன். அந்தப் பாட்டைக் கேளுங்கள்.

ஆயத்துறையிற்பிறந் தந்தணர் பால்குடித்து
மாயக்கண் வேசையிடத் தேவளர்ந்து வண்ணுனொருநாள்
ஏயப்புலவரிடத் தெட்டுநாள் செட்டி ஏனென்றுபின்
போயக்கசாலைப் புகுந்தனளே அந்தப் பொய்ம்மகளே!

---

பிள்ளை:—தன் தந்தை காப்பி குடிக்கும்போது பக்கத்தில் இருந்த ஸ்பூனை (Spoon) பாக்கட்டில் எடுத்துப் போட்டுக் கொண்ட போது,

ஏன், அப்பா ஸ்பூனை எடுத்துப் பாக்கட்டில் போட்டுக் கொள்கிறாய்?

'அடடே! நான் ஓட்டலில் இருப்பதாக நினைத்துக் கொண் டேன் போலிருக்கிறது' என்றார் தந்தை. —கே. வி. கி.

---


## ரிஜிஸ்தர் அறிவிப்பு

### கல்கத்தா ஜெனரல் ரிஜிஸ்தர் நெம்பர் 114.

1. "லக் பீடி" டிரேட் மார்க்கு.
2. "இன்பசாரம்" டிரேட் மார்க்கு.
3. "கோல்டனுல்" டிரேட் மார்க்கு.
4. "காஸ்டோலின்" டிரேட் மார்க்கு.

ஷை டிரேட் மார்க்குகளை Mr. M. மாசிலாமணி முதலியார், அவர்களால் தயாரிக்கப்படும், மருந்துகள், பீடி வகையருக்களுக்கு இந்தியன் பீனல் கோடு 478, 479-வது செக்ஷன்களின் படிக்கு ரிஜிஸ்தர் செய்துள்ளார்கள். ஷை டிரேட் மார்க்குகளைப் போல் உபயோகிப்பவர்கள் நஷ்ட ஈடு முழுமைக்கும், சிவிலிலும், கிரிமினலிலும், ஜவாப்தாரியாவார்களென இதன் மூலம் அறிவிக்கப் படுகிறது.

மருந்து தயாரிப்பவர்கள்:

**31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.**

# குடும்பம்

[பாரதி தாசன்]

(ஏற்ற ராகத்தில் பாடுக)

பெண்கள் படித்திட வேண்டும்—அவர்
பேதைமை நீங்கிட வேண்டும்.
மண்ணிடை வாழ்ந்திடும் வாழ்வில்—பெண்ணின்
வகுப்பைத் தாழ்த்திட லாமோ?
உண்ணும் உணவிலும் சமத்வம்,—அணி
உடையிலும் நல்ல சமத்வம்,
பண்ணுந் தொழிலினிற் சமத்வம்,—சொத்துப்
பாத்தியந் தன்னிலும் சமத்வம்,

காற்றில் உலாவிடச் சமத்வம்—இனிக்
காட்டுதல் வேண்டும்இத் தேசம்!
தோற்றும் எண்ணப்படி ஆண்கள்—பெண்ணைச்
சொல்லி மணஞ்செய்யக் கேட்பார்.
கீற்றுப் பிறைநுதல் மாதர்—சொல்லும்
கேடற்ற நாதனை மணக்க
நேற்று வரையிலும் உரிமை—இல்லை!
நேயம் மறுத்திட லாமோ?

மாதர் உரிமையை மாய்த்தார்—ஆண்
மக்கள் முற்காலத்தில் வீணாய்!
தீதடைந் தார்அத னாலே—இனிச்
செம்மை அடைந்திட வேண்டும்.
கோதை ஒருத்தியின் அறிவும்—மணம்
கொண்ட ஒருவனின் அறிவும்
தோதொடு நல்லவை ஆயின்—அவை
தூய குடும்பத்தை ஆக்கும்.

# சிதம்பர தரிசனம்

**வழிப்போக்கன்:**—சிதம்பரம் நடராஜ ஆலயத் தெரிசனத்திற்குச் சென்று அங்கு சாமி தெரிசனம் பார்க்க வேண்டும் என்று ஒரு ஐயரைக் கேட்டான்.

ஐயர்:—சாமி தரிசனம் செய்ய நாலு அணு கொடுக்க வேண்டும். கர்ப்பூரம் கொளுத்த வேண்டுமானல் 1—4—0 ரூபாய் கொடுக்க வேண்டும் என்ருர்.

வழி:—என்னிடம் காசில்லே. ஆதலால் வெளியில் கொளுத்தி விடுகிறேன்.

ஐயர்:—கோயில் எங்களுடையது. இதில் யாரும் தேங்காய் உடைக்கவோ கர்ப்பூரம் கொளுத்தவோ கூடாது.

வழி:—அப்படியானல் எங்கள் பணத்தை மாத்திரம் வாங்கிக் கொண்டு, ஆலய செலவுகளும் தங்கள் குடும்ப செலவுகளும் செய்து கொள்ளலாம் போலும். நாங்கள் ஆலயம் கட்டவும் அதற்கு வேண்டிய நித்தியப்படிச் செலவுக்கு சொத்தும் கிராமங்களும் வைக்கவும் உரிமை பெற்றவர்கள் தானே?

ஐயர்:—ஆம். நீங்கள் எவ்வளவு சொத்து சாமிக்கு வைத்தாலும், அது எங்கள் பேரில் வைக்க வேண்டும். அந்தச் சொத்து எங்களுடையது. ஏனெனில் கோயில் எங்கள் சொந்தச் சொத்து.

வழி:—கோயில் மேடையின் மற்ருெரு பக்கம் இருக்கும் பெருமாள் கோயிலேப் பார்த்து, அவ்விடம் நின்றுக்கொண்டிருந்த ஐயங்காரைப் பார்த்தவண்ணம், இந்தக் கோயில் தேவஸ்தானக் கமிட்டியார் வசம் சேரவில்லையா?

ஐயங்:—பெருமாள் கோயில் மாத்திரம் சேர்ந்து விட்டது. நடராஜர் கோயில் கேசு நடக்கிறது. தீக்ஷிதர்கள் (ஸ்டே ஆர்டர்) வாங்கி இருக்கிருர்கள்.

வழி:—ஏன் அப்படிக் கேட்டார்கள். இது பொதுக் கோயில் தானே?

ஐய:—எப்படிப் பொதுக் கோயிலாகும். நாங்கள் வெளியில் பிச்சை எடுத்துப் பணம் சேர்த்து வைத்திருக்கிறோம். ஆதலால் இது பொதுக் கோயிலாகாது.

வழி:—இந்துக்கள் எல்லாம் வந்து வணங்கக் கூடியதாய் இருப்பதால் பொதுக் கோயில்தானே.

ஐய:—என்ன சொன்னுலும் பிச்சை வாங்கிக் காப்பாற்றும் கோயில் எங்களுக்குத்தான் சொந்தம். இதை உணர்ந்த முற்கால அரசர்கள் வேண்டிய கிராமங்களேயும், கட்டடங்களேயும், இடத்தை

# ‘நீ என்ன சொல்லுகின்றாய்?’

[பஞ்சு]

‘**நீ** என்னை விசுவாசித்தால், நான் உன்னை மேன்மைப் படுத்திவிடுகிறேன்’ என்று முயற்சி சொல்லுகின்றது.

* * *

‘நீ என்னை அபிமானித்தால், உலகத்திலுள்ள யாவரும் உன்னை அபிமானிக்கச் செய்வேன்’ என்று மரியாதை சொல்லுகின்றது.

* * *

‘நீ என்னைக் கைவசப்படுத்தி மேன்மை பெற்றால் உலகத்துள்ளார் யாவரும் உன்னை மேன்மைப் படுத்தும்படி செய்வேன்’ என்று அதிகாரம் சொல்லுகின்றது.

* * *

---

யும், கொடுத்து எங்களை அநுபவிக்கச் செய்திருக்கிறார்கள். அவர்களெல்லாம் முட்டாள்களா?

வழி:—ஆம். முட்டாள்கள்தான். ஏனென்றால் தங்கள் வகுப்பார்களும் தாங்களும் கோயில் கட்டிப் பணம் கொடுத்திருக்க, அவர்களுக்கு ஒரு பாத்தியதையும் இல்லையென்று சொல்லியிருப்பார்களானால், அவர்களை எப்படி புத்திசாலிகள் என்று சொல்ல முடியும். அவர்கள் செய்த முட்டாள்தனமான செலவுகளின் காரணத்தால்தான் இன்று ஆங்கிலேயர்களின் அடிமைகளாக இருக்க வேண்டியிருக்கிறது.

ஐய:—இது மாத்திரமா? இன்னும் உங்கள் தலைமேல் நீச்சர்கள் உட்காரப் போகிறார்கள்.

வழி:—சந்தோஷம். நாங்கள் தமிழர்கள். எங்களுக்கு ஜாதி கிடையாது. நீச்சர் என்ற ஜாதியே எங்களுக்கு உடன்பாடில்லாததால் எங்கள் தலைமேல் யாரும் உட்கார முடியாது. உங்கள் தலைமேல் உட்கார்ந்து உயர் சாதி என்று சொல்லி, முற்கால பிற்கால நிகழ்கால அரசர்களையும் மற்றவர்களை ஏமாற்றி, ஆண்டு அநுபவித்து உண்டு, வயர் வளர்க்கும் உங்கள் வாயில் மண் போடுவார்கள் என்று சொல்லிக் கொண்டே ஆலயத்திலிருந்து வெளியேறிவிட்டார்.

இனியாவது கற்பூரம் கொளுத்தச் சொல்லிக் கொடுக்கும் ரூபாயை நிறுத்தி, கடவுளுக்கு நீங்களே கற்பூரம் கொளுத்த முற்படுவீர்களா?

பிறரிடம் பணம் கொடுத்துக் கொளுத்தும் கற்பூரத்தால் கடவுள் திருப்தியடைவாரா?

---

'நீ என்னை நல்வழியிற் செலவு செய்தால், உன் செல்வாக்கை ஈருலகத்திலும் மேன்மைப் படுத்துவேன்' என்று ஐஸ்வரியம் சொல்லுகின்றது.

* * *

'செய்கையினாலும், பார்வையினாலும், கேள்வியினாலும் விளக்கப்பட்டிருக்கிற விஷயங்கள் தவிர, மற்றவைகளை என்னிடத்திலிருந்து கற்றுக்கொள். இகபர வாழ்க்கையில் உன்னைச் சிறந்தவனாகச் செய்வேன்' என்று கல்வி சொல்லுகின்றது.

* * *

நீ என்னைக் காப்பாற்றினால் நான் உன்னை உலகப் பிரசித்தனாக்குவேன்' என்று அன்பு சொல்லுகின்றது.

* * *

'நீ என்னைக் கைவசப் படுத்து, உன்னை ஜெயசீலனாக்கி விடுகிறேன்' என்று பொறுமை சொல்லுகின்றது.

* * *

'நீ என்னைத் தின்றால் நான் உன்னைத் தின்பேன்' என்று துக்கம் சொல்லுகின்றது.

* * *

'நீ என்னிடம் பழகு. உன்னை யாவரும் நிந்திக்கும்படி மதிப்பிலா மனிதனாக்கி விடுவேன்' என்று துர்ப் பழக்கம் சொல்லுகின்றது.

* * *

'நீ என்னைச் சுத்தியாக வைத்தால், நான் உன்னைச் சித்தி பெறச் செய்வேன்' என்று இருதயம் சொல்லுகின்றது.

* * *

'நீ என்னை ஒருபோதும் நம்பாதே, திடீரென்று உன்னை மோசம் செய்துவிடுவேன்' என்று வாழ்நாள் சொல்லுகின்றது.

* * *

'நீ என்னை ஒருபோதும் மறவாமல் நினைத்துக்கொண்டிருந்தால், நான் உன்னைத் தவறான மார்க்கத்தைவிட்டு நீக்கிச் சன்மார்க்கத்திற் சேர்த்து விடுவேன்' என்று மரணம் சொல்லுகின்றது.

---

சந்திரன்:—வைத்தியர் என்னை மூன்று வாரத்தில் நடக்கும்படி செய்துவிட்டார்.

கிருஷ்ணன்:—அப்படியா!

சந்திரன்:—ஆமாம். அவருடைய பீசைக் (Fee) கொடுக்க என்னுடைய மோட்டாரை விற்கும்படியாய் விட்டது.

—A. T. சுப்ரமண்யம்

# பிள்ளையும் கிள்ளையும்

[திருவத்திபுரம், நிலத்திறைவன்]

பிள்ளை

தேன்பழச் சோலை பயிலும் சிறுகிளியே
வான்பழித் திங்ஙனே வாராயோ—யானுடைய
பொன்னுட்டுக் கூட்டிற் புகுந்து மகிழ்வுடனே
என்னோடு வாழ்வாய் இனிது.

கிள்ளை

என்றன் வரவை எதிர்நோக்கு நற்பிள்ளாய்
தென்ற லுலவு தருவிட்டு—நின்றன்
பொலன்கூட்டிற் றங்கிப் புழுங்கி வருந்தல்
நலமாமோ வென்னே நவில்?

பிள்ளை

கொய்யாப் பழமுண்டு; கொவ்வைக் கனியுண்டு;
துய்யநற் பாலும் தெளிதேனும்—பையவே
இன்ன பலவுண்டே என்னோ டினிதிருந்தால்
என்ன வுனக்கே இடர்?

கிள்ளை

கொய்யாப் பழம்வேண்டேன்; கொவ்வைக் கனிவேண்டேன்
துய்யதேன் பாலும் சுவைபாரேன்—செய்யவிப்
பூங்காவி னுள்ளநற் றீங்கனிக ளுண்டாலே
ஓங்குமே உள்ள வுவப்பு.

பிள்ளை

மெத்தென வேயுனக்கோர் மென்மலர்ப் பள்ளிதனைச்
சித்தஞ்செய் துள்ளேன் சிறுகூட்டில்—நித்தம்
இனிய மொழிக ளிசைத்துமே யென்னை
நனிமகிழச் செய்வாய் நயந்து.

கிள்ளை

மெத்தென வேயெனக்கோர் மென்மலர்ப் பள்ளிதனைச்
சித்தஞ்செய் தாயிச் சிறுபொந்தில்—எத்தினமும்
வாடாத பஞ்சினு லானவென் கூட்டிற்கே
ஈடாமோ வென்ன இயம்பு.

பிள்ளை

என்றம்பி என்னண்ணன் எல்லாருஞ் சேர்ந்துன்றன்
இன்சொல் லினைக்கேட் டினிதிருப்போம்—நன்ருக
எங்கள் குழுவினரோ டென்றும் விளையாடித்
தங்குவா யிக்கூட்டில் தான்.

கிள்ளை

உங்கள் குழுவினரோ டோடி விளையாடின்
எங்கள்பெற் றோர்க ளெனைக்காணு—திங்குமங்கும்
தேடித் திரிந்து தியங்குவ ராதலால்
நாடி யுமைச்சேரேன் நான்.

பிள்ளை

பச்சைக் கிளியே பனிக்காலம் வந்துற்றால்
இச்சைகொண் டெவ்விடத்தே யேகுவாய்?—அச்சமே
தாங்கிக் குளிரால் தவித்துப் பலவிடத்தும்
ஏங்கியென் செய்வாய் இனி?

கிள்ளை

பண்ணார் மொழிப்பிள்ளாய் பண்புள்ள வெண்ணிறக்கை
தண்ணார் குளிரையுடன் தாங்காதோ?—நண்ணுபிற
வெந்நாடு நோக்கி விரைந்தே பறந்திடுவேன்
தண்ணாட் டினையே தவிர்த்து.

பிள்ளை

வெப்பநா டுன்னி விரைந்துசெலு மாற்றலுளாய்
அப்பதிசெல் லாறுனக் காருரைப்பர்?—செப்புகின்ற
என்மொழிகேட் டிங்குற்று வின்னலொன்று மில்லாதே
நன்றுறைய லாமலவோ நாம்?

கிள்ளை

காதம் பலவாக் கடந்தமைந்த நாடெனினும்
ஏதமில் லாமலே யென்றனக்கே—ஓதுபுகழ்
ஆண்டவனே நல்லா றருள மனங்கொண்டால்
வேண்டுமோ வேறு துணை?

பிள்ளை

நன்று கிளியே நயமான வாசகமே
இன்றே உரைசெய்தா யிஃதேபோல்—என்றுமே
நீட்சியுள வக்கிளையில் நின்றே யெனக்குன்றன்
காட்சிதரு வாயே கனிந்து.

கிள்ளை

என்றன் சிறுசொல்லை யிவ்வளவும் கேட்டிங்கே
நின்ற மதலாயே நின்விழைவால்—என்றுமுன்
வாய்மொழி கேட்கவே வந்திங் கமர்ந்திடுவேன்
போய்வரு கின்றேன் பொறு!

(இஃது 'The child and the little bird' என்ற ஆங்கிலச் செய்யுளைத் தழுவியது)




# ஒற்றுமை உயிர் காக்கும்

[வேப்பேரி கே. பி. துரைசாமி]

முன் ஒரு காலத்தில் அசோகா வனம் என்னும் காட்டில் ஓர் காகம் தன் மனைவியுடன் உல்லாசமாகக் காலம் கழித்து வந்தது. சில நாட்களில் பெண் காகம் அதிக நோய்வாய்ப்பட்டு இறந்து விட்டது. அப்பொழுது ஆண் காகம், இனி என்னுடன் கூடிக் காலங் கழிக்க நண்பர்கள் எனக்கு யாருமில்லையே, நான் இருந்தும் என்ன பயன் என்று சொல்லி வருந்தியது. ஒரு நாள் அக் காகம் மரக் கிளையில் உட்கார்ந்திருக்கும் பொழுது, மரப் பொந்தி லிருந்து ஓர் எலி ஓடி வருவதைக் கண்டு மரத்தினின்றும் கீழே இறங் கிற்று. காக்கையைக் கண்டதும், எலி பயந்து பொந்தில் நுழைந்து கொண்டது. அப்பொழுது காகம் நீ ஏன் என்னைக் கண்டதும் பயப்படுகிறாய். நான் உன்னை ஒன்றும் செய்யேன். இனிமேல் நாமிருவரும் சினேகமாய் இருப்போம் என்று கூறியதைக் கேட்ட எலி நகைத்து, நீ யாரை ஏய்க்கப் பார்க்கிறாய். உன் தந்திரம் எனக்குத் தெரியும். நான் வெளியே வந்தால் நீ என்னைத் தூக்கிக் கொண்டுபோய் விடுவாய் என்று சொன்னது. இல்லை நான் உண்மை யாகவே ஒன்றும் செய்யேன். உன்னை என் சகோதரனைப்போல் பாவித்துக் கொள்ளுகிறேன் என்று கூறித் தன் கதையினை மிகவும் உருக்கத்துடன் சொல்லி அதிக வருத்தப்பட்டது. பிறகு எலி நண்பனாக இசைந்து, அவ்விரண்டும் சௌக்கியமாக மரத்தின்கண் வசித்து வந்தன.

ஒவ்வொரு நாளும் காகம் தான் கண்ட விஷயங்களை எலிக்குச் சொல்லிக்கொண்டு வரும். ஒரு நாள் காகம் தம்பி இதோ தெரிகிற பக்கத்துக் குட்டையில் (குளம்) என் நண்பன் ஆமை வசிக்கின்றான்.

அவனைப் பார்த்துவிட்டு வருவோம் வருகிறாயா? என்று அழைக்க எலியும் அதற்கிசைந்து ஆமை இருக்கும் குட்டையை அணுகிற்று. ஆமை தன் நண்பனைக் கண்டதும் மிகுந்த ஆவலுடன் வரவேற்று யோக க்ஷேமங்களை விசாரித்தது. காகத்தின் மனைவி இறந்ததைக் கேட்ட ஆமை மிகவும் வருத்த மடைந்தது. காகம் ஆமைக்கு எலியை அறிமுகப்படுத்தி வைத்தது. அச் சமயம் ஆமையின் நண்பனான முயல் வர, ஆமையும், முயலை, மற்ற நண்பர்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தது. அன்று ஆமை தன் நண்பர்கள் மூவருக்கும் விருந்து அளித்தது. அந் நான்கு நண்பர்களும் உல்லாச மாக அன்றைய தினத்தைக் கழித்து இனிமேல அக் குளக் கரையிலேயே வசிப்பதென அந் நான்கு நண்பர்களும் தீர்மானித்தனர்.

அவைகள் பகலில் இரை தேடச் சென்று மாலையில் அங்குள்ள மரத் தடியில் கூடி, அவை அவைகள் கண்ட அற்புதங்களைச் சொல்லி மகிழும். ஒரு நாள் மாலை அதிக நேரம் ஆகியும் முயல் வராததைக் கண்டு அந் நண்பர்கள் துக்கித்தார்கள். அப்பொழுது காகம் நான் போய்ப் பக்கத்துக் காடுகளில் பார்த்துவிட்டு வருகிறேன் என்று கூறிப் பறந்து சென்றது. பக்கத்து வயலில் முயல் ஒரு வலையில் அகப் பட்டுக்கொண்டு கஷ்டப்படுவதை பார்த்து நண்பா நாங்கள் உன்னை எப்படியாவது விடுவிக்கின்றோம் நீ பயப்படாதே என்று தைரிய வார்த்தைகள்கூறி, மிகவும் வருத்தத்துடன் ஆமையும், எலியும் இருக்கும் மரத்தை அடைந்தது. காகத்தின் வரவை அதிக ஆவலுடன் எதிர் பார்த்திருந்த ஆமையும், எலியும், முயலின் ஆபத்தைக் கேட்டு மனமுடைந்தன. அப்பொழுது எலியின் சிறு மூளைக்கு ஒரு யுக்தி தோன்றியது. உடனே காகத்தைப் பார்த்து அண்ணா நீங்கள் என்னை அவ்விடத்தில் கொண்டுபோய் விடுங்கள். நான் அதைக் காப்பாற்றுகிறேன் என்று சொல்லிற்று. காகமும் மிகவும் சந்தோஷத்துடன் எலியை முதுகில் ஏற்றிக்கொண்டு பறந்து சென்று வயலில் இறக்கியது. அன்று பௌர்ணமி அல்லாவிடினும் வஸ்துக்கள் தெரியும்படி போதுமான வெளிச்சம் இருந்தது. சிறிது நேரத்தில் ஆமையும் அவ்விடத்திற்கு (அக் காட்டின் எல்லாப் பாகங்களும் அதற்குத் தெரியுமாதலால்) வந்து சேர்ந்தது.

எலி, முயல் அகப்பட்டுக்கொண் டிருந்த வலையைத் தன் கூறிய பற்களால் கடித்துத் துண்டிதுக் கொண்டு வந்தது. ஆனால், அது களைப்புற்றுச் சிறிது நேரம் உட்காருவதும் மறுபடியும் வேலை செய்வதுமாக இருந்தது. கடைசியாகப் பொழுது புலரும் சமயத்தில் முயலை விடுவித்தது. அதற்குள் குடியானவன் வர, முயலை ஓடி விடும்படி மற்ற நண்பர்கள் கூறின. முயலும் காற்றாய்ப் பறந்தது. எலி அங்கிருந்த புதரில் மறைந்து கொண்டது. காகம் ஆகாயத்தில்

வட்டமிட்டது. ஆனால், ஆமை மிகவும் மெதுவாக நடக்கும் பிராணி, ஆகையால் அதனால் ஓட முடியவில்லை.

குடியானவன், முயல் ஓடிவிட்டதையும் வலை அறுந்து கிடப்பதையும் கண்டு வருத்த மடைந்தானாயினும் ஆமையைக் கண்டு ஒருவிதத்தில் வருத்தம் நீங்க ஓடி அதைப் பிடித்துக்கொண்டு தன் வீடு நோக்கி நடக்கலானான். இதைக் கண்டதும் எலியும் காகமும் சொல்ல முடியாத வருத்த மடைந்தது. எலியை முதுகில் தூக்கிக் கொண்ட காகம் பழைய மரத்தடிக்குச் சென்று முயலைக் கண்டு நடந்த சங்கதியைக்கூறி வருத்தப்பட்டது. அப்பொழுதும் எலிக்கு ஒரு யுக்தி தோன்றியது. எலி முயலை நோக்கி நீ சென்று குடியானவன் வீட்டு வழியில் இறந்தவன்போல் படுத்துக் கொள்ள வேண்டும். அப்பொழுது குடியானவன் ஆமையை வைத்துவிட்டு உன்னைப் பிடிக்க வருவான். அச் சமயத்தில் காகம் சத்தம் போட்டதும் நீ எழுந்து இவ்விடம் ஓடி வருவாயாயின் உன்னைத் துரத்திச் சிறிது தூரம் வருவான், அதற்குள் ஆமை தப்பித்துக் கொள்ளும் என்றது. முயலும் இதற்குச் சம்மதித்துக் குடியானவனுக்குத் தெரியாமல் வீட்டு வழியில் கண்களை மூடிக்கொண்டு படுத்துக் கொண்டது. காகம் ஆகாயத்தில் வட்டமிட்டுக்கொண்டே இருந்தது.

முயலைக் கண்ட குடியானவன் மிகவும் ஆவலுடன், ஆமையைக் கீழே வைத்துவிட்டு முயலைப் பிடிக்க ஓடினான். அதற்குள் காகம் கரைய முயல் ஓட்டம் பிடித்தது. குடியானவனும் சிறிது தூரம் துரத்திவிட்டு முடியாமல், ஆமையை வைத்த இடத்தில் வந்து பார்க்க ஆமையைக் காணமல் மிகவும் வருத்தத்துடன் வீடு செல்வானானான். குடியானவன் போகும் வரைக்கும் ஆமை ஒரு புதரில் மறைந்திருந்து பிறகு எலியுடனும் காகத்துடனும் பழைய மரத்தடியை அடைந்து, முயலைக் கண்டு எல்லோரும் சந்தோஷத்துடன் எலிக்குத் தங்கள் வந்தனத்தைச் செலுத்திக் கொண்டன. அன்றைய தினத்திலிருந்து ஒற்றுமையுடன், வாழ்ந்து வந்தன.

ஆகையினால் சிறுவர்களே, சிறியவராக இருந்தாலும் அறிவில் பெரியவர்களாய் இருப்பார்கள் என்றும், ஒற்றுமையுடன் இருப்போமானால் எவ்வித ஆபத்துக்களிலும் வெற்றி யடையலாம் என்றும் இக் கதையினால் விளங்குகிறதல்லவா ?

---

துரைசாமி:—என்னப்பா உன் வீட்டுக்காரி உன்னை இப்படி உதைக்கிறாளே நீ ஏன் அப்படி சும்மா இருக்கிறாய்.

மனைவிக்குப் பயந்த, முத்துசாமி:—இல்லை, அவசரப்படேல் என்று நம் ஆன்றோர் சொல்லி இருக்கிறார்கள் அல்லவா அதனால் சும்மா இருக்கிறேன்.

—S. பெரியதுரை

[library stamp]

# தூக்கமில்லை

**சுந்தரம்:**—வேலாயுதத்தைப் பார்த்து என்ன சார் எனக்கு எல்லா சுகமும் கிடைத்திருக்கிறது. ஆனல், நித்திரை சுகம் மாத்திரம் இல்லை.

வே:—அப்படியானல் எந்தச் சுகமும் தூக்கத்தின் சுகத்திற்கு ஈடாகமாட்டாது. ஆதலால் உனக்குச் சுகமே கிடையாது. நல்ல வைத்தியரைக்கொண்டு தூக்கத்திற்குச் சிகிச்சை செய்துக் கொள்ள வேண்டும். இல்லாவிடில் தேகம் கெட்டுவிடும், இரத்தம் சுண்டி விடும், புத்தி மயங்கிப் போகும், கண் சொருகி விடும், மலம் கட்டி விடும், நீர் சுண்டி விடும், பசி போய்விடும், வயரு ஒட்டி விடும், என்று அடுக்கிக் கொண்டே போவதைப் பார்த்து,

சு:—நிறுத்தும் போதும். உபாயம் ஏதாவது இருந்தால் சொல்லும் பார்ப்போம்.

வே:—உபாயமா, சொல்லுகிறேன் கேள். எனக்குக்கூட தூக்கமில்லாமலிருந்தது. அதற்காகச் சென்னைக்குச் சென்று பண்டிதர்களைக் கேட்டேன். அவர்கள் டாக்டரிடம் போகச் சொன்னர்கள். டாக்டர்களைக் கேட்டதில் இரத்த விருத்தி டானிக்குகளையும், இரத்தத்தில் கலக்கும் பாடாணங்களையும் கொண்டு சிகிச்சை செய்தார்கள். இப்போது எனக்கு தூக்கம் நன்ருக வருகிறது. நீ வேண்டுமானல் அதன்படி செய்து பார் நன்ருய்த் தூங்குவாய்.

சு:—நான் எத்தனையோ பண்டிதர்களிடமும், டாக்டர்களிடமும், சாஸ்திரிகளிடத்திலும், ஐயர்களிடத்திலும், ஐயங்கார்களிடத்திலும், அம்மமாரிடத்திலும், அம்மாமிகளிடத்திலும், ஆசாமிகளிடத்திலும், வியாபாரிகளிடத்திலும் கேட்டேன். அவர்கள் சொன்னபடி எல்லாம் செய்தேன். ஒன்றும் குணமில்லை.

வே:—ஆனல், நீ சொல்லும் நோய்க்கு அதாவது தூக்கம் வராததற்குக் காரணம் என்னமோ? அதை யாரும் கண்டு பிடிக்கவில்லையா?

சு:—ஆமாம் யாரும் கண்டு பிடிக்கவில்லை.

வே;—என்ன ஆச்சரியம் எக்ஸ்ரே போட்டோ இருக்கிறது, எலக்டிரிக் இருக்கிறது, இரத்தப் பரீட்சை இருக்கிறது, நீர்ப் பரீட்சை இருக்கிறது, கோழைப் பரீட்சை இருக்கிறது, மலப் பரீட்சை இருக்கிறது. இத்தனை பரீட்சைகளாலும் கண்டு பிடிக்க முடியவில்லையா? என்ன ஆச்சரியம் வேண்டுமானல் கடல் யாத்திரை, டிராமாக் காட்சி, சினிமாக் காட்சி, மோட்டார் சவாரி முதலியவைகளைச் செய்து பாருமே.

சு:—நீர் சொன்ன எல்லாப் பரீட்சையும் செய்து பார்த்து விட்டேன் ஒன்றும் பயனில்லை.

வே:—அப்படியானால் தெய்வங்களுக்குப் பிரார்த்தனை செய்து பாரும் அல்லது ஜோசியர்களைக் கொண்டும் மந்திரவாதிகளைக் கொண்டும் ஏதாவது செய்து பாருமே.

சு:—அவற்றை எல்லாம் முதலிலேயே செய்து பார்த்து விட்டேன், தண்ணீர் மந்திரித்துப் பார்த்தேன், ஓமம் வளர்த்திப் பார்த்தேன், தானம் கொடுத்துப் பார்த்தேன், ஒன்றிலும் பயனில்லை.

வே:—இனி என்ன செய்கிறது. ஜெர்மனி, ஜப்பான், இங்கிலாந்து, அமெரிக்கா, முதலான இடங்களிலுள்ள எக்ஸ்பர்ட்டுகளைக் கலந்து யோசித்துப் பாருமே.

சு:—அதனையும் செய்து முடித்தேன். எல்லா நாட்டாரும் எல்லா எக்ஸ்பர்ட்டுகளும் பலபல மருந்துகளைச் செய்து அனுப்பினார்கள் ஒன்றும் பயனில்லை.

வே:—உன்னுடைய வியாதியை என்னிடம் சொல்லும் பார்க்கலாம். நீ எப்படிப் படுக்கிறாய் என்ன சாப்பிடுகிறாய் என்பதைக் கொஞ்சம் விவரமாய்ச் சொல்லும். அதற்குமேல் யோசிக்கலாம்.

சு:—சொல்லுகிறேன் கேள். சாப்பாட்டில் நெய், மோர், பால், பழம், தேன், சர்க்கரை கலந்து வயிறு நிறையச் சாப்பிடுகிறேன். இலவம் பஞ்சு மெத்தையை விரித்த ஸ்பிரிங் கட்டலில் காலுக்கும், பக்கத்திற்கும், தலைக்கும் தலையணையை வைத்துக் கொள்ளுகிறேன். காஷ்மீர் சால்வையைப் போத்திக் கொள்ளுகிறேன். கொசு வலையைக் கட்டிக் கொள்ளுகிறேன். தூக்கம் வருவதில்லை, அப்படி அசர்ந்து தூங்கினால் ஐந்து நிமிஷத்திற்கெல்லாம் திடுக்கிட்டு எழுந்து விடுகிறேன், என்ன கஷ்டம் என்ன செய்வது என்பது தெரியவில்லையே.

வே:—என்ன மோட்டுப்பூச்சி கடித்துத் தூக்கத்தைக் கெடுத்து விடுகிறதா என்ன?

சு:—ஆமாம் அதற்குத்தான் மருந்து இல்லை கட்டிலிலும், நாற்காலியிலும், ரயில் வண்டிகளிலும், ஸ்டீமரிலும், மோட்டாரிலும், பையாஸ்கோப்பில் வைக்கப்பட்டுள்ள நாற்காலிகளிலும், சோப்பாக்களிலும் எங்கு போனாலும் இதன் தொந்திரவை நீக்க முடியவில்லையே என்ன செய்வது பாழாப்போன உலகில் இதற்கு மருந்தில்லையே?

வே:—ஆனால், பயப்பட வேண்டாம். நம்முடைய 'தமிழரசு' ஆசிரியர் மே. மாவைப் போய்க் கேட்டுப் பார்க்கிறேன். அவர் ஏதாவது கண்டு பிடித்திருப்பார்.

வே:—பார்த்தீரா அதற்குத் தக்கமருந்தைச் சொல்லி விட்டார். நானும் உபயோகித்துப் பார்த்து விட்டேன். என் வீட்டில் எங்கும் மோட்டுப்பூச்சி என்பதே இப்போது கிடையாது. நான் ரயிலில் சென்றாலும் அவர் சொன்ன மருந்தால் என்னிடம் மோட்டுப்பூச்சி வருவதில்லை. நீரும் அதன்படி நடந்து சுகமாக நித்திரை செய்யும் இனித் தூங்குவாய்.

சு:—அந்த மருந்தைச் சொல்லுமையா? உமக்குக் கோடி புண்ணியம் கிடைக்கும்.

வே:—சொல்லுகிறேன் கேள். மேட்டில் இருக்கும் பூச்சி களையும், கட்டிலிலிருக்கும் பூச்சிக்களையும், சுவற்றிலுள்ள பூச்சி களையும் போக்க பசுமாட்டின் நீரை அடிக்கடி தெளித்தால் மோட்டுப்பூச்சி அடியோடு போய்விடுகிறது.

2. எள் எண்ணெயைவிட்டு விளக்கேற்றினால் மோட்டுப்பூச்சி கள் மடிந்துவிடும்.

3. மோட்டாரில், ரயிலில், ஸ்டீமரில் போகும்போது மஞ்சம் பில் தைலத்தில் சிறு பஞ்சில் நனைத்து வைத்துக் கொண்டால் அந்த வாசனை பட்டமாத்திரத்தில் மோட்டுப்பூச்சி மடிந்துவிடும். (லிமன்கிராஸ் ஆயில்).


## விளம்பர விகிதம்

| | | |
|---|---|---|
| தடவை 1-க்கு ஒரு பக்கத்திற்கு | | ரூ. 20. |
| ,, ,, | ½ பக்கத்திற்கு | ரூ. 12. |

நீண்டகால விளம்பரங்களுக்கும், அட்டை விளம்பரத் திற்கும் மானேஜருக்கு எழுதவும். விளம்பரத் தொகையை முன் பணமாகவே அனுப்ப வேண்டும்.

மானேஜர்,

'தமிழரசு'

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

# இத்தாலியும்—துருக்கியும்

[நாகூர். ரே. தியாகசம்பந்தம்]

இவ்வாண்டில் மக்கள் தினசரி அறிய விரும்பியுள்ள நாட்டுச் செய்திகளுள் இத்தாலிய நாட்டுச் செய்தியும் ஒன்ருகும் என்பதற்கையமில்லை. காரணம் நம்மவரெல்லோருக்கும் தெரிந்தனவே. ஒவ்வொரு நாடும் எத்துறையிலும் முன்னேற விரும்புவது சால்புடைத்தே. ஆனல் நன்னெறி கடைப் பிடித்துச் செல்லுதல் வேண்டும். சுமார் இருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பும் பிறநாட்டை தன்னுடாக்கிக் கொள்ளப் பின் வாங்கினரில்லை இத்தாலியர் என்பது சரித்திர சான்று. அக்கால வழக்கப்படி நாட்டைத் தாக்கி மக்களைப் பிடித்து மாக்கள் என மனத்திடை மாசறக் கொண்டு, பிறருக்கு ஊதியத்தின் பொருட்டு விற்பதை உண்மையில் சிறந்த நல்வழி எனக் கடைப் பிடித்தொழுகினர் தற்காலத்தில் நாகரீகத்திற்கு நல்வழி காண்பிக்கும் இத்தாலியர்.

இத்தாலிய நாட்டினர் அடிக்கடி துருக்கி ஸ்தானத்தின்மேல் படை யெடுப்பது வழக்கம். படை யெடுப்பின் பயனுகப் பல்லாயிர மக்களை மனமிரக்கமின்றி மாக்களாகப் பிறருக்கு விற்று வந்தனர். மனிதன் மனிதனுக்கு அடிமையாக விற்கப்படுவானுகில் நாட்டின் இதர நிலைமைகளைச் சொல்லவும் வேண்டுமோ? இப்படி விற்கப்பட்ட துருக்கியன் ஒருவன் வெனிஸ் நகரத்திலே வதிந்த பிரபல வியாபாரி பிரான்ஸிஸ்கோ வீட்டின் எதிரில்லில் தன் ஊழ்வினைப் பயனை அனுபவித்து வந்தனன். அவன் பெயர் ஹேமட். வெகு நற்குணசாலி. குழந்தைகளைக் காணில் கடவுளைக் கண்டதை யொப்ப களிப்புறுவான். பிரான்ஸிஸ்கோ பிரபுவின் அருமந்த புதல்வனுக்கும் ஹேமட்டிற்கும் நாளடைவில் கருத்தொருமித்த நட்பு ஏற்படலாயின. அன்பு கூட்டுறவின் திறவுகோலன்றோ!

பிரான்ஸிஸ்கோ ஒருநாள் தன் மகனின் வேண்டுகோளுக்கிரங்கி ஹேமட்டிடம் வந்தனர். கண்டார் கதி நினைத்தழும் ஹேமட்டை கொண்டார் மனமிரக்கம். விண்டார் தன் கருத்தை. நீர்தானு என் மகனல் சதா பேசப்படும் ஹேமட்? என்றனர் பிரபு.

ஹேமட்:—ஆம். மூன்ருண்டுகளாக அடிமை யென்னும் பெரும் சிறையில் அடைக்கப்பட்டவன் நான்தான். இப்பரந்த நிலப் பரப்பில் என்னை நேசிப்பவர் யாரெனில் உமது மகனுகிய (நீர் அன்னவரின் தந்தையா யிருப்பீர்) சிறு பால்யன்தான். கொடுமை தாண்டவமாடு மிடத்தில் நான் உண்மையில் நாடுவது அச்சிறுவனின் நலமே. கிறிஸ்தவர்களுக்கும் துருக்கியர்களுக்கும் கர்த்தாவாகிய முழுமுதற் கடவுள் அவனைக் காப்பாராக.

பிரான்ஸிஸ்கோ:—அவனும் உன்னிடத்தில் அளவிறந்த அன்பு கொண்டுள்ளனன். அவனே முன்னிட்டே உன் அடிமையை ஒருவாறு நீக்க யான் முன் வந்துள்ளனன். ஆனல் நீ ஒரு காரியம் செய்தல் வேண்டும்.

ஹேமட்:—ஆச்சரியமே! இயற்கை அன்னையின் சுயேச்சையை நான் எள்ளளவும் சிதைக்க நினைவு கொண்டவனுமல்ல, கொண்டவரை நேசித்தவனுமல்லன். ஆகையால்தான் கடவுள் என்னை இந் நிலையில் (கண்ணீர் அவன் உடலை நனைத்தது) வைத்தனர் போலும்! எதுவரினும் வரட்டும். கடவுளின் பூர்ண கிருபை எல்லோருக்கும் நிறைய உண்டாவதாக. சரி நான் என்ன செய்தல் வேண்டும்?

பிரான்:—உன் நிலைமையை நோக்கின் மனமுருகுகிறது. ஹேமட்! (வெகு ரகசியமாக) எனக்கு இன்னல் செய்வதையே தன் வாழ்க்கையின் லட்சியமாகக் கொண்டவன் ஒருவனுளன். அவனை இதோ யிருக்கும் இக்கத்தியால் ஒரு பார்வை சரிவர பார்த்து விட்டாயானல் உன் சுயேச்சை நிச்சயமே.

ஹேமட்:—ஏ அநாகரீகப் பேயே! நீ எனக்கும் என் இனத்தவருக்கும் சுயேச்சை அளித்து இந்நகரத்தையும் எங்களுக்குத் தருவதெனச் சொல்லினும் நான் ஒரு கொலை செய்யத் துணியேன். நீ அப்பால் சென்றுவிடல் தற்போது நலம்!

பிரான்:—ஹேமட்—நான் உனக்கு நன்மையை விளைவிக்கும் பொருட்டே சொன்னேனே யல்லாமல் வேறில்லை. நீ சற்று யோசித்துப் பார். ஒருவாறு நீயே ஒப்புக்கொள்வாய் எனச் சொல்லி வீட்டை நோக்கினர் பிரபு.

மறுநாட்காலை பிரான்ஸிஸ்கோ தன் மகனுடன் ஹேமட்டிடம் வந்தனர். 'நீ இன்று முதல் அடிமையினின்று சுயேச்சை யடைந்தவனுவாய்' செலுத்த வேண்டிய பொருளை செலுத்தி யாகிவிட்டது. இனிமேல் நீ நலமுடன் உன் நாடடைந்து கிறிஸ்தவ சமயத்தைச் சார்ந்தவரெவராகினும் கவலக்கண்டால் கடிந்து கவலை களைதல் வேண்டும்' எனச் சொல்லி பிரியாமற் பிரிந்தனர்.

* * *

திங்கள் ஆறு கடந்தன. ஒருநாள் நள்ளிரவு. தீ, தீ என்ற பெரும் சப்தம். மாடிகள் இடிந்து விழுந்தன. உயிர் பிழைப்பான் வேண்டி தவித்தனர் மக்கள்—பிரான்ஸிஸ்கோ கண்டாரில்லை தன் ஏக புதல்வனை. வீடு தீக்கிரையானதையும் பொருட்படுத்தினரில்லை. மதியது கலங்கினர்—செய்வதொன்று மறியார்—மகனைக் கொணர்வோருக்குப் பெரும் பொருள் அளிப்பதாகச் சொல்லி அறை கூவி அழைத்தனர் ஏனையோரை, அன்பு அன்பையே பரிசளிக்கு

மன்றே! புகையால் சூழப்பட்ட வீட்டிலிருந்து தன் மகனைக் கையி லேந்திய வண்ணமாக ஒரு பருத்த உடலமைப்போடு கூடிய நபர் வருவதைக் கண்டார். மட்டில்லா மகிழ்ச்சி மடுத்தார். மனமாரப் பணமுடிப் பொன்றை அளித்தார்—வாங்கினுலில்லை அந்நபர். 'நான் எனது இரத்தத்தை விலைக்கு விற்பவனல்லன்' என்றனன். ஹேமட்! என்ருன் பையன். கட்டித் தழுவினன். நிசப்தம் சிறிது நேரம் நிலவியது. தன் நண்பரொருவர் வீட்டுக்கு ஹேமட்டை அழைத்துச் சென்று அவன் அங்கு எப்படி வரலாயினன் எனக் கேட்டனர். தான் துருக்கியிலிருந்து கைதியாகப் பிடித்து எதிரி யால் கொண்டு வரப்பட்டபோது தன் தந்தையும் அதே கப்பலில் அதே கதியை அடைந்து தன்னுடன் வரலாயினர். அவரை நினைத்து, நினைத்துருகியதே பிரான்ஸிஸ்கோ பிரபுவின் மகனுடைய மனத்தைக் கவர்ந்து அதன் பயனகத் தான் சுயேச்சை அடைய நேர்ந்தது. சுயேச்சை அடைந்த உடனே தன் தகப்பனை விலைக்கு வாங்கியவரிடம் சென்று தன் பிதாவிற்குப் பதிலாகத் தன்னை ஏற்றுக் கொள்ளும்படி வேண்டினன். தான் வெகு பால்யனகவிருப்பதால் எளிதில் தன் கருத்து நிறைவேறின. தன் தந்தையையும் தான் போக வேண்டியுள்ள கப்பலில் ஏற்றி அனுப்பினன். 'எல்லாம் திருவருட் செயல்' 'எல்லாம் நமது நன்மைக்கே' என்ற மூதுரைப் படி செய்நன்றி யறிதலின் பொருட்டே தானங்கு தங்க நேர்ந்த தெனவும் ஹேமட் வெகு விரிவாக எடுத்துரைத்தனன். பிரான் ஸிஸ்கோ அவனரும் குணத்திற்குப் பெரிதும் வியந்தனர். மறுபடி யும் அவன் அடிமையை அறவே நீக்கி துருக்கி ஸ்தானத்திற்கு வழி யனுப்பினர்.

* * *

ஆண்டுகள் பலவாயின. பழையன கழிந்தன. புதியனவும் புகுந்தன. பிரான்ஸிஸ்கோ பிரபல வியாபாரியாகினன். அவனரும் மகனும் பொது மக்கள் நண்பனுகினன். தொழிலின் பொருட்டு பிரான்ஸிஸ்கோ தன் சேயுடன் வெனிஸ் கப்பலொன்றில் அந்நிய நாட்டிற்குப் பிரயாணமாகினர். நடுக்கடல் ஒரு கப்பலின் தோற்றம் இத்தாலியரை வழிப்பறி கொள்ளை அடிப்பதற்கெனவே அமைக்கப் பட்டனவாமது. கண்டார் கப்பலை கதி கலங்கினர்கள். செய்வ தொன்று மறியாது ஏக்கம் பிடித்தனர். ஆனல் பிரான்ஸிஸ்கோ பிரபுவின் மகன் பயந்தானில்லை. கையில் வாளை ஏந்தினன். ஏனையோரையும் தன் வசமாக்கினன். துருக்கியரும் நெருங்கினர். வெடிகுண்டின் சப்தம் வானளாவின. புகை ஒருவர் முகத்தை ஒருவருக்கு மறைத்தன. துருக்கியர் பலர் மாண்டனர். பின் வாங்க நேர்ந்தது. காரணம் பிரான்ஸிஸ்கோ மகனின் ஊக்கத்தோடு கூடிய தைரியமே. ஆனல் இரண்டு துருக்கிய கப்பல்கள் வெகு வேகமாக

வருவதைக் கண்ட எதிரிகள் சரண்புகும் கொடியை உயர்த்தினர். இரும்புச் சங்கிலியின் நட்பினர்களாக ஆக்கப்பட்டனர் இத்தாலியர்.

நலமிக்க ஹேமட் வழக்கம்போல் மனிதன் மனிதனுக்கு அடிமையாக தன்னுட்டிலும் விற்கப்படும் கூற்றைக் காண வந்தனன். ஆடு மாடுகளைப் போல் வரிசை வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர் அடிமைகள். புஜபல பராக்கிரமத்திற் சிறந்த வாலிபனொருவன் தலை குனிந்து நிற்பதைக் கண்டனன். பன்முறை பரிந்துப் பார்த்தனர். விலை கூறும்கால் தலைநிமிர்ந்து பார்த்தனன் பிரான்ஸிஸ்கோ பிரபுவின் மகன். அதுதான் நாமதம் 'ஹேமட்' என்றனன். ஒருவரை ஒருவர் கட்டி இறுகத் தழுவினர். தன் தந்தையாகிய பிரான்ஸிஸ்கோ நிற்குமிடத்திற்கு அழைத்துச் சென்றனன். கண்ணீர் விடுத்தனன். அடிமை நீங்கிற்று. உடனே அவ்விருவரையும் அழைத்துக்கொண்டு தன் அற்புத மாளிகைக்குச் சென்றனன் ஹேமட். நல்லுணவு உண்பித்து அவர்கள் அங்கு வர நேர்ந்தது தனக்கு முற்றிலும் எதிர்பாராததெனு வியந்து நலம் விசாரித்தனன். பிறகு அவர்கள் ஹேமட்டைப்பற்றிய முழு விபரங்களையும் கேட்க 'வெனிஸ்ஸிலிருந்து அவர்கள் பேருதவியால் திருக்கியடைந்ததும், சேனுதிபதி பட்டம் தனக்குக் கிடைத்ததெனவும் அற்றை நாள்முதல் அடிமையாக விற்கப்படுவோரை விலை கொடுத்து வாங்கி விடுவிப்பதையே சிறந்த தொண்டாகக்கொண்டுள்ளனன் என்றும்' எடுத்தோதினுன் ஹேமட். பிரிந்தவர் கூடினுல் சொல்லவும் வேண்டுமோ!

நாட்கள் சிலவாயின. பிரான்ஸிஸ்கோ பிரபு தன் மகனுடன் வெனிஸ்க்குப் புறப்படலாயினன். ஹேமட் தம் நாட்டின் அற்புதச் சாமான்களைச் சேகரித்து அவர்களுக்குப் பரிசளித்தான். ஹேமட் நன்றி யறிதலுக்கு மிகவும் வியந்தவராய் 'பிறவியின் பயன் பிறருக்குத் தொண்டு செய்தலே' என மனத்திடைக் கொண்டவராய் நலத்துடன் தம் நாடடைந்தனர் பிரான்ஸிஸ்கோ தன் மகனுடன்.

இக்கட்டுரை Thomas Day 1748—98 எழுதிய ஆங்கில கட்டுரையைத் தழுவியது.

---

சிங்காரம்:—இந்த நகைச் சுவையை பார்த்தாயா?

மங்களம்:—போடி! நகைக்கு சுவை இருந்தாலல்லவோ நான் அதைப் பார்ப்பேன்.

அப்படி யிருப்பினும் நான் எப்படி தின்னுவது தின்றுலல்லவோ சுவை தெரியும்.

—S. பெரியதுரை

# நகைச் சுவை



நடனமாது:—என்னை நீங்கள் மணந்து கொண்டால் என்னுடைய அழகையும், உங்களுடைய மூளையையும் கொண்ட ஒரு குழந்தையைப் பெறலாமல்லவா ?

வக்கீல்:—ஒரு வேளை என்னுடைய உருவத்தையும் உன்னுடைய மூளையையும் கொண்ட குழந்தை பிறந்து விட்டால் ?

—K. மோகனசுந்தரம்

முதலியார்:—என்ன சுத்தமடையனாய் இருக்கிறாய். ஒரு பெண் பிள்ளைக்கு லெட்டர் எழுதக் கூடாதென்று உனக்குத் தெரியாதா ?

கிட்டு:—என்னால் குற்றமே கிடையாதுங்கோ அந்த அயோக்யன் தபால்காரன் செய்த வேலை. —S. பெரியதுரை

யஜமான்:—கடிதத்தைப் பார்த்து என்ன விழித்துக்கொண்டிருக்கிறீர் ?

குமஸ்தா:—எழுத்து ஒன்று கூடப் புரியவில்லை. இதைப் படிக்கவே முடியாது.

'உமக்குப் படிக்கத் தெரியாவிட்டால் எழுத்து நன்றாயில்லை என்று சொல்லாதேயும். கழுதைகூட இதைப் படித்துச் சொல்லும். இங்கே கொண்டாரும். நான் படித்துக் காண்பிக்கிறேன்' என்று சொல்லி யஜமான் கடிதத்தை வாங்கிப் படித்தார். —T. J. R. N.

மைனர்:—என்னுடைய வாழ்க்கைக்கே நீ ஒரு ஒளி போன்றவள். நீ இல்லாவிடில் என்னுடைய வாழ்க்கையே மப்பு மாந்தாரம் நிறைந்து இருக்கும் வானத்தைப் போன்றே இருக்கிறது. நீதான் என்னுடைய இருதயத்தில் எப்போதும் மாறாமல் இருக்கிறாய்.

வேசி:—இது என்ன நமூனாவா ? அல்லது சீதோஷ்ன நிலையை விளக்கும் அறிக்கையா ? —வேப்பேரி K. B. துரைசாமி

தகப்பனார்:—டேய் கிட்டு அங்கே என்டா பஞ்சைப் பிய்த்துப் போட்டுக் கொண்டிருக்கிறாய்.

கிட்டு:—அப்பா பல நூல்கள் சேர்ந்தால் ஒரு கல்லாகும் என்று ஒளவையாரே சொல்லி இருக்கிறார்களே அதனால்தான் நானும் பல நூல்கள் சேர்ந்து ஒரு கல்லாகிறதா என்று பார்க்கிறேன்.

—C. கண்ணு

கூத்துப் பார்த்துவிட்டு வந்த இரண்டு பாட்டிகள் அதைப் பற்றிப் பேசிக்கொண்டு வந்தார்கள்.

முதற் பாட்டி:—நேற்று கிருஷ்ணன் தூது என்ற கூத்துப் பார்த்துவிட்டு வந்தோமே அது எப்படி இருந்தது ?

இரண்டாம் பாட்டி:—அதுவா? நான் இருபது வருஷத்துக்கு முன்னாலேகூட ஒரு தரம் பார்த்திருக்கிறேன். அந்தக் கட்டாலே போற துரியோதனன் அப்படியேதான் இருக்கிறான். இவ்வளவு நாளாகியும் கொஞ்சங்கூட புத்தி வந்த பாடாயில்லை.

—வேப்பேரி K. B. துரைசாமி

வியாதியஸ்தன்:—(ஆஸ்பத்திரி நர்ஸினிடம்) நான் உன்மேல் காதல்கொண்டு விட்டேன். ஆதலால் வியாதி குணப்பட்டு நான் வீட்டுக்குபோய் விடுவதில் எனக்கு இஷ்டமில்லை.

நர்ஸ்:—அதைப்பற்றிக் கவலை வேண்டாம். உங்கள் வியாதி குணப்படாதபடி டாக்டர் பார்த்து கொள்வார்.

வியாதியஸ்தன்:—ஏன் அவருக்கு எப்படித் தெரியும் என் காதலைப்பற்றி.

நர்ஸ்:—அவர் என்மீது காதல் கொண்டிருக்கிறார். ஆனால், இன்று காலையில் நீங்கள் என்னை முத்தமிட்டபோது அவர் அதைக் கவனித்து விட்டார்.

—K. மோகனசுந்தரம்

உபாத்தியாயர்:—ஒரு சிறுபையனைப் பார்த்து உன் தகப்பனாருக்கு பிரியமான வஸ்து வடையா, பாயாஸமா, ஜிலேபியா, அல்வாவா.

சின்னப் பையன்:—அதெல்லாம் ஒன்றும் அவருக்குப் பிரியமானது என்று சொல்ல முடியாது.

உபாத்தியாயர்:—பின் எதை.

சி-பையன்:—என் அம்மாவின் முத்தத்துக்குத்தான் அதிகப் பிரியப்படுகிறார் என்று சொல்ல வேண்டும்.

—H. ஜமால் முஹமது சாயபு

நான்காவது வகுப்பிற்கு தேச சரித்திரம் போதிக்கும் உபாத்தியாயர் புதிதாய் பிரமோஷன் ஆகிவந்த மாணவர்களைப் பார்த்து கி. மு. என்றால் அர்த்தம் என்னவென்று ஒருவனைக் கேட்டார்.

ஒருவன் (கிருஷ்ணன்):—கிராம முன்னேற்றம் !

உபாத்தியாயர்:—ச்சீ நீடா ராமன்.

ராமன்:—கிராம முனிசீப் சார் !

உபாத்தியாயர்:—போதும் போதும் நன்றாய்ப் படிப்பீர்கள் போல இருக்கு.

—S. பெரியதுரை

ஒரு வைதீகர்:—(நாட்டுப்புறத்து ஓட்டல்காரர் ஒருவரைப் பார்த்து) உங்கள் ஓட்டலில் சாப்பிடுவதற்கு கொஞ்சமாவது மனம் இடங் கொடுக்கவில்லையே.

ஓட்டல்காரர்:—சாப்பிடுவதற்கு, மனம், இடங் கொடுக்க வேண்டிய அவசியமே இல்லை. வயறு, இடம் கொடுத்தால் போதுமானது.
—சத்தி N. M. பொன்னையா.

நியயாதிபதி:—(குற்றவாளியைப் பார்த்து) நீ எத்தனை தடவை ஜெயிலுக்குப் போய் இருக்கிறாய்.

குற்றவாளி:—பத்துத் தடவைக்குமேல் இருக்கும்.

நியாயாதிபதி:—அப்படியானால் உனக்குக் கடுமையான தண்டனை விதிக்கவேண்டும்.

குற்றவாளி:—எஜமானே வாடிக்கைக்காரனுக்குக் கொஞ்சம் சௌகரியம் செய்து கொடுக்கப்படாதா. —A. K. ஸ்வாமி

வீட்டு எஜமானன்:—ஏண்டா! கன்னக் கொரவன்போல காலையில் இங்கு என்ன தேடுகிறாய்.

திருடன்:—ஒன்றுமில்லை. இரவு எல்லோரும் கும்பலாய் வந்து தங்கள் நகைப் பெட்டியைத் தூக்கிக்கொண்டு போனோம். என்னுடன் வந்தவர்களெல்லாம் ஓடிவிட்டனர். நான் மாத்திரம் ஓடும் போது இந்த வாசல் இடரி என் கட்டை விரலின் நகம் பேர்ந்து இங்கு விழுந்துவிட்டது. அதைத்தான் தேடு.......................

வீ-எ:—அட! மடையா அதை ஏன் தேடுகிறாய்.

திருடன்:—இல்லே சாமி! நகம் விழுந்த வீடு நாசமாய் போயிடும்ன்னு சாஸ்திரம் சொல்லவில்லையா அதனால்தான் இங்கு விழுந்த நகத்தைத் தேடுகிறேன். இந்தக் குடும்பம் க்ஷேமமாய் இருந்தால்தானே நான் இல்லாவிட்டாலும் என் மகனாவது இங்கு வந்து திருடிக்கொண்டு போகலாம். —S. பெரியதுரை

(தனது அறுபது வயதில் பதினைந்து வயதுப் பெண்ணைக் கலியாணம் செய்து கொண்ட கிழமாப்பிள்ளை) பெண்ணே என் முகத்திலும் தலையிலும் வெளுத்திருக்கிறதே, அது நரை யென்று நினைக்கிறாயா? அது நரையல்ல. அது என் முகமாகிய சந்திரனுடைய பிரகாசமாக்கும்.

மனைவி:—ஓகோ அப்படியா அதனால்தான் என் கண்களாகிய தாமரை தங்கள் முகமாகிய சந்திரனைப் பார்க்கும்போதெல்லாம் மூடிக் கொள்கிறது. —வேப்பேரி K. B. துரைசாமி

# சொப்பன உலகம்

['குமாரன்']

(சென்ற இதழ் தொடர்ச்சி)

நான் ரயிலை விட்டிறங்கிய போது மாலை மணி 5 ஆகிவிட்டது. தாஸில்தார் டலாய்த்து ஒருவன் என்னருகில் வந்து நின்றான். 'நீங்கள் தஞ்சாவூரிலிருந்து வருகிறீர்களா?' என்றான் அவன்.

'ஊம்' என்று நான் ஆச்சர்யத்தோடு தலையசைத்தேன். அவன் உடனே என் கையிலிருந்த பெட்டியை வாங்கிக் கொண்டு எனக்கு முன்னே நடந்தான். ஸ்டேஷன் காம்பவுண்டைத் தாண்டியதே ஒரு வண்டியில் என் பெட்டியை வைத்துவிட்டு என்னை ஏறிக் கொள்ளும்படி சொன்னான்.

நல்ல அகலமான வீதியில் தாஸில்தார் குடியிருந்த வீடு இருந்தது. முன் கட்டில் நாற்காலி, மேஜை, சோபா முதலியன போடப்பட்டிருந்தன. கீழே இரத்தினக் கம்பளம் விரிக்கப் பட்டிருந்தது. தாஸில்தார் வாருங்கள் என்று முகமன் கூறினார். நான் அவர் எதிரே உட்காராது நின்றேன், அவர் அமரும்படி உபசரித்தார். பிறகு க்ஷேம லாபங்களை விசாரித்து விட்டு ஏதோ அலுவலாக மாடிக்குப் போய்விட்டார். அப்போது அந்தப்பக்கமாக நான் பார்த்தேன். அங்கேயிருந்த ஒரு அறையின் ஜன்னல் வழியாக இரண்டு மூன்று ஸ்திரீகள் என்னைப்பார்ப்பது தெரிந்தது. நான் உடனே என் பார்வையை வேறு பக்கமாகத் திருப்பிக் கொண்டேன்.

அச்சமயம் இரண்டாங் கட்டிலிருந்து ஒரு இளைஞன் என்னருகில் வந்தான். 'வாங்க ஸார்!' என்று சொல்லிக் கொண்டே என்னருகிற் கிடந்த நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தான். நான் எப்போது புறப்பட்டேன் என்பது முதலாக அங்கு வந்து சேர்ந்தது ஈறாக எல்லாவற்றையும் கிண்டிக் கிண்டிக் கேட்கலானான். அதற்குள் மணி 6 ஆகிவிட்டது. அவனுடன் நான் பேசிய போதெல்லாம் அந்தத் தனி உணர்ச்சி என்னைத் தாக்காமலில்லை. ஆனால், நான் எப்படியோ சமாளித்துக் கொண்டே வந்தேன்.

'எழுந்திருங்கள் சார்! காபி சாப்பிடலாம்' என்றான். எனக்கு உள்ளே செல்லக் கஷ்டமாகத்தானிருந்தது. ஆனால் அதை நான் காட்டிக் கொள்ளவில்லை. உள்ளே ஜமக்காளம் விரிக்கப் பட்டிருந்தது. நான் உட்கார்ந்ததே, நெய்யில் செய்யப்பட்ட சில பலகாரங்கள் என் எதிரே யிருந்த இலையில் விழுந்தன. அவை விழுந்ததை

மட்டும் நான் கவனித்தேனே யல்லாது அவைகளைப் பறிமாறிய கரத்தைக்கூட என்றுற் பார்க்க முடியவில்லை. அந்தக் கொடிய உணர்ச்சி அவ்வாறு என் தலையைக் கவிழ்த்து விட்டது.

நான் அந்தப் பலகாரவகைகளில் ஏதோ சிலவற்றைச் சுவைத்த போது சில பெண்களின் கூக்குரல் கேட்டு நிமிர்ந்தேன். இரண்டு மூன்று சிறுமிகள் ஒரு பெண்ணைப் பிடித்துத் தள்ளிக் கொண்டு வந்தது என் கண்ணிற்படவே என் முகம் வேறு பக்கத்தில் திரும்பி விட்டது. அவள் என் எதிரே பலவந்தமாகக் கொண்டு வந்து நிறுத்தப் பட்டாள். ஆனால், அவளை என்னால் நிமிர்ந்து பார்க்கவே முடியவில்லை. அந்தக்குட்டிகள் என்னைக் கேலிசெய்யவாரம்பித்துவிட்டார்கள். 'அடியே! மாப்பிள்ளையைப் பாரடி! பொண் மாதிரியா தலைகுனிஞ்சுண்டார்!' என்றுள் ஒருத்தி. 'இல்லேடி! ஆம்படையாளா ஆகப்போறவளைப் பார்க்கப் படாதாம் அத்தனை முறுக்கடி!' என்றுள் மற்றொருத்தி. இந்தப் பரிகாசங்களெல்லாம் என்னுடைய உணர்ச்சியை அதிகப்படுத்தி விட்டன. ஆனால், அந்தக் குட்டிகளுக்கு அதெங்கே தெரியப் போகிறது? அவர்கள் மேலும் மேலும் என்னென்னவோ சொல்லிச் சிரித்தார்கள்.

காப்பி சாப்பிடுவதற்காக அண்ணுந்தேன். அப்போது 'அடியே! பார்த்துட்டாரடீ? நன்னு பார்த்துட்டாரடீ!' என்று சொல்லிக் கொண்டு அந்தக் குட்டிகள் ஓடினர். நான் எழுந்து முன் கட்டிற்கு வந்து சோபாவிலமர்ந்தேன். பிறகு தாம்பூலம் வந்தது. உடனே நான் ஊருக்குப் புறப்பட எழுந்தேன். காலையில் போகலாம் என்று தாஸில்தாரும் அவர் குமாரனும் தெரிவித்தனர். நான் மறுநாள் 'டூட்டி'க்குப் போய்ச் சேரவேண்டும் என்று சொல்லவே அவர்கள் ஆட்சேபிக்க வில்லை. வாசலில் வண்டி கொண்டு வந்து நிறுத்தப் பட்டது. சேவகன் என்னைக் கொண்டுபோய்விட வந்தான். நான் எல்லோரிடமும் சொல்லிக் கொண்டு வண்டியேறினேன்.

மறு நாட்காலை 10 மணியிருக்கலாம். நான் சோணசைலம் வந்திறங்கினேன். இரவுமுழுதும் வண்டியில் தூக்கமேயில்லை. அந்தப் பெண்களின் பரிகாசமும் சிரிப்பும் என் செவிகளில் ஒலித்துக் கொண்டே யிருந்தன.

இங்கே ஸ்டேஷனில் என்னை அழைத்துப் போக யாரும் வரவில்லை. நான் அங்கே பிற்பகல் 3 மணி வண்டியில் வருவதாக என் தகப்பனுர் தெரிவித்திருந்தார். ஆகவே ஏற்பாட்டிற்கு முன்னதாகச் சென்ற என்னை அந்தக் காலநேரத்தில் யாரும் எதிர்பார்க்கவில்லை. சில நிமிஷங்கள் வரை ஸ்டேஷனில் நின்றபடியே யோஜித்தேன், அவர்கள் வீட்டிற்குப் போகலாமா? அல்லது 3 மணி வரையில்

இங்கேயே தங்கியிருக்கலாமா வென்று. அப்பால், போவதே நல மென்று தீர்மானித்தேன். பிளாட்பாரத்திற்கு வெளியே வண்டிகள் நின்றன. ஒரு குதிரை வண்டியை வாடகைக் கமர்த்திக் கொண்டு போனேன்.

ரயில்வே ஸ்டேஷனிலிருந்து 2 பர்லாங் தூரமிருக்கும் அந்த வீடு. தாஸில்தார் வீட்டை விட இது கொஞ்சம் பெரிதாகத்தானி ருந்தது. என்ன வானாலும் அவருக்கு மேற்பட்ட உத்தியோகஸ்தர் அல்லவா? வீட்டிற்குப் பக்கத்திலுள்ள கார் நிற்குமிடம் காலியாக விருந்தது. டிப்டிகலெக்டர் ஆபீசுக்குப் போயிருப்பார் என்று எண் ணிக் கொண்டேன்.

பெட்டியைத் திண்ணையிலேயே வைக்கச் சொல்லி விட்டு வெளியிற் கிடந்த ஒரு பெஞ்சில் உட்கார்ந்தேன். வண்டிக்காரன் சில்லரையை வாங்கிக் கொண்டு போய் விட்டான். உள்ளே யிருந்து பியூன் ஒருவன் வெளியில் வந்தான். என்னை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்தான். பிறகு 'எந்த ஊர் ஐயா!' என்றான். அந்தக் கேள்வியும் தொனியும் நான் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னால் வந்ததற்காகத் தண்டிப்பது போலிருந்தது. என்னை வேலை நாடிவரும் பட்டதாரி களில் ஒருவனாகக் கருதினான் போலும்! இன்னும் என்னவோ கேட்க அவன் வாய்திறந்தான். ஆனால், நல்ல காலமாக உள்ளி ருந்து ஒரு பெரியவர் வந்தார். அவரைக் கண்டதே நான் எழுந்து நின்றேன். அவர் என்னை உற்றுப் பார்த்து விட்டு 'ஓ! நீங்கள் தஞ்சாவூரிலிருந்து வருகிறீர்களா?........' என்றார்.

இவருக்கு எப்படி என்னைத் தெரிந்தது என்று நான் சந்தே கித்தபடி 'ஆம்' என்றேன். அவர் அதைத் தெரிந்து கொண்டது போல, 'உங்கள் போடோ இங்கே வந்திருக்கிறது. அதனால் தான் உங்களைச் சுலபமாக அறிந்து கொண்டேன்' என்றார்.

'உள்ளே போகலாம். வாருங்கள். அடே அந்தப் பெட்டியை எடுத்து உள்ளே கொண்டு போய் வை' என்று கூறி விட்டுப் பெரிய வர் என்னை உள்ளே அழைத்துப் போனார். முன் கூடத்திற்கிடந்த சோபாவில் என்னை அமரும்படி பணித்தார். நான் உட்கார்ந்ததே இரண்டாங் கட்டிற்குப் போய் விட்டுத்திரும்பி வந்தார்.

'தம்பீ! ஸ்நானத்துக்கு எழுந்து வாருங்கள்' என்று என்னை அழைத்தார். நானும் சட்டைகளைக் களைந்து மாட்டிவிட்டு ஸ்நானத் திற்கு வேண்டியவைகளோடு சென்றேன். யாரும் பார்க்க முடியாத படி குளிப்பதற்காகவே தனியாக ஒரு அறை கட்டப்பட்டிருந்தது. இது எனக்கு மிகவும் சௌகர்யமாக விருந்தது. ஸ்நானம் முடித்து நான் வேறுடை யணிந்ததே பெரியவர் என்னை ஒரு ஹாலுக்கு அழைத்துப் போனார். அங்கே ஒரு பெரிய மேஜைமீது இலை

போடப்பட்டிருந்தது. பரிஜாரகன் பதிமாறினன். நான் மட்டும் உண்டேன். பெரியவர் என்னருகிலமர்ந்து பேச்சுக் கொடுத்துக கொண்டிருந்தார். அவர் பேச்சிலிருந்து பெண்கள் யாவரும் பின்னு வுள்ள ஒரு தனி வீட்டிலிருப்பதாகத் தெரிந்தது. இந்த வீட்டில் ஆடவர்களைத்தவிர பெண்டீர்கள் யாரும் வரலாகாது என உத்திரவு போட்டிருப்பதாகவும் தெரிந்து கொண்டேன்.

உண்டு எழுந்தபின் முன்னிரவு முழுதும் நித்திரையின்றி விழித்திருந்ததால் என்னை மீறித்தூக்கம் கண்ணைச் சுற்றியது. அதைக் கவனித்த பெரியவர் அவரது படுக்கை யறைக்கு என்னை அழைத்துப் போய் அங்கே சயனித்துக் கொள்ளும்படி கூறினர்.

நானும் படுத்துக் கண்களை மூடினேன். சுமார் அரைமணி நேரந் தூங்கி யிருப்பேன். வீதியில் மோட்டார் வந்து நின்ற ஓசை கேட்டு விழித்துக் கொண்டேன். அப்பால் நித்திரை வரவில்லை. முன் கட்டில் பூட்ஸ் சத்தம் கேட்டது. அதிலிருந்து வீட்டு எஜமான் வந்திருக்க வேண்டுமென்று ஊகித்துக் கொண்டேன்.

பிற்பகல் 3 மணி யிருக்கலாம். அந்தப் பெரியவர் என்னருகில் வந்து சிற்றுண்டி புசிக்க என்னை யழைத்தார். நான் அவர் பின்னே சென்றேன். அவர் அந்தப் பெண்கள் விடுதிக்கு அழைத்துப் போனர். உடனே அந்தக் கிலி திரும்பவும் என்னைப் பிடித்துக் கொள்ளும்போ லிருந்தது. வழியில் குழாயருகில் டிப்டி கலெக்டர் என்னைச் சந்தித்தார். 'கம் ஆன்' என்று அவர் புன்முறுவலோடு என்னை வரவேற்றார். 'நான் ஸ்டேஷனுக்குக் கார் அனுப்புவதாக விருந்தேன். ஆனல் அதற்குள் நீங்கள் வந்து விட்டதாகச் சொன்னர்கள்' என்று இங்கிலீஷில் சொன்னர். என்னல் பதில் ஒன்றுஞ் சொல்ல முடியவில்லை. அந்த உணர்ச்சி வலுவாக என்னைப் பிடித்துக் கொண்டு விட்டது. அவர் சொல்லியவற்றிற் கெல்லாம் என்னல் மெல்லச் சிரிக்கவும் தலை யசைக்கவுமே முடிந்தது. அப்பால் பெரியவர் என்னை இட்டுக்கொண்டு போனர்.

அந்த விடுதியின் எதிரே சில பெண்கள் குதித்துப்பாடி விளையாடிக்கொண் டிருந்தனர். எங்களைக் கண்டதே அவர்கள் உள்ளே ஓடி ஒளிந்தனர். முன் ஹாலிலிருந்த அறைக்குப் பெரியவர் என்னை அழைத்துச் சென்றார். அங்கிருந்த நாற்காலிகளில் நாங்கள் அமர்ந்தோம். எதிரே யிருந்த மேஜைமீது பிளேட்டில் சிற்றுண்டிகளும், கிளாஸ் டம்ளரில் காப்பியும் கொண்டுவந்து வைக்கப்பட்டன. ஒரு வெள்ளி டம்ளரில் தீர்த்தம் இருந்தது. அப்போது ஒரு ஸ்திரீ ஒரு இளம்பெண்ணை அழைத்து வந்தாள். அவர்களைக் கண்டபோது பலகார வகைகளை எடுத்து வாய்க் களித்துக் கொண்டிருந்த என் கை தடுமாறியது. அதனல் வாயினுள்

விழப்போன பலகாரத்தின் ஒரு துண்டு தவறி கீழே விழுந்தது. அதுகண்ட அந்த ஸ்திரீ 'அடியே! இவருக்கு நன்ருய் சாப்பிடக் கூடத் தெரியல்லியே!' என்று சொல்லவே என் உணர்ச்சி என் உடம்பையே ஒரு குலுக்குக் குலுக்கிவிட்டது. என் நிலைமையை உணர்ந்த அவள் என்னை மேலும் மேலும் பரிகசிக்கலானுள். ஆனுல் பெரியவர் அவள் துடுக்கை விரைவில் அடக்கிவிட்டார். அவள் அழைத்து வந்த பெண்தான் டிப்டி கலெக்டர் மகள் என்பதைத் தெரிந்து கொண்டேனே யல்லாது அவள் முகத்தை என்னுற் பார்க்கவே முடியவில்லை. என் சங்கோஜம் எல்லாம் நீங்கி நான் தலையை நிமிர்த்தியபோது அவள் எதிரே யில்லை. என்னைப் பார்க்கப் பிடிக்காமல் அதற்கு முன்னதாக ஓடிப்போய் விட்டாளாம்.

பெரியவர் என் மன நிலையை அறிந்தவர் போல 'நீங்கள் பார்க்காவிட்டால் இன்னொரு முறை அழைத்து வரச் சொல்லு கிறேன்' என்ருர். 'இல்லையில்லை போதும்' என்று கூறிவிட்டு எழுந்தேன்.

டிப்டி கலெக்டர் தம் ஆபீஸ் அறையில் (வீட்டில்) ஏதோ அலுவலா யிருந்தார். நான் ஊருக்குப் போகவேண்டும் என்று அவரிடந் தெரிவித்தேன். அன்றிருந்து மறுநாட் காலை போகலாம் என அவர் தெரிவித்தார். நான் உடனே லீவைப்பற்றிப் பிரஸ்தா பிக்கவே அவராவது பெரியவராவது மறுமொழி சொல்லவில்லை. வெளியில் கார் வந்து நின்றது. பெரியவர் என் பெட்டியை எடுத்துப் போய் அதில் வைக்கச் சொன்னுர். சேவகன் கொண்டுபோய் வைத்ததே நான் எல்லோரிடமும் விடை பெற்றுக்கொண்டு காரில் ஏறிக் கொண்டேன். இரண்டு நிமிஷத்தில் ஸ்டேஷனை அடைந்தேன். ரயிலும் வந்தது. டிக்கட்டை வாங்கிக்கொண்டு ஒரு பெரிய பெரு மூச்சுடன் வண்டியிலேறி யுட்கார்ந்தேன்.

நான் வீடு சேர்ந்ததே என் தமக்கையும், தாயும் என்னைச் சூழ்ந்து கொண்டு 'என்னடா சேதி! எந்தப் பொண்ணடா நோக்குப் பிடிச்சிருக்கு?' என்று ஆரம்பித்தார்கள். நான் எந்தப் பெண்ணை யாவது உள்ளபடியே கவனித்துப் பார்த்திருந்தாலல்லவா பதில் சொல்லுவதற்கு!—விழித்தேன். அதுகண்ட என் தமக்கை 'என்னடா முழிக்கிறே?' என்ருள்.

பெண்களைப் பார்த்தேன். ஆனுல், அவர்கள் முகங்களைப் பார்க் கலியே! என்றேன்.

'அட பைத்தியக்காரா! இப்படியும் ஒருத்தன் இருப்பானு?' என்ருள் தமக்கை கையை முகவாய்க் கட்டையில் ஊன்றிக்கொண்டு.

'ஐயோ இப்படியும் எனக்குப் பிள்ளை பிறந்ததே!' என்று சொல்லி விசனித்தாள் என் தாய்.

எனக்குக் கோபம் வந்தது. 'கலியாணமே வேண்டியதில்லை' என்று கத்தினேன். 'என்ன அப்படிக் கத்தினீர்களே!' என்றாள் சாரதா என்னருகே வந்து. அப்போதுதான் நான் சொப்பன உலகத்திலிருந்து திரும்பியதை உணர்ந்தேன். சாரதாவுக்கு இந்தக் கனவெல்லாம் பிடிக்கவே பிடிக்காது. 'கனவு நனவாவதும் உண்டு' என்ற கொள்கையுடையவள். ஆதலால் நான் இந்தக் கனவை அவளிடங் கூறவில்லை. நீங்களும் சொல்லிவிடாதீர்கள்.

**டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களால் தயார் செய்யப்பட்ட மருந்துகள் யாவும் கீழ்க்கண்ட விலாசங்களில் பெற்றுக்கொள்ளலாம்.**

**முத்துவிநாயகர் ஸ்டோர்,**
கல்லல் S. I. R. (இராமநாதபுரம் ஜில்லா.)

**லங்கா குரோஸரி ஸ்டோர்,**
செட்டித் தெரு, கொளும்பு.

**தி. ஞானப்பிரகாசம்,**
122, மோகல் வீதி, ரங்கோன்.

**வி. சா. காசி செட்டியார்,**
47, மார்க்கட் வீதி, சிங்கப்பூர்.

**A. V. R. A. அடைக்கப்ப செட்டியார்,**
19, ஜடாமுனி கோயில் தெரு, மதுரை.

**A. N. லெட்சுமணன் செட்டியார்,**
வலம்புரி, வலையபட்டி,
பொன்னமராவதி போஸ்டு, புதுக்கோட்டை ஸ்டேட்.

**A. V. R. A. ADYCAPPA CHETTIYAR,**
Lalji Mansing Building, 1st Floor Lohar Chawl,
Near Crawford Market, Bombay. 2.



'சந்தனத் தேவ'னில்

# சினிமாக் கலை சார்ந்த சிற்றுரை

[கலானந்தம்]

சென்ற இதழில் கதை, வசனம், பாட்டு ஸ்டுடியோ படப் பிடிப்பு, ஒலிப் பதிவுபற்றி விளக்கினோம். இதில் மற்றும் நடிகர், காக்ஷி, உடை முதலியனபற்றி ஆராய்வோம்.

நடிகர்களைப்பற்றிக் கதை யமைப்பில் சிறிது கூறினோம். வட நாட்டில் நடிகர்களை அநேகமாகப் பதிவாக மாதச் சம்பளத்தில் அமர்த்தி யிருக்கிறார்கள். இது பெருத்த லாபமும் சிறந்த கீர்த்தியும் தரும் ஓர் நல்ல முறையாகும். நடிகர்களுக்கு இது அபிமானத்தையும் ஆர்வத்தையும் கொடுக்கிறது. இந்த வகையில் ஒவ்வொரு படத்திற்காக நடிகர்கட்குக் கொடுக்கப்படும் ஏராளமானபணமும் மிச்சப்படும். மாதச் சம்பளத்தில் நடிகர்களை ஏற்படுத்துவதால், தங்கட்கு நிலைத்த ஊதியம் கிடைக்கிறதென்ற தைரியம் உண்டாகிறது. அதனால் அவர்கட்கு நம்பிக்கையும் கலையில் ஆர்வமும் ஊக்கமும் ஏற்படுகிறது. இவை காரணமாக படம் அழகுற அமைந்துவிடின் படச் சொந்தக்காரருக்குப்பெருமிதமான வரும்படியும் கிடைக்கிறது. அன்றியும் முதலாளி தொழிலாளி ஒற்றுமையும் ஏற்படுகிறது. நடிகர்கள் கள்ளங் கபடமற்ற



'சந்தனத் தேவ'னில்

முறையில் பிறரைத்தொட்டுப் பழகி, தங்கள் பாத்திரங்களை நடித்தலே படத்திற்கு அழகைக் கொடுக்கும். இயற்கையாகவும் இருக்கும். விரோதம் காரணமாகவோ அல்லது வேறு எந்தக் காரணத்தாலோ, நம் படங்களில் நடிகர்கள் தங்கட்குள்ள மனஸ்தாபத்தைக் காட்டிக்கொள்வது பெரிய தவருகும்.

மற்றும் நடிகருக்கு நம் நாட்டில், ஓர் கலைஞன் என்ற முறையில் கௌரவமளிக்கப் படுவது பெரும்பாலும் இல்லை. இது மிகவும் வெறுக்கத் தக்கது. கதையில், ஒரு பாத்திரத்திற்குரிய நடிகர்கள் கிடைக்கும் வரை பொறுத்திருந்து பொறுத்தமானவரைத் தேர்ந்தெடுத்தலே சிறந்த முறை. இதல்லாமல் தாட்சண்யத்திற்காகவும், பெயருக்காகவும் நடிகர்கள் தேர்ந்தெடுப்பது படத்திற்கு பெருங்கேடேயன்றி நல்லதல்ல. இன்னும் இது போன்றவைகளைத் கவனித்து அந்தந்தப் பாத்திரங்கட்குத் தக்க நடிகர்களைப் பொறுக்கி யெடுத்தால், நம் படங்கள் சிறந்த முறையில் முன்னேற்றம் அடையும். நடிகர் தேர்தலில் முதலாளிகள் தேர்ந்தெடுத்த நடிகர்களில் பாத்திரங்கள் அமைக்கப் படுவதை விடுத்து; டைரக்டரும் கூடயிருந்து அவ்வப் பாத்திரங்கட்குரிய நடிகர்களைச் சேர்த்தமைத்துச் சிறந்த முறையில் படக் கலையின் முன்னேற்றம் கருதிப் படம் எடுக்கப்படவேண்டியது அவசியமாகிறது.



'யயாதி'யில் புருவாக நடித்த மாஸ்டர் எம். எஸ். பாபு. 'மணிமேகலை'யிலும் நடிப்பார்.

இவை யல்லாமல் காக்ஷிகள் கூடுமானவரை இயற்கையாகவே யிருப்பது நலம். அதுவே பார்ப்பவர்கட்கு ரம்மியமா யிருக்கும்.

இயற்கைக் காக்ஷிகள் கிடைக்காமலும், காக்ஷிகள் அமைத்துத்தான் ஆக வேண்டும் என்ற இடங்கட்கே அமைக்கப்படுதல் வேண்டும். அதுவும் பெரும்பாலும் இயற்கையை யொத்த செயற்கைக் காக்ஷிகளாகவே இருத்தல் வேண்டும். காக்ஷிகள் அந்தந்தக் காலத்திற் கேற்றதாகவும், கதைக்குத் தக்கபடி அமைக்கப் படுதலே சிறந்த முறையாகும்.

நடிகர்க்கு உடைகள் கதை நிகழும் காலத்திற் கேற்றவாறாக ஆராய்ந்து அளிக்கப்படல் வேண்டும். ஒரு சிறிய உபநடிகர் முதல் கதாநாயகன் வரை அணியப்படும் உடைகள் கால தேச வர்த்தமானத்திற்குப் பொருத்தமானவையா எனப் பார்த்துக் கையாளப் படவேண்டியது மிகவும் அவசியம். படக் காட்சியில் பின் அணிச் சங்கீதம் அவ்வப்போது நிகழ்ச்சிக்குத் தக்கவாறு ஆனந்தம், துக்கம் முதலிய இடங்களில் ரசிக்கும்படி பொருத்தமானதாக அமைக்க வேண்டும். மேலும் எல்லாக் கட்டங்களிலும் பெரும்பாலும் பின்னணிச் சங்கீதம் சரியான முறையில் அமைக்கப்படுவது அழகா யிருக்கும்.

இவை யெல்லாவற்றையும் ஒவ்வொன்றிலும் தன் முழுக் கவனத்தையும் செலுத்திச் சரியான முறையில் நடத்தி வைப்பது டைரக்டரின் கடமையாகும். ஒரு படத்தை மேன்மைப் படுத்தவும் தாழ்மைப் படுத்தவும் கூடிய சக்தி டைரக்டரிட முண்டு. ஆதலின் பொதுவாக சுருங்கக் கூறுமிடத்து ஒரு படத்தின் வெற்றிக்கோ வீழ்ச்சிக்கோ காரணம் டைரக்டரே. எனவே மேற்கண்டவைகளை யெல்லாம் சிரத்தையுடன் கவனித்துப் படம் எடுக்கப்படின், நம் நாட்டுப் படங்கள், மற்ற நாட்டுப் படங்களைவிட மேன்மை பெற்று விளங்குவதோடு, படக் கலையும் அபிவிர்த்தி யடையும் என்பது திண்ணம்.

---

பள்ளிக்கூடத்திலிருந்து வேணு அழுதுகொண்டே வீட்டிற்கு வந்தான். குழந்தை அழுவதைக் கண்ட தாயார் 'கண்ணு ஏண்டா அழுரே!'

வேணு:—அம்மா உபாத்தியாயர் அடிச்சுட்டார்.

எதற்காக அடிச்சார்?

வேணு:—முதல், முதல் ஆங்கிலேயர் கடல் மார்க்கமாக இந்தியாவில் எங்கே வந்து இறங்கினுரென்று கேட்டார். எனக்கு அது தெரியிலே அம்மா.

தாயார்:—அதற்கு எப்படி அடிக்கலாம் முட்டாள்! சிறு குழந்தையாச்சே. எவனே வந்தானும்; எங்கேயோ இறங்கினனும். எனக்குக்கூடத் தெரியாதே, உனக்கு எப்படித் தெரியும் அழாதே கண்ணு.

—G. R. ராஜன், குகை



'மதுரை வீர'னில்

# சாவித்திரியே கமலா

[தண்டலம் கிருஷ்ணபுரம் G. கண்ணுசாமி கிராமணி]

புருஷன் மனைவியை வெறுத்தாலும் கற்புக்கரசியாய் விளங்கும் பெண், தன் கணவனையே விரும்புவாள்; அன்னிய ஆடவர்களைக் கனவிலும் விரும்பாள்; எவ்வளவு துன்பங்கள் அவளுக்கு வந்தாலும், அவள் பொறுமையுடன் சகித்துக்கொண்டிருப்பாள்.

'ஒருவர் நூறு ரூபாய்கள் கடன் கேட்டால் இருநூறு ரூபாய்க்குப் பாண்டு (Bond) எழுதிக் கொடுத்தால் தான் பணம் கொடுப்பேன்' என்று சொல்லும் சொக்கலிங்கப் பிரபுவுக்கு ஒரே ஒரு குமாரன் இருந்தான். அவர் ஏழைகளை ஏமாற்றி வட்டிக்கு வட்டி வாங்கி பெரிய பணக்காரனானர். அவர் தன் குமாரனுக்கு ஐந்து வயது ஆனதும் கல்வி கற்கப் பள்ளிக்கு அனுப்பினர். பள்ளியில் ஐந்தாவது வகுப்பு (V class) வரைக்கும் கமலநாதன் வாசித்த பிறகு தன் தகப்பனர் தொழிலில் ஈடுபட்டான்.

சொக்கலிங்கப் பிரபு சாரதா சட்டத்தை அசட்டை செய்து ஓர் உயர்ந்த பணக்காரக் குடும்பத்தில் பிறந்த ஐந்து வயதுடைய கமலவல்லியைப் பன்னிரண்டு வயதுடைய தன் குமாரன் கமலநாதனுக்குத் திருமணத்தை வெகு சிறப்புடன் செய்து வைத்தார். காலத்தின் வேகம் அதிகமாக ஓடிக்கொண்டிருந்தது. இயற்கையின் விநோதங்கள் இன்புற்று விளங்கின. ஒருநாள் பகல் பாழும் பணத்தைவிட்டுப் பரகதியடைந்தார் சொக்கலிங்கப் பிரபு. தந்தைக்குச் செய்ய வேண்டிய ஈமக்கடன்களையெல்லாம் செய்து முடித்தான் கமலநாதன்.

இரண்டு வருடங்கள் கழிந்து மறைந்தன. விவாகமான 7 வயதான கமலவல்லி தன் புருஷன் உத்திரவினுல் பிறந்தகத்திலேயே கல்வி கற்று வந்தாள்.

பதினறு வயதும் கமலநாதனுக்கு வந்தது. அவன் உள்ளத்தில் காதல் பூ, பூக்க ஆரம்பித்தது. அவன் அவ்வூரிலுள்ள விவாகமாகாத காமசுந்தரி என்னும் ஓர் மங்கையைக் காதலித்தான். அவனுடைய தாய் அவனைத் தடுத்தும் அவன் அம்மங்கையையே நேசித்து வந்தான். கமலநாதனுக்கும் அம்மங்கைக்குமிடையில் காதல் பூவானது காயாகி, பழமாகப் பழுத்தது. அவன் இளமையிலேயே காதல் வெள்ளத்தின் அலைகளால் மோதப்பட்டான்.

மாதங்கள் மறைய மறைய அவன் காதலித்து வந்த மங்கையின் வயிற்றில் ஏதோ கோளாறு ஏற்பட்டது! அவள்தான் கர்ப்பமுற்றிருப்பதாகத் தன் காதலனுக்கு அறிவித்தாள். அவளுடைய

காதலன் அநேக மருந்துகளைக் கொடுத்தும் ஒன்றும் பலிக்கவில்லை. அவளுடைய வயிற்றிலிருக்கும் குழந்தை தன் இல்லத்திலிருந்து வெளிவர நிராகரித்தது! என்னே, கள்ள நட்பின் அறியாமை! கமலநாதனுக்கு இன்னது செய்வதென்று விளங்கவில்லை. அவன் தன் காதலியுடன் வெளியூருக்குப் போய்விட வேணுமென்று நினைத்தான். அவன் தன் மாமியார் வீட்டுக்குப் போய்த் தன் மனைவியைப் பார்த்துவிட்டு வருவதில்லை. ஒருநாள் அவனுடைய தாயார் மனவேதனையால் நோயுற்று இறந்தாள். ஈமக் கடனை ஒழுங்குடன் நடத்தினன்.

வருடம் ஒன்று ஓடி மறைந்தது. எட்டு வயதுடைய கமலவல்லி தன் மாமியார் இறந்தவுடனே புகுந்தகத்திற்கு வர நேர்ந்தது. வீட்டு வேலைக்காகக் கமலநாதன் ஓர் வேலைக்காரியை நியமித்தான். கமலநாதன் காமசுந்தரியைக் காதலிப்பதாக, வேலைக்காரி கமலவல்லிக்குக் கூறிவிட்டாள். பாவம்; என் செய்வாள் சிறுமி! புன்னகை தவழும் அவளது வதனம் ஒளியற்று வாடி வதங்கிற்று.

கமலநாதன் இரவில் வீட்டில் படுப்பதே கிடையாது. அவன் தன் காதலியான காமசுந்தரி வீட்டில்தான் தூங்குவான். கமலவல்லியும் வீட்டிலிருக்கும் வேலைக்காரியும் மட்டும் இல்லத்திலிருப்பார்கள். ஓர் தினம் கமலவல்லி, இரவில் கனவு கண்டு பயந்தாள். மறுநாள் அவள் தன் கணவனை நோக்கி நாதா 'தாங்கள் இரவில் வீட்டில் படுக்காமலிருப்பதற்குக் காரணமென்ன?' என்று பய பக்தியுடன் கேட்டாள். 'நீ என்னை அவ்விதக் கேள்வியைக் கேழ்க்கக் கூடாது' என்று கமலநாதன் தன் மனைவியான கமலவல்லிக்குக் கோபக் குறியுடன் நவின்ருன்.

வைப்பாட்டியின் துர்ப்போதனையால் கமலநாதன் தன் மனைவியைத் தன் மாமியார் வீட்டுக்கு அனுப்பி விட்டான். என்னே பால்ய விவாகத்தின் கொடுமை! கமலவல்லியின் உள்ளம் பொங்கி எழுந்தது. அவள் தன் பெற்ருேர்களின் அறியாமையைக் குறித்து வருந்தினுள். அவள் தன் வாழ்க்கை என்னும் கப்பலில் ஏறினுள். ஆனல் அக்கப்பலை ஓட்டுவதற்குத் துணையா யிருந்த அவள் புருஷன் மதியை இழந்து மதிமயங்கி, காமசுந்தரி என்னும் பேயினிடம் காதல் கொண்டான். கமலவல்லி என்னும் கப்பல் நடுக்கடல் என்னும் தாய் வீட்டில் தவித்துக்கொண் டிருக்கிறது. அவள் பெற்ருேர்களின் அறியாமையே அவள் துன்பப்படுவதற்குக் காரணமன்ருே? அன்னிய ஸ்திரீகளின் சகவாசத்தில் தன் புருஷன் ஆழ்ந்திருப்பதை எப்படியாவது நல்வழியில் திருப்ப வேண்டு மென்று, கமலவல்லி தன் மனத்தில் சிந்தித்து மறுபடியும் கல்வி கற்கப் பள்ளிக்குப் போனுள்.

கமலவல்லி பிறந்தகத்திற்குப் போன பிறகு கமலநாதன் தன் ஆஸ்திகளை யெல்லாம் பாதி விலைக்கு விற்று நோட்டுக்களாக மாற்றிக் கொண்டான். அவன் தான் வசித்து வந்த நாகப்பட்டினத்தை விட்டு ஐந்து மாத கெற்ப ஸ்திரீயான காமசுந்தரியை அழைத்துக்கொண்டு சிலோனில் (Ceylon) உள்ள கண்டிக்குப் (Kandy) போய்விட்டான். அங்கே ஒரு பங்களாவை வாடகைக்கு எடுத்துக் கொண்டான். அவ்வூரிலுள்ள ரப்பர் (Rubber) தோட்டத்திற்கு ஓர் குமாஸ்தாவாக இருந்தான். அவன் ஏராளமான பணத்தை வாரி வாரிக் கண்ட வேசிகளுக்குக் கொடுத்தான். பணத்தின் அருமை அவனுக்கு என்ன தெரியும்! அநியாய வட்டிக்கு வாங்கின பணம் அதோ கதி யடையுமன்றோ? அவன் அநேக வியாதிகளினால் பீடிக்கப்பட் டிருந்ததால் டாக்டர்கள் அவன் இல்லத்திற்கு வர நேர்ந்தது. நாளுக்கு நாள் அவனுடைய பணம் தேய்பிறைச் சந்திரனைப்போல் குறைய ஆரம்பித்தது. அவன் தன் மனைவியை நினைப்பதே கிடையாது. சில மாதங்கள் மறைந்த பிறகு கமலநாதனுடைய காதலி காமசுந்தரி ஓர் ஆண் மகவை ஈன்றாள்; குழந்தை பிறந்தவுடனே மரித்தது. பல வருடங்கள் பறந்துக் கொண்டே யிருந்தன. மதுரைமா நகரில் வசித்துக்கொண் டிருந்த கமலவல்லி தன் தாய் வீட்டில் பதிமூன்றாவது வயதில் புஷ்பவதியானாள்; அப்போது ஒன்பதாம் வகுப்பில் வாசித்துக் கொண்டிருந்தாள். அவள் கணவன் இருக்கின்றயிடம் ஒருவருக்கும் தெரியாததால் அவள் தந்தை தன் மருமகனுக்குத் தன் மகள் ருதுவான விஷயத்தைத் தெரியப்படுத்தவில்லை. புத்தி யறிந்த பிறகும் கமலவல்லி பள்ளிக்குச் சென்று படித்து வந்தாள். அவள் தந்தை தன் மகளை வேறு யாருக்காவது மணம்செய்து கொடுத்துவிடத் தீர்மானித்தார்; ஆனால் அவர் மகள் மணம் செய்து கொள்ள மறுத்தாள்.

எல்லாம்வல்ல இறைவனருளால் எஸ். எஸ். எல். சி. (S. S. L. C.) பாஸ் ஆனாள். உருண்டு திரண்டு வந்த அவளுடைய அங்க அவயவங்களைக் கண்ட மதியற்ற சில மாந்தர்கள் மயங்கினர். பெற்றோர்களின் உதவியால் அவள் கல்வி கற்கக் காலேஜுக்கு (College) அனுப்பப்பட்டாள். அவள் காலேஜில் நன்றாகக் கல்வி கற்று வந்தாள். அவள் படிக்கும் திறமையைக் கண்டு ஆடவர்கள் ஆச்சரியமுற்றனர். அவள் பள்ளிக்குப் போகும்போதும் வீட்டுக்கு வரும்போதும் ஆடவர்களின் ஆர்ப்பாட்டம் சொல்லத் தரமன்று. அவளைக் கெடுக்க அநேக ஆடவர்கள் அவள் பேரில் காதல் வலைகளை வீசினர்கள்; ஆனால் அவள் அவ்வலைகளைக் கண்டதுண்டம் செய்தாள். 'மணந்தால் உன்னையே மணப்பேன், இல்லையேல் இறப்பேன்' என்று உறுதி மொழிகளைக் கூறினவர்களுக்கும்

கண்ஜாடை காட்டும் கசடர்களுக்கும் சரியான சூடு கொடுத்தாள். காம வெறிகொண்டு பார்க்கும் களங்கமற்ற கயவர்களுக்குக் கமலவல்லியின் மேல் சிறிது பயம் உண்டாயிற்று. 'கமலவல்லி கற்புடைய கண்டிப்பான பேர் வழி' என்று அக்கல்லூரியில் வாசித்து வந்தவர்கள் உணர்ந்தார்கள். அவள் கற்பிலும் சுதந்திரமளிக்கும் தேச பக்தியிலும் மேன்மையுற்று விளங்கினாள்.

கண்டியில் வசித்துவரும் கமலநாதன் மாலை நேரங்களில் வீதிகளின் வழியாகக் கால் நடையாக நடந்து காற்றோட்டமுள்ள இடங்களுக்குச் சென்று உலாவி விட்டு வீட்டுக்குத் திரும்புவது வழக்கம். அவன் குடியிருந்த வீட்டுக்கு மூன்றாவது உள்ள தெருவில் ஒருநாள் வரும்போது அவன் ஓர் அழகிய வாலிப ஸ்திரீ மேல் மாடியில் நின்றுக்கொண் டிருப்பதைக் கண்டான். இருவர் கண்களும் ஒன்றை யொன்று பார்த்து மகிழ்ந்தன. அவளும் அவனைப் பார்க்காதவள் போல் நாணமுற்று விர் என்று உள்ளே போய்விட்டாள். அவள் உள்ளே போனதும் அவளிடம் உள்ள ஓர் சக்தி அவனுடைய மனதைப் படீர் என்று தாக்கி ஆனந்தம் பொங்கி அவனுடைய மூளைக்கும், நரம்புகளுக்கும் ஒருவித உணர்ச்சியைக் கொடுத்து முக மலர்ச்சியை உண்டாக்கியது போலிருந்தது.

கமலநாதன் நாள்தோறும் தவறாமல் மேல்மாடியில் கண்ட ஸ்திரீயின் தரிசனத்திற்காக வீதியின் வழியாகப்போய் வருவதும் அவளைப் பார்ப்பதுமாக விருந்தான். அந்த அழகிய யுவதி ஓர் பள்ளிக்கூடத்தில் தலைமை உபாத்தியாயினி பதவியிலிருப்பதாகச் சில நபர்களின் மூலமாகத் தெரிந்து கொண்டான். அந்த யுவதி வாரத்திற் கொருமுறை சினிமாப் பார்க்கப் போவாள். அவளை அவன் அடிக்கடி சினிமாவில் பார்ப்பதுண்டு.

ஒருநாள் சினிமாவில் 'அம்பிகாபதிப்' படக்காட்சி நடந்து கொண்டிருந்தது. கமலநாதனும், காமசுந்தரியும் அப்படக் காட்சியைப் பார்ப்பதற்காக வந்திருந்தார்கள். கமலநாதன் தான் மேல் மாடியில் பார்த்த ஸ்திரீ தன் பக்கத்தில் போடப்பட்டிருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு படக்காட்சியைப் பார்த்துக்கொண் டிருப்பதைப் பார்த்தான். அப்போது அவன் அடைந்த ஆநந்தம் அளவு கடந்திருந்தது. அவனுடைய ஒரு கண் படக்காட்சியைப் பார்ப்பதும், மற்றொருகண் பக்கத்திலிருக்கின்ற ஸ்திரீயைப் பார்ப்பதுமாக விருந்தது. இன்டர்வெல் (Interval) நேரம் வந்தது. அப்போது படக்காட்சி நடவாம லிருந்தது. மின்சார விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. அவனுடைய பக்கத்திலிருந்த அந்த ஸ்திரீ ஒரு துண்டுக் கடிதத்தில் ஏதோ சங்கதி எழுதி ஒருவருக்கும்

தெரியாமல் படக்காட்சி நடந்துகொண் டிருக்கும்போது வெகு சீக்கிரத்தில் கமலநாதனிடம் கொடுத்தாள். அவனும் அதை சந்தோஷத்துடன் பெற்றுக் கொண்டான். படக்காட்சி முடிவு அடைந்ததும் அவரவ ரில்லத்திற்கேகினர்.

அன்றிரவு கமலநாதன் அக்கடிதத்தைத் தன் காதலி அறியா வண்ணம் வாசித்து மெய் மறந்தான். அத்துண்டுக் கடிதத்திலுள்ள விஷயமாவது,

கண்டி
1—5—37.

என் ஆருயிர் அன்பரே,

நான் உங்களைப் பார்த்த நாள்முதல் என் உள்ளம் உங்களையே விரும்புகிறது. நீர் ரப்பர் தோட்டத்தில் ஒரு குமாஸ்தா வேலையி லிருப்பதும் எனக்கு முன்பே தெரியும். நான் ஒரு தலைமை உபாத்தியாயினி என்பதை நீர் அறிந்து கொள்ளும். நாளை மாலை ஆறு மணிக்கு 'குட்லக்' என்னுமிடத்தில் நீர் என்னைச் சந்திக்கவும்.

இப்படிக்கு,
சாவித்ரி.

கமலநாதன் இதைத்தான் படித்தான். அன்றிரவு அவன் நன்றாகத் தூங்கவில்லை. பொழுது விடிந்தது. அவன் அன்று மாலை ஐந்து மணிக்கே 'குட்லக்' என்னுமிடத்தில் சாவித்ரியின் வரவை எதிர்ப்பார்த்திருந்தான். கண்களைக் கவரும் ஆடைகளை உடுத்திக் கொண்டு மாலை ஆறு மணிக்கு சாவித்திரி அவனெதிரில் காட்சி யளித்தாள்.

கமலநாதன்:—உனக்கு விவாகமாய் விட்டதுபோ லிருக்கிறது! உன் கணவன் எங்கே யிருக்கின்றார்? அவருடைய வேலை யென்ன?

சாவித்ரி:—அன்பரே, என் கணவன் வீட்டிலிருக்கிறார். அவருக்கு ஒரு வேலையும் செய்யத் தெரியாது; அவர் படுத்த படுக்கையிலேயே இறக்குந் தருவாயி லிருக்கிறார். வேசிகளிடத்தில் விலை கொடுத்து வாங்கிய நோய்களே அவரை இப்போது வாட்டு கின்றன. உமக்கு விவாகமாயிற்றோ?

கம:—எனக்கு விவாகம் ஆய்விட்டது. என் மனைவியை விட்டு விட்டு, என் ஊரில் வசித்து வந்த கலியாணமாகாத காமசுந்தரி என்னும் பெண்ணை அழைத்துக்கொண்டு கண்டிக்கு வந்து விட்டேன். நான் வசித்த ஊர் நாகப்பட்டிணம். என் மனைவி பார்வைக்கு அதிக அழகாயில்லை; அவளுடைய நிறம் சிகப்புத்தான்; படிப்பு வாசனை அறியாத மிருக இனத்தில் சேர்ந்தவள்; எனவே, என் மனம் அவளை நாடவில்லை.

சாவி:—நீர் எத்தனை பெண்களை ஏமாற்றிக் கற்பழித்தீரோ! உம்மை நம்பின என்னையும் நீர் ஏமாற்றுவீரோ? நீர் உமது மனைவியுடன் வாழாமல் அவளுக்குத் துரோகம் செய்துவிட்டு வாழ்வது ஓர் வாழ்க்கைதானோ?

கம:—நீர் பிரியப்பட்டால் உடனே என் மனைவியை அழைத்துக்கொண்டு வருகின்றேன்; நாம்மூவரும் ஒற்றுமையுடன் வாழலாம்; சத்தியமாக உன்னைக் கைவிடமாட்டேன். நான் வைத்துக்கொண்டிருக்கின்ற காமசுந்தரி இப்போது அதிகப் பிரியமாக என்னிடத்தில் நடந்து கொள்வதில்லை; அவளால் என் பணம் பாதியும் அழிந்தது.

சாவி:—நீர் காமசுந்தரியை விட்டு எப்போது பிரிவீரோ அப்போது தான் நான் உம்முடன் காதல் கொள்ள முடியும். சரி, நேரமாகிறது. அடுத்தவாரம் வெள்ளிக்கிழமை இதே நேரத்தில் உம்மைச் சந்திக்கின்றேன். விடை கொடுங்கள்.

இருவரும் தத்தம் இல்லத்திற் கேகினர். காமசுந்தரி என்னும் காதல் கொடியின் இலைகள் உதிர உதிர, சாவித்திரி என்னும் அன்புக் கொடியின் இலைகள் துளிர்க்க ஆரம்பிப்பதைக் கமலநாதன் கண்டான். சாவித்திரியின் அன்புக் கொடியினல் சிக்குண்டான். ஒரு நாள் காமசுந்தரி இரண்டாயிரம் ரூபாய்களுள்ள ஆபரணங்களை அணிந்து கொண்டு ஒரு வாலிபனுடன் ஓடிவிட்டாள்.

கமலநாதன் காமசுந்தரி ஓடிவிட்டதைப்பற்றி ஆனந்தங் கொண்டான். குறித்த வெள்ளிக்கிழமையும் வந்தது. அந்த நேரத்தில் சாவித்திரியும் கமலநாதனும் ஒருவரை யொருவர் சந்தித்தனர். காமசுந்தரி ஓர் மைனருடன் ஓடிவிட்டதைச் சாவித்திரிக்குக் கூறினன். ஆவ்விடத்தைவிட்டு இருவரும் கால் நடையுடன் நடந்து கொண்டு ஏதேதோ பேசிக்கொண்டு வழிநடந்தார்கள்.

அவன் சாவித்திரியை அழைத்துக்கொண்டு தன் பங்களாவிற்கு வந்தான். முத்த யுத்தங்கள் இருவருக்குள்ளும் முடிவு பெற்றன. சாவித்திரி தன் காதலனை நோக்கி, 'காதலரே, உங்களது மனைவியைப் பத்து நாட்களுக்குள் உமது இருப்பிடத்திற்கு அழைத்துக்கொண்டு வரவும்; இல்லையேல் உங்களை நிராகரிப்பேன்' என்ருள். அன்றிரவு விடை பெற்றுக்கொண்டு தன் வீட்டுக்குப் போனள் தலைமை உபாத்தியாயனி சாவித்திரி.

மறுநாள் கமலநாதன் தன் மனைவி வசித்துவந்த மதுரைமா நகருக்குப் போகப் புறப்பட்டான். அவன் மதுரைமா நகரையடைந்ததும் தன் மாமியார் வீட்டண்டை வந்தான். அவனுடைய மாமியார் வீடு பூட்டப்பட் டிருந்தது. அவனுடைய மாமனர்,

மாமியார், மனைவி கமலவல்லி, இம் மூவரும் கண்டிக்குப் போய் விட்டதாகப் பக்கத்து வீட்டுப் பரமசிவ ஐயர் அவனிடம் பகன்றார். உடனே அவன் அவ்விடத்தைவிட்டு கண்டிக்குப் போகப் புறப் பட்டான். அவன் அதிக மனவருத்தப்பட்டுக் கண்டியிலிருக்கும் தன் இல்லத்திற்கு வந்தான். கண்டியிலிருந்து மதுரைமா நகருக்குப் போய்வர ஒன்பது நாட்களும் ஓடிமறைந்தன. குறித்த நாளில் சாவித்திரி கமலநாதன் வீட்டிற்கு வந்தாள்.

சாவித்திரி:—காதலரே, உமது மனைவியை அழைத்து வந்தீரோ? எங்கே?

கமலநாதன்:—காதலி, என்னென்றுரைப்பேன்! என் மனைவி யும், அவளுடைய தாய், தந்தையர்களும் கண்டிக்கே வந்துவிட்டார் களாம்! என்னே விந்தை! நீயே என் மனைவியின் வீட்டுக்கு வந்தால் உண்மை விளங்கும். என் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட காதல் கனியே, என் உடல், பொருள், ஆவி மூன்றையும் உனக்கே அர்ப்பணம் செய்துவிட்டேனே. கண்மணி காதலி, என்னை மட்டும் கைவிடாதே.

சாவித்திரி:—என் ஆருயிர்க் காதலரே, நாம் உமது மனைவி, மாமனார், மாமியார் இம் மூவரையும் தேடிக் கண்டு பிடிப்போம். வெறுமனே யிருந்தால் யாது பயன்? போகலாம். (இருவரும் போகின்றனர்.)

சாவித்திரி கமலநாதனை அழைத்துக்கொண்டு தன் வீட்டிற்குப் போனாள். கமலநாதனுடைய மாமனாரும், மாமியாரும் அவ்வீட்டி னுள் இருப்பதைக் கண்டு கமலநாதன் ஆச்சர்யமுற்றான். உடனே கமலநாதன் அவர்களை நோக்கி, 'என் மனைவி கமலவல்லி, எவ்விடத்திலிருக்கிறாள்'; 'உடனே தெரிவிக்க வேண்டும்' என்று கேட்டான்.

'இங்கே நின்றுக்கொண் டிருப்பவளே உமது மனைவி கமல வல்லி; சாவித்திரி என்று புனைப் பெயருடன் இருப்பவளே உமது மனைவியாகிய கமலவல்லி; அவள் B. A. L. T. வரையில் மதுரையில் படித்தப் பிறகு மதுரையிலேயே ஒரு தலைமை உபாத்தியாயினி பதவியிலிருந்தாள்; நீர் கண்டியில் இருப்பதாகச் சிலர் எங்களுக்குச் சொல்ல, நாங்கள் மூவரும் இவ்விடம் (கண்டிக்கு) வந்தோம்; உன் மனைவி இவ்வூரிலுள்ள ஒரு பள்ளிக்கூடத்தில் ஓர் தலைமை உபாத்தியாயினி பதவியை ஏற்றுக் கொண்டாள்; உன் அன்பைப் பெறுவதற்காகவும், உன்னையே அடைவதற்காகவும் முயற்சி செய் தாள் சாவித்திரி என்னும் உன்னுடைய மனைவி கமலவல்லி' என்று கமலவல்லியின் தாய் தந்தையர் கமலநாதனுக்குக் கூறினார்கள்.

இதைக் கேட்டதும் கமலநாதனுக்கு மெய் சிலிர்த்தது. அவன் சாவித்திரியைத் தன் மனைவி கமலவல்லி என்று உணர்ந்தான். அவன் தன் மனைவியிடம், தான் செய்த குற்றத்திற்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். அதுமுதல் அவன் அடைந்த ஆனந்தத்திற்கு எல்லையில்லை. அவனும் அவன் மனைவியும் காதல் கனிகளை உண்டு வந்தனர். நான்கு ஆண்டுகள் கழிந்த பிறகு கமலவல்லி ஓர் ஆண்மகவையும், ஓர் பெண்மகவையும் ஈன்று இல்லறத்தை இன்பமுடன் நடாத்தி வந்தாள். கற்பின் மகிமையா லன்றோ, வெறுத்த கணவனை விரும்பும்படி செய்தாள் கற்புக்கரசி கமலவல்லி!

---

கந்தன் தான் சோமன் வாங்கிய கடையினுள் நுழைந்து, உன்னிடத்தில் வாங்கிய துணி ஒரு மாதம்கூட நிற்கவில்லையே என்றான்.

கடைக்காரன்:—அது சரி, நீ அதற்காகக் கொடுத்த இரண்டு ரூபாய் இரண்டு நாள்கூட நிற்கவில்லையே அதற்கு என்ன சொல்லுகிறாய்.

—கே. வி. கிரி

---


இனாம்! இனாம்!! இனாம்!!!

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்கள் எழுதிய

**அனுபவ வைத்திய நூல்**

**பழைய இரண்டாம் பாகம் இனாம்**

வேண்டுவோர் 4 அணா தபால் தலை (ஸ்டாம்பு) அனுப்பினால் புத்தகம் புக் போஸ்டில் அனுப்பி வைக்கப்படும்.

---

**'தமிழரசு' பைண்டு வால்யம்**

**4-வது மலர்**

12 மாத சஞ்சிகைகளையும் ஒன்று சேர்த்து மிக அழகாக பைண்டு செய்திருக்கிறது. வேண்டுவோர் 12 அணா தபால் தலை (ஸ்டாம்பு) அனுப்பினால் 1 புஸ்தகம் அனுப்பி வைக்கப்படும். வெளி நாடுகளுக்கு மாத்திரம் 1 ரூபாய் ஸ்டாம்பு அனுப்ப வேண்டும்.

**'தமிழரசு' புத்தகாலயம்,**

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

# 'ஐயையோ நானல்ல விடுங்கோ!'

[T. V. வேதமூர்த்தி]

மகாதேவ ஐயர் தன் புத்திரிக்கு நேர்ந்த வரனைபற்றித் தன் மனைவியான கனகவல்லியுடன் பின்வருமாறு சம்பாஷிக்க லாயினர்.

மகாதேவ ஐயர்:—அடி நம்ம சுப்பு போன ஜென்மத்தில் செய்த புண்ணியவசமோ என்னமோ தங்கமான ஆம்படையானை அடைந்தாள். நம்ப சுப்புக் கேற்ற ஆம்படையான் நீலகண் டைய்யர். நீலகண்டைய்யருக் கேற்றவள் நம்ப சுப்புதான். இரண் டாம்தாரம் என்றாலும் கூடப் பரவாயில்லையடின்ன! ஆகா! இரு வருக்கும் வெகு பொருத்தம்.

கனகவல்லி:—மெதுவாச் சொல்ரேளே. நன்னாயிருக்கு அதற் கென்ன சந்தேகம்? என்று பின்னும் ஏதோ சொல்லப் போகும் சமயம், காமகோட்டி (விதவை) ஓடிவந்து அடே அண்ணா குழந்தை சுப்பு, திரண்டுட்டாடா திரண்டுட்டா என்று மிக முகமலர்ச்சியுடன் சொன்னாள். நிற்க காமக்கோட்டியைச் சற்று அறிந்து கொள் வோம்.

காமக்கோட்டி, மகாதேவ ஐயரின் சிறிய தாயாரின் புத்திரி. இவள் தாய் தகப்பனற்ற திக்கற்றவள். இவளுக்குச் சுமார் 19 அல்லது 20 வயதிருக்கலாம். இவள் தன் 15 வயதிலேயே புருஷ னைப் பறிகொடுத்து, இப்பொழுது தலையையும் சிரைத்து, வெள்ளைப் புடவையுடன் விளங்குகிறாள். காமக்கோட்டி (விதவை) யாரிடத் திலும் சங்கோஜமின்றியே பேசுவாள். மிகத் துணிச்சல் சுபாவ முடையவள். தான் சிறு வயதிலேயே விதவையானதினால் இல்வாழ்க் கையைபற்றிப் பேசினால் வெகு திருப்தி. தன் வார்த்தைக்கு மாறாக யாராவது பதில் சொன்னால் திடீரென அழுகை வந்து விடும். சுருங்கச் சொல்லின் அவள் ஒரு தினுசானவள்.

தன் குழந்தை ருதுவானதைக் கேட்டு ஆனந்தமடைந்தவராய் மகாதேவய்யர், ரொம்ப சந்தோஷம் பழம் நழுவிப் பாலில் விழுந்த தைப் போலாச்சு. சரி, ருதுவான நட்சத்திரம் என்னவோ கவனித்தியோ?

காமக்கோட்டி அதெல்லாம் நான் பாத்துட்டுத்தாண்டா அண்ணா வர்ரேன்.

நான் எந்த நட்சத்திரத்திலே எந்த வேளையிலே திரண்டேனோ அதே நட்சத்திரம். அதே வேளையில்தான் திரண்டா நம்ம சுப்பு.

மகாதேவய்யர் கோபமும் அருவருப்பும் கொண்டவராய் அட பீடையே நீ மொட்ட முண்டே முன்னாலே வந்து சொல்ரச்சியே

நினைச்சேன். ஐய்யய்யோ என் குழந்தை உன் நட்சத்திரத்திலா ருதுவானு. அட கர்மகாண்டமே நீ திரண்ட வேளை எமகண்டமும் மூல நட்சத்திரமும் ஆச்சே! அட அசட்டுப் பிணமே வெளியே சொல்லித் துலையாதே.

இவ்வார்த்தைகளைக் கேட்ட காமக்கோட்டி (விதவைக்கு) ஆத்திரம் தாங்காதவளாய் (அழுது கொண்டே) அடே அண்ணு! இது தர்மமாடா. என்ன தவறு செய்துட்டேன். என் ஆத்துகாரர் இருந்தா இப்படி யெல்லாம் பேசப் பார்த்துண்டிருப்பாரா? உன் பெண்ணுடைய கல்யாணத்தில் மணப்பந்தலைக் கூடப் பார்க்க வரப் படாது என்று சொல்லிட்டே. நேக்கு மாப்பிள்ளையைப் பாக்க ணும் பாக்கணும்னு மனதெல்லாம் அடிச்சிண்டது (ஒரே அழுகை)

மகாதேவய்யர்:—ஏண்டி கள்ளி அழுரே, எல்லாம் தெரியும் நிறுத்து. அடியே காமு இப்படிவா. சாந்தி காலத்திலே வெளியே உன் தலையைக் காட்டப்படாது தெரியுமா? தப்பித் தவறி மாப் பிள்ளையைப் பார்க்கணுமென்று வந்துட்டியோ ஸ்ரீ ஹத்தி வந்தாலும் வர்ரதுன்னு ஒரே அடியாய் அடிச்சுக் கொண்ணுடுவேன் தெரிஞ் சுண்டியா?

மேல் குறித்த சம்பவம் நடந்து சுமார் இரண்டொரு மாதங் கள் கழிந்தன.

மகாதேவய்யர் வீட்டு வாசலில் ஒரு வண்டி வந்து நின்றது. அடுத்த நிமிஷத்தில் வாரும் மாப்பிள்ளே வாரும் என்ற உபசார மொழியுடன் மகாதேவய்யர் நீலகண்டையரை வரவேற்ருர்.

மேல் குறித்த மகாதேவய்யர் உபசார மொழியை ஆமோதித் தவராய் ஆமாம், குழந்தை சுப்பு, மாமி எல்லோரும் சௌக்கியம் தானே என்ருர் நீலகண்டய்யர்.

மகாதேவய்யர்:—ஆகா எல்லாரும் சௌக்கியம். என் தந்தி எப்போ உங்கள் கையில் கிடைத்தது?

நீலகண்டய்யர்:—நேற்றுக் காலே $10\frac{1}{2}$-மணிக்கு. உடனே ஸ்கூல் எட்மாஸ்டரிடம் ஒரு வாரம் லீவு வாங்கிக்கொண்டு இரவு திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸில் ஏறி வந்து சேர்ந்தேன்.

மகாதே:—ரொம்ப திருப்தி. வாரும் மாப்பிள்ளே உள்ளே போகலாம் என்று நீலகண்டையர் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு போனுர்.

மாப்பிள்ளையை உள்ளே அழைத்து ஒருவர்க்கொருவர் பரஸ் பரம் பேசி முடிந்த பின், மகாதேவய்யர் 'இன்றே நல்லநாள் ஆகை யால் இன்றைக்கே சாந்தியை முடித்துவிட வேண்டும்' என்று மாப் பிள்ளயை வேண்டிக்கொள்ள, நீலகண்டையரும் இசைய மகா தேவய்யர் உடனே சாந்திக்கு வேண்டிய சாமான்களைச் சேகரித்து

வர வெளியில் சென்றார். கனகவல்லி உக்கிராணத்தில் சாந்திக்கு வேண்டிய பக்ஷணாதிகளைச் செய்வதற்குக் கவனித்துக் கொண்டிருந்தாள். குழந்தை சுப்பும் அம்பியும் கனகவல்லிக்குத் துணையாக உக்கிராணத்திலேயே இருந்தார்கள்.

நீலகண்டையர்தான் வந்த களைப்பைப் போக்கிக் கொள்ள ஒரு தினுசாய், தட்டுத் தடுமாறி மெத்தைக்குச் சென்றார். மெத்தைப்படியின் பின்பக்கம் நவராத்திரிக் கொலு பொம்மைகளைச் சிங்காரித்து வைக்கப்பட்ட ஓர் அறையில், சாந்தி விசேடம் கழியும்வரை வெளியில் வரப்படாதென்ற தடையுத்தரவு போடப்பட்ட காமக் கோட்டி (விதவை) அடைபட்டிருந்தாள். மாப்பிள்ளையின் கனைப்புச் சத்தத்தைக் கேட்டு மாப்பிள்ளைதான் மாடிக்குப் போகிறார் என்று யூகித்துக் கொண்டவளாய் 'ஆஹா நாம் எவ்வளவு காலமாய் சுப்பு அம்படையானைப் பார்க்கணும் பார்க்கணுமென்று எண்ணினோம். அதற்கு இன்றுதான் சமயம். அண்ணா இப்போத்தான் வந்து என்னை ஜாக்கிரதை என்று மிரட்டிவிட்டு வெளியில் போனான். மற்றவர்களெல்லாம் உக்கிராணத்தில் இருக்கிறார்கள் போலிருக்கு. நல்லசமயம் இப்பொழுதுதான் அவரை நாம் பார்த்து எப்படியாவது பேசிவர வேண்டும். ஒரு வேளை அவரும் 'முண்டச்சி முன்னாலே வந்தயே என்று சொல்லி விடுவாரோ' என்று எண்ணினாளாயினும் பின்பு ஓர் வித முடிவுக்கு வந்தாள்.

அந்த அறையில் ஏறக்குறைய ஓர் ஆள் உயரத்திக்குச் சமமாய் ஒரு பெண் சிலைக்குச் சிங்காரிக்கப்பட்ட, புடவை கில்ட்டு நகை முதலியவைகளைத் தான் யெடுத்துப் போட்டுக்கொண்டு, அச்சிலைக்கு அழகுக்காக வைக்கப்பட்ட டோப்பாவைத் தான் யெடுத்துத் தன் மொட்டைத் தலையில் வைத்துக்கொண்டு, தன்னைச் சிங்காரித்துக் கொண்டாள்.

அப்பொழுது அவளைப் பார்த்தால் ஓர் இளம் வயது மங்கை யென்றே சொல்லலாம். அதிலும் தான் வெகு காலமாகத் தலை மொட்டையுடனும் வெள்ளைப் புடவையுடனும் விளங்கிய அவளுக்குத், தன் மாறுதலான யௌவன ரூபத் தோற்றத்தைக் கண்ணாடி முன் பாத்தவுடன், தன்னையும் அறியாத ஓர்வித எண்ணம் உண்டாயிற்று. மெதுவாகத் தான் இருந்த அறையின் கதவைத் திறந்து சுற்றும் முற்றும் பார்த்து முன்பக்கம் வந்து மாடிப்படியின்மேல் போனாள்.

மாடியின் ஹாலின் முன் பக்கம் மிக வெளிச்சத்தைக் கொடுத்துக் கொண்டிருந்த இரண்டு ஜன்னல் கதவுகளின் உதவியினால், யாராவது வந்து பார்த்துவிடப் போகிறார்கள் என்ற நோக்கத்துடன் இரண்டு ஜன்னல் கதவுகளையும் வெடுக்கென்று சாத்தி

ளுள். இந்தச் சத்தத்தைக் கேட்ட மாப்பிள்ளை யாரென்று கொஞ்சம் அதிகார தோரணையில் கேட்டார்........

காமக்கோட்டி சற்றுப் பிரம்மித்து மௌனம் சாதிக்கிருள்!

நீலகண்டையர்:—வந்தது யாரு....

காமக்:—(மெதுவாக) உம்.

நீலகண்:—உம்ஞ? யாரு? இப்படி வாங்களேன்.

காமக்கோடி:—(மௌனம்)

நீலகண்டையர்:—என்ன சப்தத்தையே காணும். (மெள்ள வந்து பார்த்து) ஓகோ நீயா! வா வா வா. ஏண்டி கண்ணே சுப்பு. ஏன் முக்காடு போட்டுண்டு திரும்பி நிக்கிரே. ஆப்படையான் எப்படி இருக்கான்னு பார்க்க வந்தியா வா வா உட்கார்.

காமக்கோட்டி:—(சற்று இழுப்பாய்) ஆ—கும். சீ.சீ. (வெட்கம் தலை குனிதல்).

நீலகண்:—அடடே வெட்கப் படாதே. இனி நாம் சங்கோஜம் இல்லாமல் இருக்க வேண்டியதுதானே. ஓகோ நீ வெட்கப் படுவதை நான் தெரிந்து கொண்டேன். கதவு திறந்திருக்கே. யாராவது பார்த்தா ஏளனம் பண்ணுவா என்று எண்ருயா? உடனே கதவைச் சாத்தி கண்ணே இப்படி வா. இனி என்னுடன் சந்தோஷமாகப் பேசு.

கொஞ்சம் வெளிச்சமாய் இருந்ததும் மறைந்து, நீலகண்டையர் கண்களுக்குக் காமக்கோட்டி தன் மனைவியான சுப்பு என்பதில் சந்தேகமே சிறிது மில்லை. பின்னும், அடியே நான் எவ்வளவு சொல்ரேன். இன்னும் என்ன வெட்கம்? இன்னைக்குச் சாந்தி ஆயிடுத்துன்ன அப்புறம் எல்லாம் சாந்தியாயிடும். (கையைப் பிடித்து இழுத்து உட்காரவைக்க முயலுகிருர். காமக்கோட்டி தடுத்து) ஐயையோ நான் அல்ல விடுங்கோன்ன.

நீலகண்டைய்யர்:—சீ. புத்தியில்லாப் பெண்ணே. நீயல்லவா நன்னுயிருக்கிறதடி உளறுதே. இந்த ஜாலமெல்லாம் நேக்குத் தெரியும்.

காமக்கோட்டி:—(பின்னும்) ஐயையோ நான் யார் தெரியு மோன்னே?

நீலகண்:—அடி ஏண்டி! நேக்கு எல்லாந் தெரியும் உன் விளையாட்டு. நீதான் என் ஆத்துக்காரி சுப்பு. அப்படியே இரு நான் கொடுக்கிறேன் முத்தம் என்று பலாத்காரமாய்ப் பிடிக்க, அவள் டோப்பு கையில் பிடிபடவே அதைப் பிடித்து அடி என் கண்ணே வாயேனிப்படி என்று இழுக்க, மறுவிஞடி டோப்பு கையுடன் வரக் கண்ட நீலகண்டையர், ஒருவித பயமும் ஆச்சரியமும் கொண்டவ

ராய் ஐயையோ நீ யார், உண்மையைச் சொல்லிவிடேன். என் மானம் போயிடும் போலிருக்கே.

காமக்கோட்டியும் பயந்தவளாய் நான் காமக்கோட்டி என்ருள்.

நீலகண்:—காமக்கோட்டியா? மகாதேவய்யர் தங்கையா? அறுத்துட்டவளா?

காமக்கோட்டி:—(மெல்லிய குரலில்) ஆமாம்.

நீலகண்:—நீயேண்டி மொட்ட முண்டே இந்த வேஷத்துடன் வந்து தொலேஞ்சே. (இன்னும் எதோ சொல்லு முன்) மாப்பிள்ளே கதவைத் திறங்கோ என்ற அம்பியின் சப்தம் கேட்டுத் திடுக்கிட்டு, ஐயையோ இந்த தர்மசங்கடத்திற்கு என்ன செய்வேன். அடி முண்டே நேக்கு ஒன்றும் தெரியலியே.

ஓர் பஞ்சு மெத்தை வெகு நாள் உபயோகமற்று மூலேயில் இருந்ததைக் கண்டு, ஐயர் காமக்கோட்டியை அதனுள் போய் ஒளிந்து கொள்ளும்படிச் செய்து, பின்பு கதவைத் திறந்ததும் அம்பியுடன் ஒரு பாத்திரத்தில் காப்பியோடு கனகவல்லி பிரசன்னமானுள்.

கனகவல்லி:—என் கதவைத் திறக்க இவ்வளவுநேரம்?

நீலகண்:—ரயிலில் வந்த சிரமத்தினுல் அப்படியே சற்று அசந்துட்டேன். அதிலே நீங்க அழைத்தது சரியாய்க் காதில் விழவில்லே.

கனகவல்லி:—போறது அடே அம்பி! இந்த ரூமைச் சுத்தம் செய்து சிங்காரிக்க வேண்டும். (மூலேயில் மெத்தையைப் பார்த்து) எது அந்த மெத்தை? ஓகோ அந்த மொட்டச்சி காமக்கோட்டி வாழாத்துக்கு வாங்கின மெத்தை. நம் குழந்தை சுப்பு சாந்தி சமயம் இங்கு இருக்கப்படாது. எடுத்து வெளியில் குப்பைத் தொட்டியில் போட்டுவிடு.

அம்பிபோய் மெத்தையைத் தூக்க முயல, அதனுள் காமக்கோட்டி தன் சிங்காரத்துடன் மெத்தையில் உதிர்ந்த பஞ்சுகள் அவள்மேல் அலங்கரிக்கக் கண்ட அம்பி, அதிசயத்தவனுய் அம்மாமி இதோ பார்த்தீர்களா! இந்த விந்தையை....(அதைக் கண்ட கனகவல்லி பெரும் ஆச்சரியத்துடனும், பெரும் கோபத்துடனும்) அடி காமக்கோட்டி மொட்ட முண்டே. கட்டயில போரவளே. இது வென்னடி கோலம். துஷ்டே இங்கு யெப்படி வந்தே? என்று ஆத்திரத்துடன் ஓடிப்போய் காமக்கோட்டியின் கன்னத்தில் ஓர் குத்து குத்தினுள்.

இவைகளேச் சகிக்கமாட்டாதவளாய் ஓவென்று வாய் விட்டு அழ ஆரம்பித்தாள். நீலகண்டையர் அப்படியே ஸ்தம்பித்து நின்ருர்.

மகாதேவய்யர் கையில் சமானுடன் என்ன மேலே? அழுகைச் சப்தம் என்று குழந்தை சுப்புவிடம் கேட்டவராய், சுப்புவுடன் இருவரும் மேலே விரைந்துவர, இங்கு யெல்லோரும் கம்பம்போல் நிற்பதையும், காமக்கோட்டி பலவிதக் கோலத்துடன் ஓவென்று அழுவதையும் கண்ட மகாதேவய்யரும் ஓர் கம்பமானார்.

சந்திரன் பிரகாசமாய் வானத்தில் உலாவிக்கொண்டிருந்தான். இருவாக்ஷியும் கொடிச் சம்பங்கியும் மல்லிகை இன்னும் சுகந்த மணத்தைக் கொடுக்கக் கூடிய, பலவித புஷ்பச் செடிகளும் நிறைந்த நந்தவனம் ஒன்று ஓர் இல்லத்தின் பின்புறம் இருந்தது. நந்தவனத்தின் நடுவில் அழகிய கல் ஆசனம் ஒன்று இருந்தது. அதன் மேலிருந்த நீலகண்டையர் தன் மனைவியான சுப்புவைப் பார்த்து அடியே சுப்பு அந்தப் பாலும் பழத்தையும் கொண்டுவா. என் கிருத்திகை விரதத்தை முடித்துக் கொள்கிறேன். இதோ வந்துட்டேன் என்ற சுப்புவின் குரல் கேட்டதும் திடீரெனச் சந்திரன் மேகத்துள் மறைந்தான். நீலகண்டையரை ஏதோ தீண்டியதாக அவருக்குத் தென்பட்டது.

மறுவினாடி சந்திரன் பிரகாசித்தான். சுப்பு பாலும் பழமும் கொண்டு வருகையில் மல்லிகைச் செடியினுள் விரைந்து போகும் பாம்பைக் கண்டாள்.

பாலும் பழமும் கொண்டு வருவதற்குள் ஐயர் பரமபதம் அடைந்தார்.

இப்பொழுது காமக்கோட்டியும் சுப்புவும் ஒரே நிலைமை யடைந்தனர்.

இக்காக்ஷியைக் கண்ணுற்ற மகாதேவய்யர் தம்பதிகள் இனி விதவைகளைத் துன்புறுத்தலாகாது என்ற முடிவுக்கு வந்தார்கள்.

---

டிரில் உபாத்தியாயர் டிரில் நடத்திக் கொண்டிருந்தார். அவருக்குக் கொஞ்சம் கண் பார்வை குறைவு. எல்லாரும் வலது காலைத் தூக்கி இருக்கையில் ஒரு பையன்மட்டும் தவறி இடது காலைத் தூக்கி விட்டான். அதனால் அவன் காலும் அடுத்தவன் காலும் சேர்ந்து காணப்பட்டது. வாத்தியார் அதைப் பார்த்துவிட்டு, 'யார் அந்த புத்திசாலி, இரண்டு காலையும் உயரத் தூக்கி இருப்பது!' என்றார்.

—கே. வி. கிரி

தாயார்:—உனக்குக் கிளியைப்போல் ஓர் பெண் பார்த்துவிட்டு வந்திருக்கிறேன் அது உனக்கு சம்மதந்தானா?

மகன்:—எனக்கு வேண்டாம் அது பறந்து போய்விடும்.

—C. K. மணி

# 'கோமதி! நான் உன் அடிமை'

[ஆசாரிப்பள்ளம், சி. குழந்தைசாமி]

'உங்கள் பையன் ரொம்பப் புத்திசாலி' என்று ஒரு உபாத்தியாயர் பாக்கியில்லாமல் சொல்லக் கேட்டால் எந்தத் தகப்பனார்தான் சந்தோஷப் படாமலிருக்க முடியும்? 'இந்தப் பயல் புஸ்தகத்தைக் கையிலெடுத்துப் படிப்பதே கிடையாதே! எப்படி வகுப்பில் முதலாக இருக்கிறான்?' என்று அநேக சமயங்களில் கங்காதரனின் தகப்பனார் வியப்படைவதுண்டு. முடிவில் 'என்ன இருந்தாலும் என்னுடைய மகனல்லவா? என் மூளை அவனுக்கு இல்லாமல் எங்கே போய்விடும்?' என்று நினைத்து அகமகிழ்வார். உண்மையில் கங்காதரன் அவ்வளவு அபார மூளையுடையவனல்ல. ஆனால், வகுப்பில் மிகவும் கவனமாக இருப்பான். உபாத்தியாயர் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையும் அவனுடைய மனதில் பசுமரத்தாணிபோல் பதிந்துவிடும். பிறகு அதை அவன் எவ்வளவு காலமானாலும் மறப்பதில்லை. அதனால்தான் அவனுக்கு வீட்டில் படிக்க வேண்டிய அவசியமே ஏற்படவில்லை. பள்ளிக்கூட நேரம் தவிர மற்ற நேரங்களிலெல்லாம் கங்காதரனைப் பத்துச் சினேகிதர்களுடன் தான் காண முடியும். விளையாட்டு, வம்பளப்பு, நாள் தவறாமல் முருகன் 'டாக்கீஸில்' சினிமா இவைதான் முக்கிய வேலைகள். பத்து மாணுக்கர்கள் கூடினால் பெரும்பாலும் பேச்செல்லாம் உபாத்தியாயர்களைப் பற்றித்தானிருக்கும் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

'டேய்! அதோ பாருடா, பால்கனியிலே கிளி மூக்குக் கிருஷ்ணய்யர்!'

'அடேயப்பா! அவர் ஆயுள் காலத்திலே இப்பத்தாண்டா சினிமாப் பார்க்க வந்திருக்கார்'

'அடிக்கடி அந்தப் பக்கம் திரும்பிப் பார்க்காதேயுங்கடா. நாளைக்கு வகுப்புலே நம்மைப்பற்றி 'லெக்சர்' பண்ண ஆரம்பிச்சுடுவார்.'

'டேய்! பின் பெஞ்சுக்கு அடுத்த பெஞ்சிலே 'டைகர்' ஒக்காந்திருக்கார்டா. நான் பேசினதை யெல்லாம் கவனித்திருப்பாரோ என்னமோ?'

'சிகரட்டை அணைத்துவிட்டு முக்காடு போட்டுக்கடா'

'டேய்! டேய்!! அதோ பார்க்கிறார்டா'

* * *

இதெல்லாம் பழைய கதை. கங்காதரன் பி. ஏ. வகுப்புக்கு வந்ததும் அவனிடம் எதிர்பாராத ஒரு மாறுதல் ஏற்பட்டது.

ஒவ்வொருவருடைய பழக்க வழக்கங்களும் வாழ்க்கையில் நேரிடும் சம்பவங்களை யொட்டி மாறுதலடைகின்றன அல்லவா? ஏற்கனவே, ஆங்கிலத்தில் எப்போதும் கங்காதரன் நல்ல மார்க்கு வாங்குவான். ஆகவே, அவன் எப்படியாவது யூனிவர்ஸிடி பரீக்ஷையில் ஆங்கிலத்தில் 'பஸ்ட் கிளாஸ்' எடுத்துவிட வேண்டுமென்ற நோக்கத்தோடு, வேலை செய்யத் தொடங்கினான். ஆனால், அவனுடைய முயற்சிக்குப் பெருந் தடை ஏற்பட்டுவிட்டது.

காலேஜ் வருஷாந்தரக் கொண்டாட்டம். கூட்டம் சாயங்காலம் ஆறு மணிக்கு ஆரம்பமாக வேண்டும். கல்வி மந்திரி டாக்டர் ஸ்ரீ காந்தன் அக் கூட்டத்திற்குத் தலைமை வகிக்கப் போகிறார். அவருடைய மனைவிதான் 'பிரைஸ் டிஸ்ட்ரிபூஷன்' செய்யவேண்டும். கங்காதரனுக்கும் ஒரு 'பிரைஸ்' உண்டு. சரியாக ஐந்து மணிக்கெல்லாம் அவன் நன்றாக 'டிரஸ்' பண்ணிக்கொண்டு சிரித்த முகத்துடன் காலேஜ் காம்பவுண்டினுள் நுழைந்தான். தூரத்தில் ஒரு மாமரத்தடியில் அவனுடைய நண்பர்கள் உட்கார்ந்துகொண்டிருந்தார்கள். அவர்களை நோக்கி கங்காதரனும் காலேஜ் மாணவனுக்குரிய விசேஷ நாகரீக நடையில் நடக்கலானான். அப்பொழுது 'ஹல்லோ! மிஸ்டர் கங்காதரன்! ஸ்வீட் ஆரஞ்' என்ற இனிய குரல் ஒன்று கேட்டது. திரும்பிப் பார்க்கவும், வேறொரு மரத்தடியில் நாலைந்து சகோதரிகள் உட்கார்ந்துகொண்டு 'ஸ்வீட் ஆரஞ்' சாப்பிட்டுக் கொண்டிருப்பதைக் கண்டான். அவனும் சந்தோஷத்துடன் அவர்களை நோக்கி சிறிய ஓட்டத்தில் ஓடினான். அப்போதெல்லாம் அவனுடைய மனதில் எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை. ஓடும்பொழுது அவனுடைய கோட்டிலிருந்த ரோஜாப்பூ கீழே விழுந்துவிட்டது. அதை அவன் எடுத்துக் கொள்ளவில்லை. அவர்களிடம் போய்ச் சேர்ந்ததும், மிஸ். கமலம் (அவனுக்கு அவள் ஒரு முறையில் தங்கை வேண்டும்) நாலைந்து ஆரஞ்சுப் பழங்களை எடுத்து 'உனக்கும் உன் நண்பர்களுக்கும்' என்று சொல்லிச் சிரித்துக்கொண்டு அவன் கையில் கொடுத்தாள். கங்காதரன் பழங்களை வாங்கிக்கொண்டு 'தாங்க்ஸ்' சொல்லிவிட்டுத் திரும்பினான். இதற்குள்ளாக அக் கூட்டத்திலிருந்த மிஸ். கோமதி எழுந்து, அவன் கோட்டிலிருந்து கீழே விழுந்து கிடந்த ரோஜாப்பூவை எடுத்து, மோர்ந்து பார்த்துவிட்டு 'உங்களுடைய பூ' என்று கங்காதரனிடம் கொடுத்தாள். அப்பொழுதும் அவனுடைய மனதில் எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை. நீ அந்தப் பூவின் வாசமெல்லாம் எடுத்துவிட்டாய்; அது உன்னிடமே இருக்கட்டும், என்று பரிகாசமாகச் சொல்லிவிட்டு, கங்காதரன் தன் நண்பர்களை நோக்கி நடக்கலானான். கோமதி கங்காதரனையே பார்த்துக்கொண்டு நின்றாள்.

கங்காதரனும் அவன் நண்பர்களும் மாமரத்தடியிலேயே இருந்து பழங்களைத் தின்றுகொண்டிருந்தார்கள். தின்று முடிந்

ததும் எழுந்து, கூட்டம் நடக்க வேண்டிய இடத்திற்குப் போய் ஓரிடத்தில் உட்கார்ந்து கொண்டார்கள். சிறிது நேரத்தில் மிஸ். கமலம், மிஸ். கோமதி முதலியோரும் வந்து 'பிளாட்பாரத்தின்' பக்கத்தில் காலியாகக் கிடந்த ஒரு பெஞ்சில் உட்கார்ந்து கொண்டார்கள். சரியாக ஆறு மணிக்குக் கூட்டமும் ஆரம்பமாயிற்று.

தலைவரின் முன்னுரையும், வேறு இரண்டு சொற்பொழிவுகளும் முடிந்த பிறகு 'பிரைஸ் டிஸ்ட்ரிபூஷன்' சமயம் வந்தது. பிளாட்பாரத்தில் டாக்டர் ஸ்ரீகாந்தனின் அருகில் உட்கார்ந்திருந்த மிஸ்ஸஸ் ஸ்ரீகாந்தன் எழுந்து நின்றார்.

காலேஜ் பிரின்சிபால், கையில் ஒரு காகிதத்தைப் பிடித்துக் கொண்டு 'மிஸ்டர் கங்காதரன்! முதல் பரிசு, ஆங்கிலக் கட்டுரைப் போட்டி' என்று மிகவும் கம்பீரமாகக் கூறினர். கங்காதரன் உடனே எழுந்து சென்று பிளாட் பாரத்தில் ஏறிப் பரிசை (ஒரு பெரிய புஸ்தகமும், இருபத்தைந்து ரூபாயும்) வாங்கிக்கொண்டு கீழே இறங்கினன். கூட்டத்தி லிருந்தவர்கள் எல்லோரும் கரகோஷம் செய்தார்கள். அப்போது கங்காதரன் அடைந்த ஆனந்தத்திற்கு ஓர் அளவு கிடையாது. அவனை அறியாமலே அவன் கண்கள் மிஸ். கோமதியை நோக்கின. அவளும் கங்காதரனை நோக்கினுள். அவளுடைய கனிந்த பார்வை கங்காதரனை மெச்சுவது போலிருந்தது. அவள் வதனத்தின் புன்முறுவலும் கண்களின் ஒளியும் அவன் மனதில் என்றும் மறக்க முடியாதவாறு பதிந்தன. அவளுடைய விரல்களினிடையே அந்த ரோஜாப்பூ வட்டமிட்டுக் கொண்டிருந்தது. அவள் கங்காதரனையே பார்த்தவண்ணம் மெதுவாக அந்த மலரை முத்தமிட்டாள். கங்காதரனும் அவளையே பார்த்தவண்ணம் நடந்துகொண்டே அவன் கையிலிருந்த புஸ்தகத்தை மெதுவாக முத்தமிட்டான். இரண்டு உயிர்கள் ஒன்றுயின. கங்காதரன் பிணம்போல் தன் இருப்பிடத்தில் போய் உட்கார்ந்தான். பிறகு கூட்டத்தில் என்ன நடந்ததென்பதே அவனுக்குத் தெரியாது. ஆனல், கோமதி அடிக்கடி திரும்பித் தன்னைப் பார்ப்பதை மட்டும் கவனித்துக் கொண்டிருந்தான்.

சுமார் எட்டு மணிக்குக் கூட்டமும் முடிந்தது. கங்காதரன் எழுந்து ஒரு அடி எடுத்து வைத்தான். அப்பொழுது 'ஒரு வார்த்தை' என்ற சப்தம் அவன் பக்கத்தில் கேட்டது. கங்காதரன் திரும்பிப் பார்த்தான். கோமதி அவன் கையில் ஒரு சிறு காகிதத்தைக் கொடுத்துவிட்டுக் கூட்டத்தில் மறைந்து விட்டாள். காகிதத்தில் 'பத்து மணிக்கு என்னைப் பார்க்கில் சந்திக்கவும்' என்று எழுதி யிருந்தது.

* * *

அன்றிரவு வெண்ணிற மதியின் ஒளியில் இயற்கை மாது புன்னகை புரிகின்றனள். எண்ணிலடங்கா தாரகணங்களையும்,

பொன்னொளி வீசும் தன்னவனையும், வெண்ணிற மேகங்களையு முடைய ஆகாயமானது அவ்வன்னையின் அழகிய முகமென விளங்கிற்று. குளிர் தென்றற் காற்றின் இன்னிசைக் கிசைந்தாற்போல் மரக் கிளைகளும் மெல்ல மெல்ல அசைந்தாடுகின்றன. சந்திரனின் ஒளியாகிய அமுதையுண்ட புதுமலர்களின் நறுமணம் எங்கும் பரவுகின்றது.

இயற்கையோடுகூடி இன்புற்றிருக்க இயலாதவர்களாய், உலகத்தார் யாவரும் அயர்ந்து நித்திரை செய்யும் அவ் வேளையில், கோமதியும் கங்காதரனும் ஓர் அழகிய பூந்தோட்டத்தில் இன்பமாகப் பேசிக்கொண் டிருந்தனர். ஜில்லென்று குளிர்ந்திருந்த பசும் புற்றரையின்மேல் கங்காதரன் உட்கார்ந்திருந்தான். கோமதி அவனுடைய மடிமேல் தனது தலையை வைத்துப் படுத்திருந்தாள். சந்திரனின் ஒளியானது கோமதியின் அழகிய முகத்தில் படவே அஃது அதிகப் பிரகாசத்துடன் விளங்கிற்று. கங்காதரன் கோமதியின் தாமரை இதழ்போன்ற கன்னத்தை மெதுவாகத் தடவிக் கொண்டிருந்தான். அப்பொழுது தனது மனதில் தோன்றிய இன்பத்தில் மயங்கிய கோமதி தனது கண்களை மெல்ல மெல்ல மூடித் திறந்தாள்.

'கோமதி! அதோ பார்; சந்திரன் அவ்வழகிய வெண்ணிற மேகத்தை முத்தமிடும் காட்சி! என்னுள் ஓர் இன்ப உணர்ச்சியை உண்டு பண்ணுகின்றது. ஆஹா உன் அழகிய வதனமெங்கே?' என்று கூறிக்கொண்டே கங்காதரன் கோமதியை முத்தமிட்டான்.

'அன்பே! அவ்வழகிய வெண்ணிற மேகமானது மதியின் முத்தத்தால் இப்பொழுது பொன்னிறமாகிக் காணப்படுகின்றது. அதுபோலவே (தங்களுடைய முத்தத்தால்) என் உள்ளத்தில் இன்பு உணர்ச்சியானது பொங்கி வடிகின்றது!' என்று கூறிக் கொண்டே கோமதி கங்காதரனின் கழுத்தைக் கட்டிப் பிடித்துக் கொண்டு அவனை அநேக முத்தமிட்டாள்.

'என் கண்ணின் மணி போன்றவளே! நான் உன்னை எவ்வாறு காதலிக்கிறேன் தெரியுமா? இன்று இவ்வேளையில் உன்னை இங்குத் தனிமையாகச் சந்திக்க நான் என்ன பாக்கியம் செய்தேனோ?'

'காதலரே! தங்களுடைய அன்பைப் பெற்ற என் பாக்கியமே பாக்கியம்.'

இவ்வாறு இருவரும் இரவு இரண்டுமணி வரையிலும் இன்பமாகப் பேசிவிட்டு, தத்தம் வீட்டுக்குச் சென்றனர். அன்றிரவு முழுவதும் கங்காதரன் கோமதியைப் பற்றியே சிந்தித்த வண்ணம் படுத்திருந்தான். மறுநாட் காலையில் அவன் 'கோமதி! நான் உன் அடிமை' என்று உளறிக் கொண்டே எழுந்தான். அவனிடம் எதிர்பாராத ஒரு மாறுதல் ஏற்பட்டது. அன்று முதல் அவன் ஒன்றும் படிப்பதில்லை.

நாட்கள் பல கழிந்தன. யூனிவர்ஸிடி பரீக்ஷையும் வந்தது. கங்காதரனும் கோதியும் கஷ்டப்பட்டுப் படித்துப் பரீக்ஷையை ஒருவாறு எழுதி முடித்து விட்டார்கள். கோடைகால விடுமுறையும் ஆரம்பமாயிற்று. கோமதி கங்காதரனிடம் விடை பெற்றுக் கொண்டு அவளுடைய சொந்த ஊருக்குப் போய் விட்டாள். அவள் போன பிறகு நான்கு நாட்களில் அவளிடமிருந்து கங்காதரனுக்கு ஒரு கடிதம் வந்தது. பிறகு ஒன்றுமே வரவில்லை. இரண்டு மாதங்களுக்குப் பிறகு ஒருநாள் தபால்காரன் கங்காதரனிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்தான். செல்வி கோமதியிட மிருந்து வந்த கடிதந்தான் அது. சொல்ல முடியாத ஆனந்தத்துடனும், ஆவலுடனும் கங்காதரன் கடிதத்தைப் பிரித்துப் படித்தான்.

'கங்காதரனுக்கு அநேக நமஸ்காரம். நீங்கள் அடிக்கடி எனக்கு கடிதம் எழுதுவதிலிருந்து நம்முடைய காதல் அப்பாவிற்குத் தெரிந்து விட்டது. அவர் முன்போலிராமல் இப்பொழுது அதிகம் கோபப்படுகிறுர். நான் என்ன செய்ய முடியும்? இனி மேல் என்னை மறந்து விடுங்கள்—கோமதி'

தேனைப் பருக நினைத்த கங்காதரன் வாயில் விஷம் விழுந்தது. அவனுக்கு ஒன்றுமே புலப்படவில்லை. திக்பிரமை பிடித்தவன் போல் அங்குமிங்கும் உலாவினுன். 'ஐயோ! என்னை என்னமோ செய்கிறதே. ஏன் இந்த வீடு இப்படிச் சுழலுகின்றது........'என்று உளறிக்கொண்டே, ஓங்கி வளர்ந்த மரம் ஒன்று இடியினுல் தலை மடிந்து விழுந்தாற்போல, கங்காதரன் ஸ்மரணை தப்பிக் கீழே விழுந்தான்.

* * *

ஆறு மாதங்கள் ஆறு யுகங்கள் போலச் சென்று மறைந்தன. கோமதியிடமிருந்து ஒரு கடிதம் கூட வரவில்லை. கங்காதரன் ஒரு நடைப் பிணம்போல சஞ்சரித்துக் கொண்டிருந்தான். இப்படியிருக்கும்போது ஓர்நாள் திடீரென்று கோமதியிடமிருந்து அவனுக்கு ஒரு கடிதம் வந்தது. கடிதத்தைக் கவரிலிருந்து எடுத்துப் பார்த்தான். அது ஒரு கலியாணப் பத்திரிகை அவன் உள்ளம் கலங்கிற்று அவன் கண்ணுக்குப் பட்டவை 'கோமதியைச் சங்கரனுக்கு'—இவை தான். கங்காதரனுடைய மார்பு வெடித்து விடும்போல் துடி துடித்தது. மறுபடியும் கடிதத்தைப் பார்த்தான். புதிதாக அவன் கண்ணுக்கு கோமதி ஏதோ எழுதியிருந்தது புலப்பட்டது.

'அன்பே! என்னைக் காப்பற்ற முடியுமா?'........

'ஹா, கோமதி! கோமதி!!' என்று அலறிக் கொண்டே பிரக்ஞையற்றுக் கீழே சாய்ந்தான்.

ஒரு வருஷத்திற்குள் கங்காதரனுக்குக் கோமதியின் ஆசை முகம் மறந்து போய்விட்டது. அவன் ஒரு சந்நியாசி போலானுன்.

மற்றும் இரண்டு வருஷங்கள் நிம்மதியாகக் கழிந்தன. ஆனால், கடவுள் அவனை இந்த நிலைமையிலும் சும்மா விடவில்லை. ஒரு நாள் காலையில் கங்காதரன் குளித்துவிட்டுத் திரும்பும்போது, அவனுடைய வீட்டுத் தெருத்திண்ணையில் யாரோ ஒருவர் உட்கார்ந்திருப்பதைக் கண்டான். தூரத்திலிருந்து ஆள் இன்னாரென்று அவனால் கண்டு கொள்ள முடியவில்லை. வேகமாக வீட்டை அணுகினான். கோமதியின் சிற்றப்பா உட்கார்ந்திருந்தார், கையில் ஒரு தந்தியை வைத்துக் கொண்டு.

'கங்காதரா!' என்றார் தழுதழுத்த குரலில்.

'வர வேண்டும். என்ன இப்படி அபூர்வமாக வந்தீர்கள்?' என்றான் கங்காதரன்.

கங்காதரனின் தாடி மீசையையும் காவி வேஷ்டியையும், சடைபிடித்த மயிரையும் பார்த்த மாத்திரத்தில், அவர் கண்களிலிருந்து முத்தெனக் கண்ணீர் வெளிப்பட்டது. ஒன்றும் பேசத்தோன்றாமல் நடுங்கிய கைகளுடன் தந்தியைக் கங்காதரனிடம் கொடுத்தார்.

'கோமதி மரணத் தறுவாயிலிருக்கிறாள். கங்காதரனைப் பார்க்க மிகவும் ஆசைப் படுகிறாள். தயவுசெய்து உடனே அவனை அழைத்து வரவும்' என்று கோமதியின் தகப்பனார் தன் தம்பிக்குச் செய்தி அனுப்பி யிருந்தார்.

ஆடாமல் அசையாமல் நிம்மதியாக இருக்கும் ஒரு குளத்தில் ஒரு மதயானை புகுந்து கலக்கினால் எப்படியோ, அப்படி கங்காதரனின் மூளை கலங்கி விட்டது. 'என் கண்மணி கோமதி அதோ படுத்துக் கொண்டிருக்கிறாள். 'கங்காதரா, கங்காதரா என்று கண்ணீர் பெருக்குகிறாள்............ஐயோ........கோமதி........பேதை கோமதி!' என்று அலறிக்கொண்டே கங்காதரன், கோமதியின் சிற்றப்பாவுடன் புறப்பட்டான்.

'கங்காதரன் வந்து விட்டாரா? கங்காதரன் எங்கே—கங்காதரா' என்று ஈன ஸ்வரத்தில் படுக்கையிலிருந்து தவித்தாள் கோமதி. கங்காதரன் அவள் அருகில் வந்து 'ஐயோ—இவளா—கோமதி?—என் பழைய கோமதி எங்கே? இவளை யார் இப்படி விகாரம் பண்ணினது? கோமதி—என தன்பே........' என்று அழுது புலம்பினான். கங்காதரனுடைய நிலைமையைக் கண்டு, பக்கத்தில் நின்றவர்கள் எல்லோரும் விசித்து விசித்து அழுதார்கள். 'கங்காதரா—என் தன்பே' என்று கூறிய கோமதி மிகுந்த கஷ்டத்தோடு கங்காதரனின் கரத்தைப்பற்றி இழுத்து முத்தமிட்டாள். கங்காதரன் கண்களை மூடிக்கொண்டு, மழைக் காலத்து மேகம்போல் முகம் கனத்து கண்ணீர் பொழிந்தான். கோமதியின் ஆவியும் அகன்றது.

———

# 'கனகராஜ் என் நாதன்!'

[G. R. மூர்த்தி நாகூர்]

நம் கதாநாயகன் கனகராஜ் தேவிபட்டி ஜெமீன்தார் முத்தண்ட செட்டியாரின் ஏக புதல்வன். அவன் சென்னை மாகாணக் கல்லூரியில் B. A. வரை பயின்றவன். அவன் வாசித்துக்கொண்டு இருக்கும்போதே திருமணம் ஆய்விட்டது. கனகராஜ் கல்லூரியில் படிக்கும்போது டென்னிஸ் விளையாட்டில் மிக்க கியாதி பெற்றிருந்தான். அவனுக்கு லண்டன் போய்ப் பார்க்க வேண்டுமென்று ஆவல் இருந்தது. ஒருநாள் கனகராஜ் ஆங்கிலச் செய்திப் பத்திரிகையில் லண்டனில் அரசரின் தலைமையில் உலக - டென்னிஸ் பந்தயங்கள் நடைபெறுமென்றும் எந்நாட்டினரும் கலந்து கொள்ளலாமென்றும் இருந்த செய்தியைக் கண்டான். இப் பந்தயத்தில் நிச்சயம் கலந்து விடாமுயற்சியோடு பரிசு பெற வேண்டும் என்று எண்ணினான். இச்செய்தியைத் தன் தகப்பனிடமும் நண்பர்களிடமும் தெரிவித்தான். கனகராஜ் லண்டன் போகிறான் என்று தெரிந்ததும் அவனின் நண்பர்கள் பல தேநீர் கச்சேரிகள் நடாத்தினர்.

கனகராஜ் லண்டன் புறப்படும் நாள் வந்தது. தன் மனைவி விமலாவிடம் புறப்படுவதைத் தெரிவித்தான். விமலாவிற்கு வயதோ 20. அதுவுமன்னியில் கர்ப்பஸ்திரீ என் செய்வாள்! மிக மனம் நொந்து அம்பிகையை நினைத்து வருந்தி அழுது உத்திரவு கொடுத்தாள். கனகராஜ் தன் தகப்பனிடம் இரண்டாயிரம் ரூபாயைப் பெற்றுக்கொண்டு சில நண்பர்களுடன் தேவிபட்டியை விட்டுக் கிளம்பினான். எல்லோரும் பம்பாய் துறைமுகத்தை அடைந்தனர்.

கனகராஜ் 'விக்டோரியா' என்ற கப்பலில் ஏறினான். அவன் நண்பர்கள் மலர் மாலையிட்டு வழி யனுப்பினர்.

விமலா தன் இல்லத்தில் நாதன் சென்றதில் இருந்து நல்லுடை தரிக்காமலும் சரியாக உண்ணாமலும் இருந்துகொண்டு அம்பிகை படத்தின் முன்னே நின்று கண்ணீர்விட்டுக் கொண்டிருப்பாள். கனகராஜ் லண்டன் சேர்ந்தான் என்று தேவிபட்டிக்குச் செய்தி தெரிந்தது.

கனகராஜ் லண்டனிலுள்ள டென்னிஸ் பந்தய சங்கத்தில் தன் பெயர் பதிவு செய்துகொண்டான். பந்தயத்தில் ஏராளமான பெண்களும் ஆண்களும் கலந்திருந்தனர். டென்னிஸ் பந்தய ஆரம்ப தினம் வந்தது. லண்டன் மாநகர் அன்று வெகு குதூகலத்துடன் காணப்பட்டது. டென்னிஸ் பந்தயத்திற்கு அரசர் தலைமை வகித்தார். ஆட்டம் ஆரம்பமாயிற்று. அப்பந்தயத்தில் ஆஸ்டிரேலியாவிலுள்ள மார்ஷெல் என்பவரும் தென் இந்தியாவிலுள்ள கனகராஜும் வெற்றி யடைந்தனர். அரசர் இருவரையும் தன்னருகில் அழைத்து அவர்களின் வெற்றியைப்பற்றி மெச்சிக் கைகுலுக்கினர். கனகராஜ் டென்னிஸில் பிரசித்து பெற்றவர் என்று உலகம் பூராவும் தெரிந்தது. கனகராஜின் முகத்தோற்றத்தையும் டென்னிஸ் வீரன் என்றும் கண்ட ஓர் ஆங்கில மாது அவன்மேல் காதல் கொண்டாள். தன் விருப்பத்தைக் கனகராஜிடம் தெரிவித்தாள்.

'அண்டி வந்தவரை ஆதரிப்பதே கடமை' என்ற வாக்கின்படி கனகராஜ் அந்த ஆங்கில மாதைத் தன் காதலியாக ஏற்றுக்கொண்டான். அவள் ஓர் பணக்காரக் குடும்பத்தைச் சார்ந்தவள். கல்வித் தேர்ச்சியுடையவள். ஏரோப்ளான், மோட்டார் முதலிய யந்திரங்கள் ஓட்டுவதில் மிக்கத் தேர்ச்சியுள்ளவள்.

ஒருநாள் கனகராஜும் ஆங்கில மாதும் ஆகாய விமானத்தில் செல்லும் போது ஓர் மலையில் மோதப்பட்டு உடைந்தது. மலையில் ஆகாயவிமானம் இடிபட்டதை அங்கு ஆடு மேய்த்துக்கொண்டு இருந்த ஓர் இடையன் அதனருகில் சென்று பார்த்தான். ஆங்கில மாது பலத்த காயத்துடன் இறந்து கிடந்தாள். கனகராஜ் சிறிது காயத்துடன் ஒருபுறம் கிடந்தான். இடையன் மனம் திகிலடைந்து இருவரையும் தன் குடிசைக்குக் கொண்டுவந்தான். கனகராஜுக்கு வேண்டிய ஏற்பாடு செய்து அவன் இருக்கும் இடத்தை விசாரித்தான். கனகராஜ் சகல சங்கதிகளையும் இடையனிடம் தெரிவித்தான். உடனே இடையன் தன் இரட்டை மாட்டு வண்டியில் இருவரையும் ஏற்றிக்கொண்டு லண்டனுக்கு வந்து அவர்கள் இருப்பிடம் சேர்த்தான். ஆங்கில மாதின் தகப்பன் இருவரையும் கண்டு மனம் தளர்ந்தார். ஆங்கில மாதைத் தக்க மரியாதையுடன் அடக்கம் செய்தார்கள். கனகராஜை ஆஸ்பத்திரியில் சேர்த்தார். அவனுக்குப் பக்க உதவியாக இடையனும் ஆஸ்பத்திரியில் இருந்தான். கனகராஜ் ஒரு மாத காலம் ஆஸ்பத்திரியில் இருந்தான். இவ்விதமாக ஒரு வருடம் லண்டனில் கனகராஜ் காலங் கழித்தான்.

சிலநாள் சென்று தன் தகப்பனுக்குத் தான் அடுத்த மாதம் அங்கு வருவதாகவும் தனக்கு ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களைப்பற்றியும், தனக்கு 2000 ரூ. அனுப்பும்படியும் கடிதம் எழுதினன். இச்செய்தியை அறிந்த ஜெமீன்தார் தன் குமாரன் விருப்பப்படி லண்டனுக்குப் பணம் அனுப்பினர். தன் கணவனின் கஷ்ட நஷ்டங்களை யறிந்த கற்பிள மங்கை விமலா, அம்பிகையிடம் முறையிட்டுத் தன் நாதன் சுகமெய்திட வேண்டுமென்று புலம்பி அழுவாள். அப்போது விமலாவிற்கு ஒரு வயது நிறம்பிய 'ராஜேந்திர பாஸ்கரன்' என்ற ஆண் மகவு இருந்தது.

கனகராஜுக்கு 2000 ரூ. வந்து சேர்ந்தது அதில் பாதியைத் தன்னைக் காப்பாற்றிய இடையனுக்குக் கொடுத்தான். கனகராஜ் லண்டனைவிட்டுப் புறப்பட்டுப் பம்பாயை வந்தடைந்தான். வழி யனுப்பு உபசாரங்கள் செய்த நண்பர்கள் வரவேற்பு உபசாரம் செயதனர். கனகராஜ் தேவிபட்டி வந்து சேர்ந்தான். அவன் தன்னில்லத்திற்கு வந்து தன் மனைவியைப் பார்ப்பதற்காக மேல்மாடிக்குச் சென்று பார்த்தான். அச்சமயம் விமலா தன் புதல்வனுடன் ஒரு கையில் தன் நாதன் புகைப்படத்தையும் ஒரு கையில் அம்பிகை படத்தையும் வைத்துக் கொண்டு புலம்பிக் கொண்டிருந்தாள். இக்காட்சியைக் கண்டான் கனகராஜ்! விமலாவையும் தன் ஆருயிர்ப் புதல்வன் ராஜேந்திர பாஸ்கரனையும் கட்டித்தழுவி விமலாவின் கற்பின் மகிமையைப்பற்றி மெச்சினன்.

இப்படியாக ஆறு மாதங்கள் ஓடிற்று. ஓர்நாள் கனகராஜ் தன் கையில் பத்திரிகையுடன் மோட்டார் சைகிளில் கடற்கரைக்குச் சென்றான். அங்கு

ஓர் சிமின்ட் பெஞ்சில் உட்கார்ந்து கொண்டு செய்திப் பத்திரிகையைப் பார்த்துக்கொண்டு இருந்தான். அச்சமயம் ஒருபுறம் இருந்து ஓர் பெண்ணின் குரலைக் கேட்டான். சடேரென்று தன்னிடத்தை விட்ட கன்று, குரல் வரும் இடத்திற்குச் சென்றான். அங்கு இரு ஆடவர்கள் ஓர் பெண்ணைக் கத்தியால் குத்தப் போகும் சமயம், கனகராஜ் அவர்கள் மேல் பாய்ந்து அவ் விரு கொலை பாதகர்களையும் போலீஸாரிடம் விடுத்துச் சிறை புகச் செய்தான்.

பிறகு அப்பெண்ணைத் தன்னுடைய 'விமல விலாஸ்' என்ற பங்களாவுக்கு அழைத்து வந்தான். பெண்ணுக்குத் தேநீர் கொடுத்து அவளின் விருத்தாந்தங்களை விசாரித்தான். உடனே அப்பெண்மணி 'தன் பெயர் சந்திரா என்றும் 20 மைலுக்கப்பாலுள்ள கமலாபுரி மிராசுதார் சோமசுந்திரம் பிள்ளையின் ஏக புதல்வி யென்றும், தற்போது சென்னையில் டாக்டர் பரீட்சைக்குப் படித்து வருவதாயும் விடுமுறை நாளில் கமலாபுரிக்கு வந்ததாயும், கடற்கரைக்கு வந்த சமயம் அந்த இரு ஆடவர்களும் என்னைப் பலவிதமாய் இம்சித்துக் கொல்ல நினைத்தனர் என்றும் கூறினாள். சந்திரா அவனருகில் சென்று கையைப் பிடித்து என்னைக் காப்பாற்றிய தற்காக நான் என்ன நன்றியைச் செய்யப் போகிறேனோ தெரியவில்லை. என்று சொன்னாள். பிறகு சிறிது நேரம் யோசித்தவண்ணமிருந்தாள். 'என்ன யோசனை செய்கிறாய்? என்றான் கனகராஜ்' 'எனக்கோ இன்னும் திருமணமாகவில்லை. ஆதலால் என்னைக் காப்பாற்றிய தங்களையே என் நாதனாகப் பாவிக்கிறேன். இது சத்தியம்' என்று சந்திரா கனகராஜைப் பார்த்துக் கூறினாள். மேலும் இவ்விடத்தை விட்டுப் பிரியவும் மாட்டேன் என்று சொன்னாள்.

இது நிற்க, கடற்கரைக்குச் சென்ற தன் புதல்வி சந்திராவைக் காண முடியாத மிராசுதார் மனம் பதறி, நாலா பக்கமும் போலீஸையும் தன்னாட்களையும் விட்டுத் தேடி வரச் சொல்லி அனுப்பினார். மூன்றுநாள் சந்திராவைக் காண முடியவில்லை. கடைசியாகத் துப்பறியும் சப்இன்ஸ்பெக்டர் ராஜசேகரன் அவ்விருவர்களைக் காளிதேவி கோவிலில் சுவாமி தரிசனம் செய்யும்போது பிடித்தான். அவிடம் ஒருவித பேச்சும் பேசாமல் நேராகக் கமலாபுரி போலீஸ் ஆபீசுக்குக் கொண்டுவந்தான். மிராசுதார் கனகராஜைச் சிறையில் அடைத்து விடும்படிக் கட்டளையிட்டார். கனகராஜ் சிறையில் அடைக்கப்பட்டான். அன்றுமுதல் சந்திரா நல்லுடை தரிக்காமலும் ஆகாரம் உண்ணாமலும் இருந்து வந்தாள். மிராசுதார் அன்றுமுதல் தன் குமாரியைப் பலவிதமான இழிவுச் சொற்களைச் சொல்லி இம்சித்து வந்தார். சந்திராவுக்கு மிகவும் கஷ்டமா யிருந்தது. எல்லா விஷயங்களையும் கடிதம் மூலம் தன் வேலைக்காரனான ரெங்கனிடம் கொடுத்து, சிறையில் இருக்கும் காதலன் கனகராஜுக்கு அனுப்பி வைப்பாள். ஒருநாள் கனகராஜ் சந்திராவுக்குக் கீழ் கண்டதுபோல் கடிதம் அனுப்பினான்.

கமலாபுரி சிறை

கனகராஜ்.

என தாருயிர்க் காதலி சந்திரா,

நான் உன்னுடைய கஷ்டங்களை உன் கடிதம் மூலம் அறிந்தேன். எனக்கும் இச்சிறையில் மிகக் கஷ்டமாய் இருக்கிறது. நாமிருவரும் மாறு

வேடந் தாங்கி இவ்வூரை விட்டுக் கிளம்பி விடுவோம். ஆதலால் நாளை இரவு 12 மணிக்கு நான் சிறையை விட்டு ஒருவருக்கும் தெரியாமல் கிளம்பி உன் மாடிக்கு வருகிறேன். நீ புறப்படுவதற்குத் தயாரா யிரு. ஒன்றுக்கும் அஞ்சாதே! என்னை நாதன் என்றழைத்த உன்னை என்னால் பிரிய முடியவில்லை.

இப்படிக்கு,

கனகராஜ்.

இக்கடிதத்தைக் கண்டாள் சந்திரா. ஒருபுறம் வருத்தமும் ஒருபுறம் சந்தோஷமுமாய் இருந்தது. கனகராஜுடன் புறப்படுவதற்குத் தயாராக இருந்தாள்.

இது நிற்க, தன் குமாரனைக் காணாமல் ஜெமீன்தார் விமலா, மற்றும் எல்லோரும் எங்கும் தேடினர். ஒன்றும் பயனில்லை.

கனகராஜ் கடிதம் எழுதியபடி இரவு 12 மணிக்குச் சிறையை விட்டு ஒருவருக்கும் தெரியாமல் கிளம்பினான். பூர்ண சந்திரனோ தன் முழு வல்லமையைக் காட்டிக்கொண்டு பிரகாசிக்கிறான். கனகராஜ் ஒருவருக்கும் தெரியாமல் சந்திரா மாடியில் ஏறி அறைக்குச் சென்றான். சந்திராவும் ஆணுடை தரித்து, இருவரும் கமலாபுரியை விட்டு இரவு 1 மணி டிரெயினில் கிளம்பிவிட்டனர். இரண்டு நாள் சென்று சிலோன் வந்தடைந்து ஒரு தொழிற்சாலையில் தினசரிக் கூலிகளாகச் சேர்ந்தனர். சிலோனில் ஆணுடை தரித்த சந்திராவுக்கு உடல் நலம் குன்ற ஆரம்பித்தது. கனகராஜும் சந்திராவும் சிலோனைவிட்டுக் கிளம்பி சிங்கப்பூர் வந்து சேர்ந்தனர். அங்கு 'ஜோசப்' என்ற மூட்டைக்கப்பல் சொந்தக்காரரும், கப்பல் மாலுமியுமாகிய 'ஜான்ஸன்' என்பவருக்கு வேலைக்காரர்களாக அமர்ந்தனர். சிறிதுநாள் சென்று கனகராஜ் மாலுமிக்குச் சுவிகாரப் புத்திரன் ஆனான். பலத்த பிணியினால் மாலுமி இறந்தார். பிறகு கனகராஜுக்குக் கப்பல் சொந்தமாயின. கனகராஜும் கப்பல் ஓட்டும் பயிற்சியைத் தெரிந்து கொண்டான்.

ஒருநாள் கனகராஜ் சந்திராவுடன் கப்பலோட்டிச் செல்லும்போது, கடும்புயலினாற் கப்பல் திசை தப்பி ஓர் பாறையில் மோதப்பட்டு உடைந்தது. அந்த விபத்தில் சந்திரா தண்ணீரில் எங்கோ அடித்துப் போகப் பட்டாள். கனகராஜ் ஓர் மரக்கட்டையின் உதவியால் 20 மைல் தூரம் தண்ணீரில் நீந்திக் கரையோரம் சேர்ந்தான். அது ஓர் சிறந்த பட்டணமாகக் காணப்பட்டது. அந்த ஊரில் பல கனவான்களைப் பல வேலைகள் கேட்டான். ஒன்றும் பயனில்லை! அடுத்த ஊர் போய்ப் பிழைக்கலாமென் றெண்ணிக் கால் நடையாக நடக்க ஆரம்பித்தான். இப்படியாக நடந்து 6 மைல் வந்து ஒரு மலைப்பாறையினருகில் உட்கார்ந்து ஏதோ யோசித்த வண்ணமாக யிருந்தான். கனகராஜ் உட்கார்ந்திருந்த பாறையினருகில் ஓர் ரகசியக் கதவு இருந்தது. அது பூமியின் அடியில் சுரங்கம் போலுள்ள அறையின் கதவு அந்த அறை திருடர்களுக்குச் சொந்தமானது. அந்த இடம் திருடர்களைத் தவிர மற்றவர்களுக்குத் தெரியாது. கனகராஜ் அக்கதவைக் கண்டு அதனருகில் சென்றான். அச்சமயம் ஒரு கள்வன் அவனை அடித்து இழுத்துக்கொண்டு சுரங்க அறைக்குச் சென்றான். கனகராஜ் கள்வர்

தலைவனிடம் சேர்க்கப்பட்டு விசாரிக்கப்பட்டான். கனகராஜ் தன் விருத்தாந்தங்களை ஆதியோடந்தமாய்க் கூறினன். கள்வர்கள் அவன் மேல் இரக்கப்பட்டுத் தன் சகாக்களோடு சேர்த்துக் கொண்டனர்.

இது நிற்க, தேவிபட்டியில் காலரா என்னும் கொடிய வியாதியால் ஜமீன்தார், மனைவி, மற்றும் எல்லோரும் இறந்தனர். விமலாவும், குழந்தை ராஜேந்திர பாஸ்கரனுமே பிழைத்தனர். விமலா தன் நாதன் படத்தை வைத்துக்கொண்டு புலம்பிக் கொண்டே யிருப்பாள். எவ்வளவு சொத்துக்கள் இருந்தும் சுகம் இருந்தும், பெண்ணுக்குக் கணவனே முக்கியமான பொக்கிஷம் என்று அறிந்த விமலா, நாதனை என்று காண்போம் என்று ஏங்கி வாழ்ந்து வந்தாள். சில நாட்சென்று குழந்தை ராஜேந்திர பாஸ்கரனும் இறந்தான். உடனே பித்துக்கொண்டவள் போல வீட்டை விட்டுக் கிளம்பி ஊர்ஊராய்த் திரிந்தாள்.

கள்வர்களுடன் இருந்த கனகராஜ் தன் மனைவி விமலாவைப்பற்றியே நினைவாக யிருந்தான். ஓர்நாள் சில கள்வர்களுடன் கனகராஜும் சேர்ந்து ஓர் பிரபுவின் வீட்டில் நுழைந்து, பிரபுவைக்கொன்று அவரின் சொத்துக்களையும் எடுத்து வந்து விட்டனர். பிரபுவைக் கொன்ற செய்தி ஊர் முழுவதும் பரவித் திருடர்களைக் கண்டு பிடிப்பவருக்கு, அரசாங்கத்தில் ஓர் உத்தியோகமும் பல சன்மானங்களும் தரப்படும் என்று எங்கு பார்த்தாலும் விளம்பரம் செய்யப்பட்டது. கனகராஜுக்குத் திருடர்கள் செய்த அக்கிரமங்களைக் கண்டு அவன் மனம் கஷ்டமடைந்தது. இவர்களைப் போலீஸில் சேர்ப்பிக்க வேண்டிய வழியைப் பார்த்தான். ஒருநாள் இரவு கனகராஜ் போலீஸ் ஸ்டேஷனை யடைந்து இன்ஸ்பெக்டரிடம் தெரிவித்து, போலீஸ் சகாக்களை அழைத்துச் சுரங்க அறைக்கு வந்தான். அச்சமயம் கள்வர்கள் திரவியங்களைப் பங்கு போட்டுக் கொண்டிருந்தனர். போலீஸார் உள் நுழைந்து திருடர்களைப் பிடித்து வந்தனர். அரசாங்கத்தார் கனகராஜுக்கு C. I. D. இன்ஸ்பெக்டர் பதவி கொடுத்தனர். பல நற்சாட்சிகளும் சன்மானங்களும் கொடுக்கப்பட்டது. கனகராஜ் அன்றுமுதல் தன் வேலையைச் செவ்வனே பார்த்து வந்தான்.

கற்பிளமங்கை விமலா கனகராஜ் வேலை பார்க்கும் ஊரில் உள்ள ஓர் சத்திரத்தில் வந்து தங்கி யிருந்தாள். ஒரு நாளிரவு சில திருடர்கள் ஓர் பெண்ணை வெட்டி அதன் ஆபரணங்களை யெடுத்துக்கொண்டு, கத்தியை ஒருபுறம் படுத்துறங்கும் விமலாவின் பக்கத்தில் வைத்துவிட்டு ஓடி விட்டனர் பொழுதுவிடிந்தது. இறந்து கிடக்கும் பெண்ணின் தகப்பன் போலீஸாரை அழைத்து வந்து, சத்திரத்தில் பரிசோதனை செய்தபோது விமலாவிடம் கத்தியைக் கண்டனர். விமலாவை ஜெயில் காப்பிட்டுக் கோர்ட்டில் ஆஜர்ப் படுத்தினர். விசாரணை நடந்தது. மாஜிஸ்டிரேட் விமலாவை விசாரித்தார். விமலா நெருப்பிலகப்பட்ட எறும்பைப் போலத் துடித்து நின்ருள். பிற புருஷர்கள் இருக்கும் இடத்திற்கு கற்புள்ள மங்கை வருவது நீதியல்ல! என்று நினைத்தாள். மாஜிஸ்டிரேட் விமலாவின் விருத்தாந்தங்களை விசாரித்தார். விமலா அழுத முகத்துடன் தன் பூரா விபரங்களையும் தெரிவித்துக்கொண்டு வந்தாள். அச்சமயம் ஒருபுறம் அமர்ந்திருந்த C. I. D. இன்ஸ்பெக்டர் கனகராஜ் விமலா சொல்லி வந்ததைக் கேட்டுக்

கொண்டே வந்தான். கனகராஜன் என் நாதன் என்று விமலா சொன்னதும் நாற்காலியி லமர்ந்திருந்த கனகராஜ் மனம் பதறி எழுந்து ஓடி விமலாவைக் கட்டி அழுது தேர்தல் மொழிகளைக் கூறினன். கோர்ட்டில் உள்ள எல்லோரும் வியப்புற்றனர்.

விமலாவின் கற்பின் மகிமையைப்பற்றிப் புகழ்ந்தனர். கனகரான் தன் வேலையைத் தன்னூருக்கு மாற்றிக் கொண்டுவந்து விட்டான். எல்லா மக்களும் விமலாவைப்பற்றியே புகழ்ந்தனர். அவள் கற்பிள மங்கையாதலால் அவள் கணவனை யடைய நேரிட்டது என்றும் கூறினர்.

ஒருநாள் விமலாவும் கனகராஜனும் மாடியில் படுத்துறங்கும்போது, விமலாவின் கனவில் அம்பிகை தோன்றி 'உன் பதி பக்திக்கும் தெய்வ பக்திக்கும் மெச்சினேன். நீ கற்புள்ள மங்கை யாதலால் உன் கணவனை யடைந்தாய். உங்கள் வீட்டுத் தென் மூலையில் புதையல் இருக்கின்றது. அதை எடுத்து இனிது காலங் கடத்துங்கள். உங்களுக்குப் பிறக்கப்போகும் பெண் குழந்தைக்கு என் நாமத்தையே சூட்ட வேண்டும்' என்று சொல்லி மறைந்தது.

விமலா கண் விழித்து நடந்தனவற்றைத் தன் கணவனிடம் உரைத்தாள். அம்பிகை கூறியபடி புதையலும் கிடைத்தது. சிறிதுநாள் சென்று கற்பிளமங்கை விமலாவிற்குக் கெர்ப்பம் தரித்தது. அம்பிகை அருள்வாக்கின்படி பெண் மகவு பிறந்தது. அக்குழந்தைக்கு 'உமாமகேஸ்வரி' என்று திருநாம மிட்டனர்.

C. I. D. இன்ஸ்பெக்டர் கனகராஜனும், கற்பிள மங்கை விமலாவும், அம்பிகையின் அருளால் பிறந்த குழந்தை உமாமகேஸ்வரியும் இனிது காலங் கடத்தி வந்தனர்.

---

தாயார்:—ஏண்டா, அவர்கள் வீட்டு நகையைத் திருடுகிறுய்?

மகன்:—இல்லை அம்மா, உபாத்தியாயர் 'களவும் கற்று மற' என்று சொன்னர்.

—P. S. சுப்ரமண்யம்

முதலாளி:—(தன்னிடம் புதிதாய் வேலை கேட்க வந்தவரிடத்தில்) இப்பொழுது என்னிடத்தில் வேலை ஒன்றும் காலி இல்லை ஏன் தொந்தரவு பண்ணுகிறுய்?

புதிதாக வேலை கேட்கவந்த குமஸ்தா:—(முதலாளியின் காலைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு) அப்படி சொல்லி விடாதீர்கள் நான் ரொம்ப ஏழைப் பிள்ளை கெட்டிக்காரன்.

முதலாளி:—சட் காலை விடடா.

வேலை கேட்கவந்த குமஸ்தா:—காலை விடமாட்டேன். காரியமாகிறவரையில் கழுதையானுலும் காலைப் பிடி என்று பெரியோர்கள் சொல்லி யிருக்கிறுர்கள்.

—S. V. K. சபாபதி

# இலங்கை

[ தேவகோட்டை ஸ்ரீ V. இராமநாதன் ]

ஒன்றிற் கொன்று அருகாமையிலில்லா விட்டாலும் 'காசி இராமேஸ்வரம்' என்று சொல்வதைப் போன்று, 'கண்டி கதிர்காமம்' என்று துணைபடச் சொல்வதைச் சர்வ சாதாரண மாகக் கேட்கின்றோம்! மக்கள் மனதில் மாறாது பதிந்து கிடக்கும் எந்த ஒரு நகரும் கதிர்காம க்ஷேத்திரமும் உண்டோ, அவை இரண்டையும் தன்னகத்தே கொண்ட இலங்கையைப் பற்றி இப் பொழுது நாம் நோக்கப் போகின்றோம்.

இணையற்ற இயற்கைத் தேவியின் திருநடனம் இலங்கையில் எழிலுடன் நடக்கிற தெனின், அது உண்மையேயன்றி வெறும் புகழ்ச்சியில்லை! அதனைக் கண்டோர் கேட்டோர் கணப்பொழுதே னும் நினைப் பொழிந்திருப்பது முடியாதகாரிய மென்று கூறினும் மிகையாகாது! அஃதோடு இலங்கை ஒரு கற்பகத் தீவகம் எனினும் சாலப் பொருந்தும்!

பூமத்தியரேகைக்கு அருகிலிருந்தாலும், வேண்டிய காலத்தில் விரும்பிய சீதோஷ்ணத்தை அனுபவிக்கும் சாத்தியம் இங்கு அமைந் திருப்பது ஒரு தனிச் சிறப்பாகும்! நல்ல வெப்பத்தைப் பெறலாம்! மிகச் சிறியகால அளவில் தட்பத்தைப் பெறலாம்! ஆங்கிலேயர் விரும்பும் அவ்வளவு குளிர்ச்சியான பிரதேசங்களை இரண்டொரு மணிப் பிரயாணத்தால் கொள்ளலாம்! இச்சிறிய தீவில் குடியேறிய பலவேறு மதத்தினர் பல்வேறு தொழிற்றுறையில் ஈடுபட்டு, ஜாதி மதபேதச் சச்சரவுகளின்றி வாழ்ந்து வந்திருப்பது பெருமைப் படத்தக்க விஷயமாகும்! ஆனால், நல்ல மரத்தில் புல்லுருவி பாய்வது போல் சிங்கள—இந்தியப் பிளவும் பொருமையும் ஏற்பட்டுள்ள தாகத் தெரிகிறது. அதனை அமர்த்தப் பல தலைவர்கள் முன் வந்து மேடைப் பிரசங்கங்கள் புரிந்து வருவதை அறியும் நாம், சிங்களவர் களும் இந்தியர்களும், முன்னாளேபோல் எந்நாளிலும் இனிது வாழ இறையருள் புரியப் பிரார்த்திப்போம்!

கேளுங்கள்! இன்ன வருஷமென்று ஞாபகத்திலில்லை. ஏதோ ஒரு வருஷத்தில்,—நான் சிறுபிள்ளையாக இருந்த பொழுது,—இலங்கையின் தற்பொழுதைய தலை நகராக விளங்கும் கொழும்பு மாநகருக்கு அழைத்துச் செல்லப் பட்டேன். அக்கலாத்தில் இலங்காவின் எழில்காண நான் அவாக் கொள்ளவில்லை.

அடுத்த முறையில் கொழும்புக்கு மாணவக் கோலத்துடன் சென்றேன். சுமார் ஓர் ஆண்டு அங்குத் தங்கினேன். அப்பொழுது தான் இலங்கையை ஒரு 'ரவுண்ட்' அடித்துப் பார்க்க வேண்டு மென்னும் ஆசை எழுந்தது. ஆனால், சரியான சந்தர்ப்பம் அது போழ்து கிடைக்கவில்லை. ஏன் எனில்? பின் நிகழ்ந்த பிரயாணத்

தில் உடன் வந்த தோழர்களான MR. AR. PL. அருணசலம் செட்டியார், PR. RM. இராமனுதன் செட்டியார், CT. N. RM. இரமசாமி செட்டியார், RM. SM கதிரேசன் செட்டியார், எனது பெயரே கொண்ட புதுவயல் மாணவர் V. இராமனுதன் செட்டியார் ஆகியோர் போன்றவர்கள் கிடைக்காததால்!

முதலில் சிறு பிள்ளையாகவும், பிறகு மாணவனுகவும் சென்ற நான், மூன்ருஂம் முறையாகவும் அதற்கடுத்த முறையாகவும் தொழிலார்த்தமாகச் செல்ல நேர்ந்தது. அப்பொழுது தான் எழில்மிகு இலங்கையின் பல பாகங்களையும் மேற்கூறிய சகாக்களுடன் பார்த்தேன். நான் ஒரு பத்திரிகாசிரியனுக இருந்திருந்தால் அந்தக் கண்ணுடனும் கருத்துடனும் பார்த்திருப்பேன்; அப்படிக் கில்லாததினுல் விநோதார்த்தமாக மட்டும் தான் பார்க்க முடிந்தது.

கதைகள் ஆரம்பிப்பது போலத்தான் இதனையும் ஆரம்பிக்க வேண்டிய திருக்கிறது. நான் ஒரு கதாசிரியன் என்ற முறையில் அவ்வாறு ஆரம்பமாவது பற்றிச் சந்தோஷத்துடன், 'ஓர் நாள் இரவு!' என்று துவக்குகின்றேன்.

அன்று பௌர்ணமிதினம்! ஆகாயம் களங்கமற்றிருந்தது. பூர்ணச் சந்திரன் பொலிவுற்று விளங்கினுன். விண், மண், காடு, செடி, கொடி, மலை, வனம் ஆகிய அனைத்தும் பால் மயமாய்த் தோன்றின. இரவு நேரத்தில்,—முழுமதி தினத்தில், நண்பர்களுடன்,—நகர்வளம் காண,—இரயில் வண்டிப் பிரயாணம்,—என்ருல் அதனைக் கூறித் தெரிவதினும், அனுபவித்தறிவது மெத்த இன்பம் பயக்கும்—நிற்க, நாங்கள் எங்களால் கூடுமான தூரம் வரை, பார்வையைச் செலுத்திக் கண்களுக்குச் செவ்விய விருந்தளித்துக் கொண்டே பிரயாணம் செய்தோம். கானரசம் காதுக்கு எவ்வளவு இனிமையோ அதினிலும் இனித்தே கண்ணுக்குக் காக்ஷி நயம்! போக, எங்கள் பிரயாணம் மூன்ரும் வகுப்பில் தான்! இதனைச் சொல்ல வெட்கப் படவேண்டியதில்லை! எங்கள் அந்த மந்திரி என்ன,—இந்த மந்திரி என்ன,—இவர்களே அவ்வகுப்பில் பிரயாணம் செய்யும் பொழுது நாங்கள் வெட்கப் படவேண்டிய பிரமேயமே இல்லையன்ருே! ஆனுல் ஒன்று! இலங்கை இரயிலின் வண்டவாளத்தை அதன் தண்டவாளத்தடியில் தான் போட வேண்டும்! முதலாம் 'கிளாசா'னுலும் சரி,—மூன்ரும் 'கிளாசா' னுலும் சரி,—நாசமாய்ப் போக,—நாம் கொடுக்கும் சல்லி,—அடடே! அந்தச் 'சல்லி' இங்கேன் புகுந்தது? அது இலங்கையிலேயே இருக்கட்டும்! அங்கு எவ்வளவு பணத்திற்கும் 'சல்லி' என்று சொல்வது சர்வசாதாரணம்! அதற்குத் தகுந்த வசதியில்லை. என்பதை மட்டும் இங்குக் கூறுகின்றேன். என்ருலும் என் செய்வது? தயாராக இருங்கள்! அடுத்த இதழில் யாழ்ப்பாணத்திற்கு அழைத்துச் செல்கிறேன். (தொடரும்)




# சங்கீத வித்வானோடு

[பாரதிதாசன்]

(சென்ற இதழ் தொடர்ச்சி)

**சங்கீத** வித்வான் கூறினார்: பிள்ளையார் கீர்த்தனம் முதலில் பாடுகிறேன். பிறகு........

கேள்வி:—சரி, பத்ததி தெரிகிறது. ஆரம்ப முதல் அந்தியம் வரைக்கும் என்ன பாஷையில் பாடுகிறீர்கள்?

பதில்:—பெரும்பாலும் தெலுங்கில்தான். கடைசியில் தமிழ் கூட, பாடுகிறேன்.

கே:—தெலுங்கு தெரியாதவரிடம் கூடவா தெலுங்கில் பாடுகிறீர்?

ப:—தெலுங்கு தெரியாத தமிழர்கள் அழைக்கிறார்கள். தமிழர் கேட்கிறார்கள். பாடுகிறவனாகிய நான்கூடத் தெலுங்கு தெரியாத தமிழன் தான்.

கே:—இது ஏமாற்றல்லவா?

ப:—எப்படி ஏமாற்றுவதாகும். என் குரு தெலுங்கில் உள்ள த்யாகராஜ க்ருதிகள் சொல்லிக் கொடுத்தார். குருவும் அதைத் தான் தம் காலத்தில் தெரிந்துகொண் டிருக்கிறார். நான் மாத்திர

மல்ல. சங்கீத வித்வான்கள் அனைவரும் அப்படியே. வழக்கமாகி விட்டது.

கே:—தமிழர்கள் வழக்கமாக ஏமாற்றப் படுகிறார்கள் என்கிறீர்களா?

ப:—நான் தெலுங்கில் பாடுவது தெரிந்தும், என்னைத் தமிழர்கள் அழைகிறார்கள். நான் கச்சேரியை முடித்துக் கொண்டதும் அவர்கள் மனம் ஒப்பித்தான் எனக்குப் பணம் கொடுக்கிறார்கள் எப்படி யேமாற்றமாகும்?

கே:—ஏமாறுகிறவர்கள் அவர்கள் தாமே; யாரும் ஏமாற்ற வில்லையே என்கிறீர்கள். அதுதானே உமது வாதம்?

ப:—நன்றாய் யோசிக்கப் போனால் அதுதான் முடிவான அர்த்தம்.

கே:—ஏமாறுகிறவர்களிடம் பணம் பெறுகிறவர்கள்—பெறுவதை நிறுத்தினால் அவர்கள் ஏமாற வழியில்லை. ஆனால், நீங்கள் ஒன்று செய்யலாம். தமிழர்கட்குத் தெரிந்த தமிழில் பாடுக. அது அவர்களுக்கு நற்போதனையாகவும், பக்தி ப்ரசாரமாகவும் ஆகும். இருக்கட்டும். உமக்கே அர்த்தம் புரியாமல் இருக்கும் ஒன்றை மக்கள் கூட்டத்தில், தலையசைத்து, கைகாட்டி, சிரித்து, கோபித்து, இப்படி யெல்லாம் பாவனை காட்டி உச்சரிக்கிறீர்களே இது என்ன யோக்யதை?

சங்கீதத்தின் நோக்கம் என்ன தெரியுமா உமக்கு? ஸ்வர பேதத்தை உச்சரிப்பதா? அதற்கு நீரென்ன? வாத்தியக்காரர்கள் இருக்கிறார்களே? யோசித்துப் பாரும். இன்னும் ஒருமுறை கூறுகிறேன். உரை நடையில் ஒரு விஷயத்தை வெளியிடுவதைவிட, ஒரு கவிதையின் மூலம் வெளியிடுவதால், கேட்பவர்க்கு மிக்க ப்ரயோஜனம் உண்டாகும். அந்தக் கவிக்கும் சங்கீதத்தை அமைத்துப் பாடினாலோ மிக்க ப்ரயோஜனம். அபிப்பிராயத்தை—அறிஞர்களின் எண்ணத்தை—பக்தர்களின் உள்ளத்தை விளக்கச் சங்கீதமே ஒழிய, சங்கீதத்திற்காக வார்த்தைகள் அல்ல. தெரிந்த மொழியில் மேலான எண்ணங்களை ராகத்தோடு பாவத்தோடு அறிந்து கொள்ளுவதுதான் உமக்குப் பணம் கொடுப்பதன் நோக்கமே தவிர, ஆளுக்காக, அவன் சங்கீதத்தோடு கூட்டிக் கூவும் கூச்சலுக்காக அல்ல! தமிழ் நாட்டின் நிலையை உணர்ந்ததுண்டா நீவிர்? தமிழ் தமிழ் என்று கதறுகிறார்கள்! உமது முறையை—ஏமாற்று வித்தையைத் திருத்திக்கொள்ள முற்பட வேண்டாமா நீவிர்?

(தொடரும்)

# வனிதா அல்லது கொலையுண்ட காரிகை

[A. வாசிமலை]

(All rights reserved with the author)

[முன் கதைச் சுருக்கம்:—காதலர்களான ராமகிருஷ்ணனும் வனிதாவும் கடற்கரையில் வார்த்தையாடிக் கொண்டிருக்கிறார்கள். காதலன் மறுநாள் பக்கத்தூரிலுள்ள தன் நண்பன் வீட்டுக்கு விருந்துக்குப் போவதாகவும் அதற்குக் காதலி வருவதற்காக 8 மணிக்குக் கார் அனுப்புவதாகவும் சொல்கிறான். வேலையில்லாது இராமகிருஷ்ணனின் உதவியால் ஜீவித்து வரும் கோவிந்தனும் ரங்கநாதனும் வனிதாவை ஏமாற்றி நகைகளை அபகரிக்க எண்ணினர். மறுநாள் தாங்கள் திருவனந்தபுரம் போவதாக நண்பனுக்குக் கடிதம் அனுப்பினர். டிரைவருக்குப் பதிலாக கோவிந்தனால் ஓட்டப்பெற்ற கார் வனிதாவை ஏற்றிக்கொண்டு சென்றது. வழியில் ரங்கநாதனும் சேர்ந்தான். சாகசமாக அவள் பக்கம் அமர்ந்து, மயக்க மருந்தை முகத்தில் காட்ட மயக்கமுற்று அவன் கையிலே சாய்ந்தாள். கார் போய்க் கொண்டிருக்கிறது. பள்ளிக்கூட மீட்டிங்கிற்குச் சென்றிருந்த ராமகிருஷ்ணன், தன் கார் வழக்கம்போல் அங்கு இல்லாதது கண்டு காத்திருக்கிறான். ஓடிவந்த டிரைவர் மூலம் கார் திருடப்பட்டது என அறிகிறான். தன் வீடு சென்று விசாரித்தும் பலனின்றி, வனிதாவைக் காணச் சென்றான். அவன் பெற்றோர் இவனிடம் வனிதாவைப்பற்றிக் கேட்டனர். இவன் அழைத்துக்கொண்டு போகவில்லை என்பது தெரிந்ததும், இதில் ஏதோ சூது நடந்திருக்க வேண்டுமென்று எண்ணினர். ராமகிருஷ்ணன் போலீசுக்கு அறிவிக்கச் சொல்லிவிட்டுத் திரும்பி விட்டான். வனிதாவின் பெற்றோர் மிகக் கவலையுற்று ஓர் நற்செய்தி கிடைக்காதா என்று ஏங்கி யிருந்தனர்.]

ராமகிருஷ்ணன் பலவிடங்களிலும் சென்று தேடியலைந்து பார்த்தான். பலனில்லாமற் போகவே, அவன் கடைசியாக வீடே கதி யென்று அன்னாகாரத்தையும் மற்றும் பல ஆடம்பரங்களையும் வெறுத்து, விசனத்தால் பீடிக்கப்பட்டுக் கிடந்தான். கார் டிரைவரான ராமு கூடவே யிருந்து ராமகிருஷ்ணனுக்கு வேண்டியவற்றைச் செய்து வந்தான்.

வனிதாவும் ராமகிருஷ்ணனும் எத்தன்மையான காதலர்களாயிருந்தார்க ளென்பது நம்மால் விஸ்தரிக்க முடியாத விஷயம். வனிதாவுக்கு ராமகிருஷ்ணனே உயிர். ராமகிருஷ்ணனுக்கும் வனிதாவே உயிர் நிலையம். அப்படி யிருந்த அவர்கள், ஒருவரையொருவர் விட்டுப் பிரிந்த காலத்து எவ்வளவு வருந்துவார்கள் என்பது நேயர்களறிந்த விஷயம். ஆராய்ந்து கூறுவோமானால்,

ராமகிருஷ்ணனுக்கு இருந்த விசனம் வனிதாவின் தாய் தந்தையருக்குக் கூட, கிடையாது. அவர்களுக்காவது ஒரு மகள் போய் விட்டால் இன்னொரு குமாரனிருக்கின்றான் அவர்கள் துக்கத்தைப் போக்குவதற்கு. ராமகிருஷ்ணனுக்கு இனிமேல் எந்தக் காதலி இவ்வுலகத்திலிருக்கிறாள், அவனைத் தேற்றுவதற்கு!

விஷயமறிந்த போலீஸார் உடனே பல ஊர்களுக்கும் தந்தி கொடுத்து, ஒரு குறித்த எண்ணைத் தெரிவித்து அந்த எண்ணுள்ள கார் வந்தால் பிடித்துக் கொள்ளும்படியாகத் தெரிவித்தனர். பின்பு அவர்கள் ஊரில், நடந்த விஷயத்தைப்பற்றிப் புலன் விசாரித்தும் பார்த்தனர். அப்படி ஆராய்ந்து பார்த்ததில் அவர்களுக்குப் பலர் மேலும் சந்தேகம் உதித்துவிட்டது. உதயபுரக் கல்யாண வீட்டார் மேலும், கார் டிரைவரின் மேலும், திருவாங்கூர் சென்ற இரு சினேகிதர்களின் மேலும், முக்கியமாக ராமகிருஷ்ணனின் மேலும் பலத்த சந்தேகம் உதித்து விட்டது. காரணம் வனிதாவின் வீட்டிற்கு அடுத்த வீட்டிலிருந்தவர் தெரிவித்த சாட்சியேயாகும். ஆனால், போலீஸாருக்கு எல்லோரையும் பிடித்து இம்ஸிக்க மனம் இடங்கொடுக்கவில்லை. கார் டிரைவரைப்பற்றி நன்கு விசாரித்துப் பார்த்ததில், அவன் இவ்விஷயத்தில் எள்ளளவும் சம்பந்தப்பட்டிருக்க மாட்டானென்று தெரியவந்தது. எனவே, சிறிது காலம் கழித்தே மற்ற நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளப் போலீஸார் தீர்மானித்தனர்.

## அத்தியாயம் 5.

சங்கதி யிவ்வாறிருக்க, இரண்டு மூன்றுநாள் கழித்து வெளி வந்த பத்திரிகையில் ஒரு பெரிய விஷயம் வெளிவந்தது. ராமகிருஷ்ணன் துக்கமே தன் துணையாக்கொண்டு மிகவும் விசனத்துடன் அமர்ந்திருந்த பொழுது, டிரைவர் ராமு 'எஜமான்! எஜமான்!! இதோ பாருங்கள் வனிதாவின் விஷயம் ஏதோ வெளிவந்திருப்பதை' என்று பத்திரிகையைக் காண்பித்தான். அதில் பின் வருமாறு விஷயம் வரையப் பட்டிருந்தது.

### கொலை! கொலை!! கொலை!!!

வனிதா என்ற பெண்மணியின் முடிவு

நடுக்காட்டில் படுகொலை!

கடந்த........தேதியன்று நமது பத்திரிகையில் வனிதா என்னும் பெண்மணி யாரோ ஒருவரால் ஏமாற்றி யழைத்துக்

கொண்டு போகப் பட்டாளென்றும், அவளைப்பற்றி ஏதாவது விஷயம் தெரிவித்தால் தகுந்த வெகுமதி யளிக்கப் படுமென்றும், வெளிவந்தது வாசகர்களுக்கு ஞாபக மிருக்கலாம். அவ்வனிதா இப்பொழுது கரும்பாறை என்ற கிராமத்திற்குப் பக்கத்திலுள்ள ஒரு காட்டில் குத்துண்டு கிடந்தாள். தெளிவான விபரம் பின் வருமாறு:—

கரும்பாறைக் கிராமத்திலுள்ள சிலர் இரண்டு நாளைக்கு முன்பு, மேற்சொன்ன காட்டின் வழியாக விறகெடுக்கச் சென்றபொழுது, பருந்து முதலிய பறவைகள் ஓரிடத்திற்கு நேராக ஆகாயத்தில் வட்டமிட்டுக் கொண்டிருக்கக் கண்டு, ஏதாவது மிருகம் செத்துக்கிடக்கலா மென்று போய்ப் பார்க்கவும், அங்கு ஓர் அழகிய பெண்மணி இறந்து கிடக்கக் கண்டு, உடனே விஷயத்தை அக்கிராமத்தின் நாட்டாண்மைக் காரருக்குத் தெரிவித்தனராம். அவர் பத்திரிகையில் வெளியிடப் பட்ட விஷயத்தைப் படித்து அறிந்திருந்தவராகையால், உடனே நடந்திருக்கும் விஷயத்தைச் சென்னைப் போலீஸாருக்கே தெரிவித்து விட்டு, பிணத்தைத் தக்க பந்தோபஸ்துடன் காத்து வந்தனராம். சென்னைப் போலீஸார் பின்பு அங்கு சென்று பிணத்தைப் பார்வை யிட்டனர். பிணத்தில் ஆபரணம் முதலியவைகள் ஏதொன்றும் தென்பட வில்லை. (ஆனால், வனிதா சுமார் பதினையாயிர ரூபாய் பெறும்படியான நகைகள் அணிந்திருந்தாள் என்று வெளிவந்ததை இங்கு நினைப்பூட்டுகிறோம்) சரீரத்தில் பலமான குத்துக்காயம் ஒன்று இருந்ததாம். பின்பு அப்பெண்ணின் பிதாவாகிய கோபால் முதலியாரைக் கூட்டிக் கொண்டு போய்க் காண்பித்து, அங்கு இறந்து கிடப்பவள் தானா அவர் புத்திரியென்று கேட்டதற்கு, அவர் அவளே தன் புத்திரியாகிய வனிதா என்று தெரிவித்தாராம். அங்குச் சில ஜாமான்களும் கிடந்து போலீஸார் எடுத்து வைத்திருப்பதாகத் தெரிகிறது. அவைகள் என்னவென்று நம்மால் கூற முடியாதபடி மர்மாயிருக்கிறது. பின்னும் நேரில் பார்த்தவர்கள் அவளைச் சுற்றிலும் பின்வருமாறு எழுதப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கின்றனர்.

'இவள் விபசாரி! விபசாரி!! கிட்ட நெருங்கினால் கூட உங்களையும் பாவம் சுற்றிக் கொள்ளும். இவள் முகத்தில் விழித்தால் கூட உங்களுக்கு விமோசன மில்லை. விபசாரிகளுக்கு என் போன்றவர்கள் கொடுக்கும் தண்டனை இதுதான். ஏனெனில் இவள் தனக்கு ஆருயிர் நண்பனாகவும் பிரியகாதலனாகவும் இருந்த ஒருவனை வஞ்சித்தவளல்லவா?'

இதுபோல் ஒரு காகிதத்திலும் எழுதி அவள் நெற்றியில் ஒட்டப்பட்டிருந்ததாம். குற்றவாளி யாரென்று போலீஸார்

இன்னும் இரண்டொரு நாளைக்குள் கண்டுபிடித்து விடுவார்களாம். பிணம் சென்னை கவர்ன்மெண்டு ஆஸ்பத்திரியிலிருக்கிறது.

இதை வாசித்த ராமகிருஷ்ணன், வனிதா கொல்லப் பட்டுக் காட்டில் கிடக்கின்றாள் என்று அறிந்த உடனேயே 'ஆ, வனிதா! நீ யென்னைக் கைவிட்டுச் சென்று விட்டாயா! ஐயோ வனிதா! என்வாயில் மண்ணை அள்ளிப் போட்டுவிட்டு நீ போய் விட்டாயோ! கடவுள் ஒருவர் உண்டென்று கூறுகிறார்களே! அப்படியிருந்தால் அப்பாழுந் தெய்வத்திற்குக் கண்கெட்டுக் குருடாய் விட்டதோ! ஐயோ வனிதா! நாம் எவருக்கும் ஒரு தீங்கு கூடச் செய்ய மனதில் எண்ணியதில்லையே! உன்னைக் கொன்ற அச்சண்டாளன் என்னையும் கொன்றிருக்கக்கூடாதா! அவன் உன் நகைக்கு ஆசைப்படடுத் தான் உன்னைக் கொன்றிருப்பானென்று நினைக்கிறேன். அச்சண்டாளன் என்னிடம் ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் கூட, அந்நகைகளைப் போல் இரண்டு பங்கு நகைகள் தந்திருப்பேனே! உன்னையே சதமென்றிருந்த என்னையா கடவுள் இக்கெதியில் விடவேண்டும்! இல்லை! இல்லை!! கடவுள் ஒருக்காலும் அப்படி நியாய விரோதமாக நடக்க மாட்டார். நான் முற்பிறப்பில் பொல்லாத பாவங்களைச் செய்திருப்பேன்—ஆம்; நான் எக்காதலர்களுக்காகிலும் முற்பிறப்பில் இடையூறு செய்திருப்பேன். அதற்காகவே கடவுள் என்னை இப்பொழுது தண்டித்து விட்டார் போலும். ஹே! கருணாகரா! நீ செய்தது ஞாயமே. நானே குற்றவாளியா யிருந்து கொண்டு கிந்திப்பதில் பயனில்லை.' என்று பலவாறு புலம்பித்தவித்தான். பின்பு ஒருவாறு மனம்தேறி, ஆஸ்பத்திரியில் பிணம் கிடத்தப்பட்டிருக்கிறது என்று கூறப்பட்டிருப்பதால், அதைப் போய்ப்பார்த்தாகிலும் வரலாம் என்று அவசரமாகப் புறப்பட்டான். வனிதா காணமற் போனதிலிருந்து அவன் வீட்டை விட்டு வெளியில் எங்கும் செல்லவில்லையாதலால், வெளியில் நடந்த சங்கதி ஒன்றும் அவனுக்குத் தெரியாது அவன் மாமனைக் கூட 'ஏதோ அவசரமாக இன்ஸ்பெக்டர் கூப்பிடுகிறார்' என்று சொல்லியே போலீஸார்களும் பாறைக்கு அழைத்துச் சென்று பிணத்தைக் காட்டினர்.

இப்பொழுது ராமகிருஷ்ணன் வீட்டை விட்டுப் புறப்பட்டு வெளியில் வந்த பொழுது, ஒரு சப்இன்ஸ்பெக்டரும் நாலைந்து கான்ஸ்டேபிள்களும் தன் வீடு நோக்கி வருவதைப் பார்த்துக் காரணமென்ன வென்று கேட்டான்.

சப்இன்ஸ்பெக்டர்:—நீர்தானு ராமகிருஷ்ணன் என்பவர்?

ரா-கி:—ஆம்.

ச-இன்:—இப்பொழுது நீர் எங்கே புறப்பட்டுச் செல்கிறீர்?

ரா-கி:—நான் ஆஸ்பத்திரிக்கு வனிதாவின் பிரேதத்தைப் பார்த்து வருவதற்காகப் போகிறேன். வந்த விஷயம் என்ன வென்று கொஞ்சம் விரைவாகச் சொல்லுங்கள்.

ச-இன்:—நீர் இவ்வூரிலிருந்தால் தானே அதையெல்லாம் கவனிக்கப் போகிறீர். உமக்கு அநேக ஜோலிகள் இருக்கும் போது அதையெங்கு கவனிக்க முடியும்? அவளைக் கொண்டு போய் தகனம் செய்து சாம்பலுமாகி விட்டாள். உம், ஏது அவ்வளவு அக்கரையுடன் சென்று பார்க்கப் புறப்பட்டு விட்டீர்கள்?

ரா-கி:—அவளை இப்பொழுது தகனம் செய்து விட்டார்களா! ஆ! என் மாமனும் ஏன் இவ்வாறு நடக்க ஆரம்பித்து விட்டார்? இவ்வளவு காரியம் நடந்தும் அவர் ஒன்றும் என்னிடம் சொல்லா திருப்பதற்கு நான் என்ன குற்றம் செய்தேன்?

ச-இன்:—நீர் என்ன செய்தீரோ, அது பின்னால் தெரியவரும் இப்பொழுது உம்மை ஸ்டேஷனுக்கு அழைத்து வரும்படி எனக்குக் கட்டளை பிறந்திருக்கிறது.

ரா-கி:—நான் எதற்காக ஸ்டேஷனுக்கு வரவேண்டும்?

ச-இன்:—அது ஏனோ எனக்குத் தெரியாது. உம்மை அழைத்துப் போவது என்னுடைய கடமை.

இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே ஒரு சிறுவன் ஒரு கடிதத்தைத்தன் கையில் வைத்துக் கொண்டு 'ராமகிருஷ்ணன்! ராமகிருஷ்ணன்!' என்று கூவினான். ராமகிருஷ்ணன் அக்கடிதத்தை வாங்கிப் பிரித்து வாசித்தான். வாசிக்கும் பொழுதே அவன் முகத்தில் பலவித ஆச்சரியக் குறிகளும் துக்கக்குறிகளும் தோன்றுவதைக் கண்ட சப்இன்ஸ்பெக்டர், 'என்ன, ராமகிருஷ்ணன்! கடிதத்தில் என்ன விஷயமிருக்கிறது?' என்றார். அதற்கு ராமகிருஷ்ணன், 'சதிகாரத் துரோகிகள்!' என்று சொல்லிக் கொண்டே கடிதத்தைக் கசக்கினான். உடனே சப்இன்ஸ்பெக்டர் அதை வெடுக்கென்று பிடுங்கி வாசித்துப் பார்த்தார். அதில் பின்வருமாறு தீட்டப் பட்டிருந்தது.

எஜமான் ராமகிருஷ்ண முதலியாரவர்கள் சமுகத்திற்கு, அடிமைகள் மிகவும் வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்ளும் ஓர் அறிக்கை. அன்று நாம் கொன்று போட்ட வனிதாவை, நேற்றுப் போலீஸார் பார்வையிட்டனர் போல் தெரிகிறது. நாம் எவ்வளவோ ஜாக்கிரதையாக வேலை செய்தும்; சிறிது ஏமாந்து விட்டோம். அங்கே வனிதா தங்களோடு உயிருக்காகப் போராடின பொழுது, தங்கள் சட்டையைக் கிழித்துப் போட்டு விட்டாளல்லவா? அதை நாம் எடுக்க மறந்து விட்டோம். இப்பொழுது அது போலீஸார்

கையில் சிக்கி விட்டது. வனிதாவின் கைகளைக் கட்ட உதவிய கைக்குட்டையையும் நாம் அவள் கையிலிருந்து கழற்றிக் கொண்டுவர மறந்து விட்டோம். அதுவும் அவர்கள் கையில் சிக்கி விட்டது. எதற்கும் நீங்கள் பயப்பட வேண்டாம். உடனே தப்பி ஓடிவந்து விடவும். காரை ஸ்டாண்டில் கொண்டு வந்து நிறுத்தி விட்டோம்.

இப்படிக்கு,

கருப்பன், மூக்கன்.

இதை வாசித்த சப்இன்ஸ்பெக்டர், 'விஷயம் இதுவரை சிறிது சந்தேகத்திலிருந்தது. இப்பொழுது இருந்து சிறிது சந்தேகமும் பறந்தோடி விட்டது. உம்; புறப்படும் போகலாம். ஏன், உமது காரிலேயே ஏறிச் செல்லலாமே. இல்லாவிடில் இன்னும் காணோம், காணோம் என்று சொல்லிக் கொண்டிருக்கப் போகிறீரா?'

ராமகிருஷ்ணன்:—சப்இன்ஸ்பெக்டர்வாள்! பேச்சு அதிகம் வளரவேண்டாம். என் கார்ஸ்டாண்டில் காரிருந்தால் கொண்டு வாரும். ஸ்டேஷனுக்குப் புறப்படத் தயார்.

சப்இன்ஸ்பெக்டர் டிரைவரைக்கொண்டு கதவைத் திறந்து பார்த்தார். என்ன ஆச்சர்யம்! முதல் நாள் பார்த்தபொழுது காலியாகக் கிடந்த ஸ்டாண்டில், இப்பொழுது கார் நிறுத்தப்பட்டிருப்பதைக் கண்டு டிரைவர் அப்படியே ஸ்தம்பித்து நின்று விட்டான். அதிகம் கூறுவானேன். ராமகிருஷ்ணன் ஸ்டேஷனுக்கு அவன் காரிலேயே ஏறிச் சென்றான்.

ஸ்டேஷனுக்குள் நுழைந்த பொழுது இன்ஸ்பெக்டரையும், அவர் மேஜையின்மேல் ஒரு கிழிந்த சட்டையையும், மற்றுமொரு கைக்குட்டையையும் அவன் கண்டான். ஆயினும் அவன் மேஜையைக் கவனியாதவன்போல் அவருக்கு மரியாதை செய்துவிட்டு, தன்னை யழைத்த காரணம் யாதென்று கேட்டான். இன்ஸ்பெக்டர் மேஜையில் கிடந்த துணிகளை எடுத்து அவன் கையில் கொடுத்து, 'இவைகளெல்லாம் உம்முடையதுதானே?' என்று கேட்டார். 'ஆம்' என்றான் ராமகிருஷ்ணன். அதே சமயத்தில் சப்இன்ஸ்பெக்டர் ராமகிருஷ்ணனுக்கு வந்த கடிதத்தையும் அவரிடம் கொடுத்தார். அவர் அதை வாசித்துவிட்டு, 'பாவி மனுஷன்கள்! நீங்கள் போயிருக்கும் சமயத்தில்தான அக் கடிதமும் வந்து சேரும்படியாக அனுப்ப வேண்டும்! நீங்கள் ராமகிருஷ்ணனிடத்தில் அதே சமயத்திலிருக்கிறீர்கள் என்று இந்தப் பாழுங் கடிதத்திற்குத் தெரியவில்லை போலும். ஹூம்; இன்னும் கொஞ்சநேரம் கழித்துச் சென்றிருந்தால் ஆசாமி எவ்வளவோ வேலைகள் செய்

இருப்பபான். சரி, ராமகிருஷ்ணு! இக் கொலையைப்பற்றி நீ என்ன சொல்கிருய்?'' என்ருர்.

ரா-கி:—எக் கொலையைப்பற்றி?

இன்:—அதுதான், வனிதாவின் கொலையைப்பற்றி.

ரா-கி:—நான் என்ன சொல்ல இருக்கிறது? கொலையாளி யாரென்று எனக்குத் தெரியாது. குற்றவாளியைக் கண்டு பிடித்து அவனைத் தக்கபடி தண்டிக்க வேண்டியது தான்.

இன்:—ராமகிருஷ்ணு! நீயே அக்கொலையைச் செய்திருப்பா யென்று நான் உன்மேல் குற்றம் சாட்டுகிறேன்.

ரா-கி:—அது என்னல் எதிர் பார்க்கப்பட்டதே. ஆயினும் என்ன முகாந்திரத்தைக் கொண்டு என்னைக் குற்றவாளியென்று சொல்லுகிறீர்?

இன்:—அவள் உன்னைத் தவிர வேறு யாரோ ஒருவனுடன் சினேகமாயிருக்கக் கண்டு, நீயே அவளைக் கொன்றிருக்க வேண்டு மென்று நீ அவள் நெற்றியில் ஒட்டிவைத்திருந்த கடிதத்திலிருந்து தெரிகிறது.

ரா-கி:—ராம! ராம! அவளிறந்தும் அவளுடைய ஆன்மா சாந்தி யடையாதுபோல் தெரிகிறதே. 'விபசாரி! விபசாரி!' என்று ஊரார் அவளை நிந்திப்பதற்கும் வழி செய்தனரே, சதிகாரத் துரோகிகள்! சரி, இன்னும் என்னதான் நீங்கள் சொல்லப் போகிறீர்கள்?

இன்:—இன்னும் நாங்கள் சொல்வ தென்னவென்றுல் நீ ஏதோ ஓர் இடத்திற்கு அவளை வரச் சொன்னதாகவும், பின்பு உன் காரிலேயே அவளை வைத்து வேருெரு ஆள்மூலம் எங்கோ அழைத்துக்கொண்டு போனதாகவும் வனிதாவின் வீட்டிற்கு அடுத்த வீட்டிலிருப்பவர் சொல்வதிலிருந்து தெரிகிறது. அவர் அக்காரை ஓட்டிக்கொண்டு வந்தவன் வனிதாவிடம், 'ராம கிருஷ்ணன் உனக்காகக் காத்துக்கொண் டிருக்கிறுன்' என்று சொன்னதைத் தன் காதாரக் கேட்டிருக்கிருர். நீ அவளை உதய புரத்துக்கு அழைத்துச் செல்வதாகச் சொல்லி யிருந்தா யென்று கோபால் முதலியாரே கூறுகிருர். மேலும் நீ அவளைச் சில நாளைக்கு முன்பாகவே கருப்பன் மூக்கன் என்ற இரு போக்கிரிகள் மூலம் அழைத்துக் கொண்டுபோய் எங்கோ ஒளித்து வைத்திருந்து, விசனத்தால் வீட்டைவிட்டு வெளியில் கிளம்ப மனமில்லாதவன் போல் வெளி வேஷம் போட்டுக் கொண்டிருந்து, நேற்றைக்கு முந்தினநாள் இரவு சென்று அப் பெண்மணியைக் கொன்றிருக் கிருய். நீ அவளுடைய கைகளைச் சேர்த்துக் கட்டியிருந்த கைக்

குட்டை இதோ யிருக்கிறது. இதோ உன் கிழிந்த சட்டை. போதாக் குறைக்கு இக் கடிதமும் வந்து, நீ செய்தது வாஸ்தவம்தான் என்பதை நிரூபித்து விட்டது. காரை நீயே அனுப்பினதினுற்றுன், கார் காணுமற் போனதாகக்கூட போலீசுக்குத் தெரிவிக்கவில்லை. நீ வாஸ்தவமாக உமது காரை இழந்திருந்தால், இப்படி ஸ்டேஷனில் கூட 'ரிபோர்ட்' செய்யாமல் இருந்திருப்பாயா?

ரா-கி:—நான் என் மாமனுர் தன் மகள் காணுமற் போனதாகத் தெரிவித்த பொழுதே இதையும் ஸ்டேஷனில் தெரிவித்திருப்பார் என்று நினைத்தேன். ஆனல், இவ்வளவுதூரம் காரியங்கள் நடந்து விடுமென்று நான் நினைக்கவேயில்லை. மேலும் என் ஆசைக் கண்மணி வனிதாவே போய்விட்ட பிறகு, இந்தக் கார் எக்கேடு கெட்டால்தான் எனக்கென்ன?

இன்:—அந்தப் பசப்பு வார்த்தையில் நான் மயங்கி விடமாட்டேன். அது கிடக்கட்டும். இப்பொழுது உன் மாமனுர் காரைப் பற்றி ஸ்டேஷனில் சொன்னுரோ, சொல்லவில்லையோ. அதைப்பற்றி நான் கேட்கவில்லை. நீ உன்னுடைய கார் காணுமற் போனதாகப் பிரியாது கொடுத்தாயா என்பதே என்னுடைய கேள்வி. தெருவில் போகும் ஒருவர் ராமகிருஷ்ணன் என்பவருடைய கார் காணுமற் போய்விட்டது என்று சொன்னல், நாங்கள் ஒருபோதும் அக் காரைக் கண்டு பிடிக்கச் சிரத்தை யெடுத்துக் கொள்ளமாட்டோம். மேலும் இன்னுமொரு முக்கிய சாட்சியு மிருக்கிறது. அதாவது உன் மாமனுரே வருகிற புதன்கிழமை நடக்கப்போகும் விசாரணையில், நீயே வனிதாவை விபசாரி என்று ஒத்துக் கொள்வதாக ஒரு கடிதத்தின் மூலம் நிரூபிப்பதாகக் கூறுகிறுர்.

ரா-கி:—என்ன சொன்னீர்கள்! என் மாமனுரும் நான்தான் கொலையாளி என்று சொல்கிறுரா?

இன்:—ஆம்; கிடைத்திருக்கும் ஆதாரங்களிலிருந்தும், நீ கடந்த நாலைந்து நாட்களாக அவர் வீட்டுப் பக்கமே போகாமல் உன் காரியத்திலேயே கண்ணுயிருந்ததாலும், அவர் நீயே கொலை செய்திருக்கலாம் என்று கூறுகிறுர். அப் பெண்ணை உனக்குக் கல்யாணம் செய்து கொடுக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. இப்பொழுது என்ன சொல்கிறுய்? (தொடரும்)

---

உபாத்தியாயர்:—அடே கோபாலு, நீ என் நாவல் புத்தகத்தையே படிக்கிறுய்?

கோபாலன் (மாணவன்) நீங்கள்தானே 'கண்டது கற்கப் பண்டிதனுவான்' என்று சொன்னீர்களே. —P. S. சுப்ரமண்யம்

## முதல் தரமான

# உயர்ந்த சந்தனக் கட்டை

எங்களிடம் முதல்தரமான உயர்ந்த சந்தனக்கட்டையும், சந்தனத் தூளும், சந்தனச் சக்கையும், வேரும் கிடைக்கும். உலகத்திலேயே வாசனையில் சிறந்த முதல்தர சந்தனக் கட்டையை நாங்கள் வர வழைத்து வியாபாரம் செய்வதால், உயர்தர சந்தனக்கட்டை வேண்டியவர்கள் எங்களிடம் வந்து பார்த்து வாங்கவும். சில்லரையிலும் மொத்தத்திலும் கிடைக்கும்.

| | | | |
|---|---|---|---|
| சந்தனத் தூள் | 1 | பவுன் பெட்டி | 0—9—0. |
| ,, | ½ | ,, | 0—5—0. |
| ,, | ¼ | ,, | 0—3—0. |

**பழனியாண்டவர் கம்பெனி,**

சந்தன வியாபாரம்,

**220,** கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை.



வெளி வந்து விட்டது ! வெளி வந்து விட்டது !!

# தாசிகளும் தாசிகாந்தர்களும்

## (ஓர் அரிய புதிய நாடக நூல்)

தமிழ்ப் புலவர் ஏ. சொக்கலிங்கம் பிள்ளை எழுதியது.

இந்நூல் தமிழர்களுக்கு ஒரு சிறந்த விருந்தாகவும், அநுபவ பொக்கிஷமாகவும், அறிவு புகட்டும் அருமை நண்பனாகவும் விளங்கும். இந் நூலைச் சில பக்கங்கள் வரையில் படித்தால் கடைசி வரையில் படித்து முடிக்கும்படித் தூண்டுமென்பதற் கையமில்லை. நல்ல கிளேஸ் காகிதத்தில் சித்திரப் படங்களோடு கூடிய அழகிய இப்புத்தகத்தின் விலை எட்டணா தான். தபால் செலவு அணா 2. 10 அணா ஸ்டாம்ப் அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும்.

கிடைக்குமிடம் :

**‘தமிழரசு’ புத்தகாலயம்,**

**31,** வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

# கோல்டனல்

நண்பர்களே! இந்த மருந்தானது தங்கம் முதலான விலை யுயர்ந்த வஸ்துக்களினால் தயார் செய்யப்பட்டது. இதனை அநேகர் உபயோகித்து வருகின்றனர். இதன் உயர்ந்த குணத்தைப் பலரும் புகழ்கின்றனர். சிறுவர்கள் முதல் வயோதிகர் வரையில் நிர்ப் பயமாய் உபயோகிக்கலாம். தாது விருத்திக்கு நல்ல மருந்து. மலேரியா என்னும் விஷ சுரத்தினாலாவது அல்லது வேறு எந்த சுரத்தினாலாவது சரீரம் இளைத்து இரத்தம் குறைந்து சோகை போலும் வெளுத்துக் காணப்படும் இளைத்த தேகிகளுக்கு ஒரு ஆச்சரிய அபூர்வமெனவே சொல்ல வேண்டும்.

இதைச் சாப்பிடுபவர்களுக்கு மயிர் கறுத்து வளரும்; பசி யின்மை நீங்கும்; மலம் தாராளமாய்க் கழியும்; தாது விருத்தி உண்டாகும்; பரிசுத்த இரத்தம் பெருகும்; நல்ல பசியுண்டாகும்; முகம் வசீகரமாய்க் காணும்; மேனி சிவக்கும்; நரம்புகள் தடிக்கும்; பசி அதிகரிக்கும். இம் மருந்தைச் சாப்பிட்டவர்கள் வீரர்களாகவும், பலசாலிகளாகவும், இரத்த சுத்தியும், இரத்தப் பெருக்கும் பெற்று பித்த சோகை, பித்தபாண்டு, ஊதுகாமாலை, எலும்புருக்கி முதலிய நோய் நீங்கப் பெறுவார்கள்.

இம் மருந்தால் மலமும் தாராளமாய்க் கழியும். இம் மருந்தைச் சாப்பிட்டவர்கள் பயில்வான்களாவார்கள். திடகாத்திர புத்திரர் களைப் பெறுவார்கள்; இன்பத்தையும் அடைவார்கள்.

இம் மருந்தைப் பால்யர் முதல் வயோதிகர் வரை ஆண் பெண் இரு பாலர்களும் எந்தக் காலத்திலும் சஞ்சீவியைப்போல் உபயோகித்து வரலாம்.

இம் மருந்தை ஒரு மாதம் சாப்பிட்டால் பலசாலிகளான புத்திரர்களைப் பெறலாம் புத்திர சந்தானம் உண்டாவதற்கு இம் மருந்தை ஆண் பெண் இருபாலர்களும் சாப்பிட வேண்டும்.

**புட்டி 1-க்கு விலை ரூபா 1—4—0.**

## கர்ணபிந்து

சகலவிதமான காது நோய்களுக்கும் இலேசாக அனல் காட்டி காதில் 3 துளி விட்டு, பஞ்சு வைக்கவும். மருந்து உபயோகிக்கும் போது, காதில் சீழ்வடிந்தால் சுத்தம் செய்த பிறகு உபயோகிக்கவும்.

தீரும் வியாதிகள்:—காது குத்தல், சீழ்வடிதல், ஆராத இரணங்களுக்கு முக்கியமானது.

**புட்டி 1-க்கு விலை அணு 8.**

# கார்டோலின்

## (ஆஸ்தமாவுக்கு அரிய ஔடதம்)

அநேக மருந்துகளால் தீராதேனக் கைவிட்ட நோயைத் தீர்த்திருக்கிறது. ஈளை இருமல், சுவாசகாசம், காச இருமல், மந்தாரகாசம் முதலிய நோய்களுக்குச் சிறந்த மருந்து.

மக்கள் சுவாசக் குழாயிலுண்டாகும் வீக்கத்தினாலும், இரணத்தாலும், சுவாசம் விடுவதற்கு ஆயாசப்பட்டும், இழுப்பு இருமலினால் துன்பப்பட்டும் வாடி வருந்துகிறார்கள். ஆங்கிலர்கள் இவ்வியாதியை இரண்டு விதமாகக் கொள்கின்றார்கள். அவையாவையெனில் பிரான்கயடிஸ், ஆஸ்தமா என்பவையாம். இந்தியர்கள் இதை எட்டுவிதமாகப் பிரிக்கிறார்கள். ஈளை இருமல், காச இருமல், சுவாசகாசம், மந்தாரகாசம் என்பனவாகிய பெயர்களால் நோயைக் கணிக்கின்றார்கள். இந்நோயானது மழைக் காலங்களில் பெரும்பான்மையும், துன்பத்தை உண்டுபண்ணுகின்றது. சிற்சிலருக்கு அதிக வெப்பமான காலத்திலும் துன்பம் தருகின்றது.

இந்த நோயால் துன்பமடைவோர்கள் எத்தனையோவிதமான மருந்துகளை சாப்பிட்டும் நோய் நிவர்த்தி ஆகாமையால் மருந்துகளில் நம்பிக்கை இழக்கின்றார்கள்.

வைத்தியர்கள் தங்களால் இயன்ற மருந்துகளை உபயோகித்துப் பார்த்தும் குணமடையாமையைக் கண்டு இந்நோயானது கர்மத்தால் வந்ததெனக் கூறிவிடுகின்றார்கள்.

இத்தகையர்களின் மனதை மாற்றுவான் வேண்டியே நமது கார்டோலின் என்னும் மருந்து வெளிவந்திருக்கிறது. இம்மருந்தால் சுமார் 30, 40 வருடங்களாகக் கஷ்டப்பட்டிருந்த காசநோய் இருந்த அநேகர் சுகப்பட்டிருக்கின்றனர். அஸ்தமா இருமலானது எந்த நிலைமையில் இருந்தாலும் இம் மருந்தானது குணப்படுத்திவிடும். ஆஸ்தமா என்னும் சுவாச ரோகத்தால் துன்பப்படுபவர்கள் அவநம்பிக்கையன்றி இம் மருந்தை வாங்கி உபயோகித்துப் பாருங்கள்.

---

அன்புள்ள, டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு, தாங்கள் எனது குமாரனுக்கு ஏற்பட்டிருந்த அஸ்தமா வியாதிக்குக் கொடுத்த கார்டோலினால் என்னும் மருந்தை உபயோகித்ததிலிருந்து இழுப்பு இருமல் நின்றுவிட்டது. இப்பொழுது என்னுடைய மகன் சுகமா இருக்கின்றான்.

சென்னை பெரியமேட்டு கண்டிராக்டர் நா. கணபதி முதலியார்.

**இதன் விலை புட்டி 1-க்கு ரூபா 10.**

# காஸ்டோலின்

## (இது சர்வ படையையும் சம்மரிக்கும்)



சரீரத்தில் இடுப்பிலும், கழுத்துப் பட்டைகளிலும், தடையின் இடுக்கிலும், சாமான் கூட்டின் மேலும் படரும் படையானது இரவு பகலாக மானுபிமானம் விட்டு பலர் முன்னிலையில் சாமான் கூட்டில் கையை வைத்து நமை நீங்க சொரிந்து கொள்ளச் செய்கின்றது.

சிலர்க்கு முகத்திலும் கழுத்திலும் படர்ந்து விகாரத்தை உண்டு பண்ணுகின்றது. சிற்சிலருக்கு முழங்காலுக்கு கீழ், கணுக்காலுக்குமேல் படர்ந்து எந்நேரமும் நீர் கசிந்து கொண்டு இரணமாய் இருக்கின்றது.

இத்தகைய வியாதிக்கு இங்கிலீஷ் மருந்தில் ஆசிட்சாலிசிலிக் என்னும் பவுடரை மெதிலேடட் ஸ்பிரிட் என்னும் திரவத்துடன் கலந்து பலர் படை மருந்து என்று விற்கின்றார்கள். இம் மருந்தை வாங்கி பூசினவுடன் எரிச்சல் கொடுத்து உதிர்வதுபோல் காணப்பட்டு மீண்டும் திரும்பி விடுகின்றது. எரிச்சலும் பொறுப்பது கஷ்டமாகின்றது. சிலருக்குக் குணமே கிடைப்பதில்லை. ஆதலால் அத்தகைய மருந்தைக் காட்டிலும் தமிழ் மருந்தே வேருடன் களையக் கூடியது. ஆகையால் எங்களால் தயார் செய்யப்பட்டுள்ள காஸ்டோலின் என்னும் விளக்கெண்ணெயினால் தயார் செய்த படை மருந்தை உபயோகித்துப் பாருங்கள்.

எவ்வித படைகளையும் நொடியில் போக்கும் தன்மை வாய்ந்தது. உபயோகிக்கும்போது எரிச்சல் உண்டாகாது. வேஷ்டியில் கறை பிடிக்காது. எத்தனை வருஷமாக இருக்கப்பட்ட இரணமானாலும் போக்கக் கூடியது.

இதனை உபயோகித்தவர்கள் உங்களுக்கு இதன் பெருமையைச் சொல்லுவார்கள்.

வேண்டுவோர் 6 அணா தபால் தலை அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும்.

## நற்சாட்சி பத்திரம்

வைத்திய ஆசிரியர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

என் குடும்பத்தில் ஒருவருக்கு சரீரம் முழுதும் 'எச்சிற் றழும்பு'போல் ஒருவித படை உண்டாகி இருந்தது. அதற்கு வேண்டிய வைத்தியங்கள் செய்தோம். ஒன்றும் குணப்பட்டு வரவில்லை. இறுதியில் அவர் கஷ்டம் தாங்க முடியாது பாயும் படுக்கையுமானார்.

இப்படி யிருக்கையில் சென்னை சென்று வந்த என் நண்ப ரொருவர் தன்னிடம் தங்களால் தயாரிக்கப்பட்ட 'காஸ்டோலின்' என்ற படை மருந்து இருக்கிறதென்றும், ஒரு சமயம் இந்த மருந் தினல் மேற் கூறப்பட்டவரின் படை வியாதி நீங்கினலும் நீங்கக் கூடும் என்றும் கூறி என்னிடம் மேற்படி மருந்தைக் கொடுத்தார்.

அதைப் பாயும் படுக்கையுமாகக் கிடந்த படை வியாதியினருக்கு நான் அதில் கூறிய முறைப்படி போட்டதில் மிகுந்த ஆச்சர்யமான குணத்தைக் கொடுத்தது. அவர் உங்களை வாழ்த்தாத நேரமில்லை. இப்போது அவருக்கு 3, 4, மாதங்களாக தேகத்தில் ஒருவித வியாதியும் இல்லாமல் இருந்து வருகிறது. நமது இந்தியர்கள் தங்களின் 'காஸ்டோலின்' மருந்தை வாங்கி உபயோகிப்பார்களா னல் எவ்வளவோ நன்மை யடைவார்கள். வேறு மருந்துகளுக்குப் பணத்தை வீணில் கொடுத்து தேகத்தையும் அனியாயமாகக் கெடுத்துக் கொள்வதினின்றும் காக்கப்படுவார்கள். தங்களின் 'காஸ்டோலின்' ஒரு சிறந்த ஔடதம் என்பதை மனமுழு உண்மை யுடன் கூறுகிறேன். தங்களின் வைத்தியம் சிறப்பதாக!

அன்புள்ள,

G. M. அலிஹுஸைன் M. H. A.,

கௌரவ காரியதரிசி, 'ஹுஸைனியா சங்கம்'

ஜெனரல் அட்வர்ட்டைசர், ஆர்டிகலிஸ்ட் நாகூர் 26–12–34.

---

ம-ா-ா-ஸ்ரீ டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

ஹெட்மாஸ்டர் D. S. ரங்கா ராவ் வணக்கமாய் எழுதிக் கொண்டது. இப்பவும் நான் இரண்டு வருஷகாலமாகத் தங்கள் மருந்த (காஸ்டோலின்) வரவழைத்து என் சிநேகிதர்கள் படை சௌக்கியமா யிருப்பதைக் காண எனக்கு கணக்கில்லாத ஆனந்தம் ஏற்பட்டிருக்கிறதை இக்கடித மூலம் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். என் அநுபோகத்தில் இம்மருந்தை மிகவும் சிலாக்யமாய்க் கருதுகிறேன். எனக்குப் படை ஏற்பட்ட இடத்தின் அடையாளமே இல்லாமல் வேறு தோல் வளர்ந்தது. ஆகையால் தாங்கள் தயவு செய்து இந்த லெட்டர் கண்டவுடன் இதில் அனுப் பிய 7 அணு ஸ்டாம்பைப் பெற்றுக்கொண்டு உடனே இன்னு மொரு காஸ்டோலின் மருந்து பாட்டிலை அடியில் கண்ட விலா சத்திற்கு அனுப்பக் கோருகிறேன்.

இப்படிக்கு,

D. S. ரங்கா ராவ், ஹெட்மாஸ்டர்.

பசுபதிபாளையம், எலிமெண்டரி ஸ்கூல்,

மேலபாளையம் போஸ்டு, வையா கரூர்

# கூழ்ப்பாண்ட லேகியம்

இந்த லேகியத்தில் ஒரு கெச்சக்காய் அளவு காலை மாலைகளில் சாப்பிட பலம் தரும், மலம் தள்ளும், சரீர உஷ்ணம் நீங்கும். மலச் சிக்கல் நீங்குவதும் கணச்சூடு விலகுவதும் இம்மருந்தின் முக்கிய குணம். எலும்புருக்கி நோயால் இளைக்கும் தேகத்தைப் பலப்படுத் தும். குழந்தைகள் முதல் யாவரும் சாப்பிடலாம். யாதொரு பத்தியமும் இல்லை. எண்ணெய் ஸ்நானம் செய்யும் தினம் மருந்தை நிறுத்த வேண்டும். சுரம், தலைவலி யிருக்கும் காலத்தில் மருந்து சாப்பிடலாகாது. மருந்து குளிர்ச்சியைத் தரக்கூடியது.

## சில அபிப்பிராயங்கள்

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

என்னுடைய பேத்திக்குக் கொடுத்த கூழ்ப்பாண்ட லேகியம் 6 மாதமாய்க் கொடுத்து வந்ததில் தேகம் மேனியும் சதையும் பிடித் திருக்கின்றது. இனி மீன் எண்ணெயை உபயோகிக்கவே மாட் டோம். இன்னும் 10 பவுன் கூழ்ப்பாண்ட லேகியம் அனுப்பவும். என்னுடைய குமாரன் வக்கீலுக்குப் படிப்பதால் அவனுக்கும் இதைக் கொடுத்து வருகிறேன். இதனால் சரீரத்தில் உஷ்ணம் ஏற் படாமலும், மலச்சிக்கலில்லாமலும், சாப்பிட வாய்க்கு ருசியாயும் இருப்பதால் அதிகமாய்ச் சாப்பிட்டு வருகிறான்.

எங்கள் குடும்பத்திற்காகக் கூழ்ப்பாண்ட லேகியத்தை ஒரு ஜாடி செய்து கொடுத்தால் நலமாய் இருக்கும்.

என்னுடைய ஜூனியர் மாயவரம் பார்த்தசாரதி ஐயங்காரும், இந்த லேகியத்தை அடிக்கடி கேட்டுக்கொண் டிருக்கிறபடியால் அவருக்காகக் கொஞ்சம் தயார் செய்யவும். இந்தக் காலத்துப் பையன்களுக்கு இது மிகவும் அவசியமானது.

R. சடகோபாச்சாரியார், B. A. B. L. ஐகோர்ட் வக்கீல்.

---

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

தங்களைப் பார்த்து வெகுநாளாய் விட்டது. நான் இளையாளை மணந்த பிறகு 'டனுக்கு' என்னும் ஊருக்கு ஜில்லா முனிசிப்பாக இருக்கிறேன். தங்கள் கூழ்ப்பாண்ட லேகியத்தினால்தான் என் குழந்தைபெருத்து நன்றாக பலத்து இருந்தது. இப்போது எனக்குக் கூழ்ப்பாண்ட லேகியம் 5 பவுன் வி. பி. யில் அனுப்ப வேண்டியது.

இப்படிக்கு,

C. ராஜகோபாலாசாரியார் B. A. B. L.

District Munsiff, Tanuku.

**ஒரு பவுன் புட்டி விலை ரூ. 2.**

# காங்க்ரீன் என்னும் இரண சஞ்சீவி

இம் மருந்தானது எல்லாவித இரணங்களையும், கட்டிகளையும் ஆற்றும். மதுமேக நோயால் பீடிக்கப்பட்டவர்களுக்குக் காணும் இராஜக் கட்டியானது எவ்வளவு அபாய நிலையில் இருந்தாலும் குணமாய் விடும். ஆஸ்பத்திரிகளில் பார்த்து தீராதென அனுப்பி விட்ட கேசுகளை ஆச்சரியகரமாய் குணம் செய்யும். அநேக ஆங்கில வைத்தியர்கள் இதை உபயோகிக்கின்றனர்.

ஆஸ்பத்திரிகளில் பெரிய டாக்டர்களாக இருக்கும் என் சகோதர வைத்தியர்களுக்குத் தெரிவிப்பது: உங்கள் ஆஸ்பத்திரிகளிலாவது அல்லது தனிப்பட்டாவது பார்க்கப்பட்ட ராஜகட்டிகள் (சைன்ஸ்) வைத்து (டையபடிக் கோமா) வந்து இனி இக்கேசு பிழைக்காது என்று நினைக்கும் சமயம் நீங்கள் கைவிட்ட சமயம் உங்கள் (இன்சொலின்) குணம் தராத காலத்திலாவது இதை உபயோகித்து உயிரைக் காப்பாற்றுங்கள். ஆஸ்பத்திரிகளில் ஆப்பரேஷன் செய்யாமல் இரணங்களை ஆற்றி விடுங்கள். உங்களுக்கு இதன் குணம் தெரிந்துக்கொள்ளும் வரையில் உங்களால் முடியாது என்றபோது இதை உபயோகித்துப் பாருங்கள். முக்கியமாய் ஜெனரல் ஆஸ்பத்திரி, ராயப்பேட்டை ஆஸ்பத்திரி, டிஸ்ட்ரிக்ட் ஆஸ்பத்திரிகளிலிருக்கும் டாக்டர்களுக்கும், இந்தியன் மெடிகல் ஸ்கூல் பிரின்சிபால் அவர்களுக்கும் வற்புறுத்தி மறுமுறையும் கேட்டுக் கொள்வதாவது உங்களால் முடியாது என்று எண்ணிய பிறகாவது எங்கள் இரண சஞ்சீவியை உபயோகித்துப் பாருங்கள்.

கண்டமாலை, அறையாப்புக் கட்டி இவைகளையும், எத்தகைய ராஜ கட்டிகளையும், புரைப் புண்களையும் ஆற்றிவிடும்.

இம்மருந்து சேர்த்துப்புண், சொரி சிரங்கு, முகத்தில் காணும் மோகப்பருவு இவைகளை நீக்கும்.

ஆராத மேகப்புண், மேகப்படை கட்டி இவைகளுக்குப் பூச இரணம் ஆறும். பவுத்திர வியாதிக்கு மேல் பூசினல் இரணம் ஆறிவிடும்.

## சில அபிப்பிராயங்கள்

சென்னை கந்தப்ப முதலித் தெருவு, நெ. 21, P. சோமசுந்திர செட்டியார் தெரிவிப்பது:—நான் என் தாயாருக்கு ஏற்பட்டிருந்த ராஜகட்டிக்காக டாக்டர் மல்லய்யாவிடமும், ரங்காசாரியாரிடமும் இராயப்பேட்டை ஆஸ்பத்திரியிலும் காட்டி குணமடையாமல் சாகும் நிலையில் இருந்தபோது துரைசாமி ஐயங்கார் சொல்லியபடி

தங்களிடம் வந்து மருந்து கேட்டேன். தாங்கள் கொடுத்த இரண சஞ்சீவியால் முள்ளந்தண்டிலும் மார்பிலும் வயிற்றிலும் இருந்த கட்டிகள் சுகமாய்விட்டன. பிறகு இன்பசாரம் சாப்பிட்டதில் இரத்தம் விருத்தியடைந்தது. நீரில் சர்க்கரை அதிகமாய் இருந்ததும் மறைந்து விட்டது. 12—12—33.

---

தே. வ. இ. சோமசுந்திரம் செட்டியார், கல்லல். தெரிவிப்பது:—

எனக்கு முதுகில் ஏற்பட்டிருந்த ராஜகட்டிகளை ஒரு தரம் திருப்பத்தூர் ஆஸ்பத்திரியில் ஆப்பரேஷன் செய்து ஒரு வருடமாய் ஆராமல் நீர் வந்துகொண்டே இருந்ததும் தவிர மேல்கொண்டு பல கட்டிகளும் முதுகு பூராவும் சல்லடைக் கண்கள் போல் உண்டாய் விட்டன. பாதை பொறுக்க முடியாமல் கஷ்டப்பட்டிருக்கும் சமயத்தில் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்கள் கல்லல் ஆ. மு. ஆ. வீட்டுக்கு வந்தபோது காண்பித்தேன். அவர் பட்டணம் வந்தால் பூரணமாய்க் குணப்படுத்தலாம் என்று சொல்லி இரண சஞ்சீவியைப் போடக் கொடுத்தார். கொஞ்சம் வலி குறைவாயிருந்தது. அதுசமயம் ஆ. மு. ஆ. முருகப்ப செட்டியார் அவர்கள் இந்தக் கேசை உங்களால் குணப்படுத்த முடியுமானல் பட்டணம் அனுப்பலாம், இல்லாவிடில் திருப்பத்தூரிலேயே பார்க்கலாம், என் மகன் இந்த வியாதியால் இறந்து போனன் என்று சொன்னதைக் கேட்டபின் உறுதி சொன்னதின் மேல் நான் பட்டணம் வந்து ஒரு மாதம் மருந்தைப் போட்டதில் சகல கட்டிகளும் ஆச்சரியமான வகையில் இரண சஞ்சீவியால் குணமாய் விட்டது. என்னிடம் ஒரு டஜன் இரண சஞ்சீவியை வைத்துக்கொண்டு ஏழைகளுக்குக் கொடுத்து சுகப்படுத்தி வருகிறேன். இரண சஞ்சீவியை ஒவ்வொரு வீட்டிலும் கையிருப்பாக வைத்திருப்பது அவசியம். 10—9—33.

குறிப்பு:—இன்னும் கணக்கற்ற இரணங்களும் இராஜகட்டிகளும் குணமான நற்சாட்சி பத்திரங்கள் எங்களிடம் இருப்பினும் இடமில்லாமையால் இரண்டு மாத்திரம் இங்கு குறிப்பிட்டோம்.

Rh
MN31,N30TA
N39.6.2

**விலை புட்டி 1-க்கு ரூபா 1.**

எமது விலாசம்:

**டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,**
**31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.**

207674

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் இயற்றிய

அரிய நூல்கள்

# அனுபவ வைத்திய நூல்

(2 - ஆம் பதிப்பு)

இப் புத்தகம் ஒவ்வொரு வீட்டிலும் தவறாது இருக்க வேண்டியது இன்றியமையாததாகும். இந் நூல் வீட்டில் இருப்பது குடும்ப வைத்தியர் ஒருவர் உங்கள் இல்லத்தில் கூடவே யிருப்பதுபோலாகும். நோய் உண்டான காலத்தில் நீங்களே இந் நூலின் உதவியைக்கொண்டு சிகிச்சை செய்து கொள்ளலாம். இந் நூலில் எல்லா நோய்களின் விவரமும், அவைகள் உண்டாவதற்கு முன் தோன்றும் குறிகளும், அவைகளைப் போக்கும் சுலபமான வழிகளும், அதற்குரிய எளிய மருந்து வகைகளும் காணக் கிடைக்கும்.

இதன் விலை ரூபா 2. தபால் சார்ஜ் வேறு.

# ஜீவ இரகசியம்

இதில் டாக்டர். முதலியார் அவர்கள் நீண்ட காலமாக அனேக சாதுக்களிடத்திலும், யோகிகளிடத்திலும், அறிஞர்களிடத்திலும் பழகி அவர்களிடமிருந்து அறிந்து கொண்ட விஷயங்களில் தமது அறிவிற்கும் அனுபவத்திற்கும் உண்மை யெனப் பட்ட பல அரிய பொருள்களை ஆராய்ந்திருக்கிறார்கள்.

இந் நூலில் உயிர் வாழ்வதற்கு மிகவும் அவசியமான சுகத்தை —தேகம் சுகம், மனோ சுகம், ஆன்ம சுகம் என மூன்று பிரிவாக வகுத்து ஒவ்வொரு பிரிவைப் பற்றியும் விரிவுபடுத்தி எழுதப்பட்டிருக்கிறது. மற்றும் இப் புத்தகத்தில் சகல மதங்களில் உற்பத்தியைப் பற்றியும், அவற்றின் கருத்துக்களைப் பற்றியும் அறியலாம்.

இந்நூலை ஒவ்வொருவரும் படித்தறிய வேண்டியது மிகமிக அவசியமாகும்.

இதன் விலை ரூபா 1. தபால் சார்ஜ் வேறு.

'தமிழரசு' புத்தகாலயம்,

31, வைத்தியநாத முதலி தெரு, சென்னை.

TAMIL ARASU RGD. M. NO. 2559.

வெளி வந்துவிட்டது! வெளி வந்துவிட்டது!!

எது? எது?

# LUK

## பீடி

ரிஜிஸ்டர்ட்

உலகில் எத்தனையோ பீடிகள் இருந்தாலும் அவற்றுள் எங்கள் பீடி தலை சிறந்தது என்பதற்கு ஒருமுறை வாங்கி உபயோகித்தால் தெரியும். இந்த பீடியை உபயோகித்தால் அதிக பசியை உண்டாக்கும், இருமலைப் போக்கும், சளியைக் கரைக்கும், போதுமான காரம் இருக்கும், கசப்பு இராது, சிகரெட்டுக்குள்ள மணம் இருக்கும் இதைப்போல் வேறு எந்த பீடியும் இருக்காது. பீடியைப் பிடித்தபின் மற்ற பீடிகளைப்போல் வாயில் ஏற்படும் கெட்ட வாசனை (புகையிலை வாசனை) இதில் இராது. 24 பீடிகள் ஒரு அழகிய பெட்டியில் பாக் செய்து விற்கப்படுகிறது. இந்த பீடி சட்டைப் பையில் வைத்தால் புகையிலைத் தூள் கொட்டி சொக்காய் கரை பிடித்துப் போவதைத் தடுத்து நாகரீக முறையில் சொக்காய்ப் பையில் வைத்துக்கொள்ள அனுகூலமாய் இருக்கும். இதனை லக்ஷக் கணக்கில் மக்கள் உபயோகித்து கொண்டாடுகிறார்கள். வேண்டுவோர் மொத்த விலை விபரம் எழுதி தெரிந்து கொள்ளவும். ஏஜெண்டுகள் தேவை.

விலாசம்:—

லக் பீடி ஆபீஸ்,

**LUK TOBACCO CO.,**

30, VAITHIYANATHA MUDALI STREET, MADRAS.

தந்தி விலாசம்:—வாசனை, சென்னை

Edited, Printed and Publish[illegible]
at Meenatchi Press, 3[illegible]